திருக்கோயில்

“என் கடன் பணி செய்து கிடப்பதே”

வில்லேந்திய வேலவர்

மாலை 12] சௌமிய-கார்த்திகை-டிசம்பர் 1969 [மணி 3

தமிழ் நாடு அரசின் அறநிலைய



காஞ்சிபுரத்தில், காஞ்சிகாமகோடிபீடம் ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களது திருவுளப்பாங்கின்படி, அண்மையில் நடைபெற்ற ஆகம - சிற்ப - வியாச - பாரத - சதஸ் விழாவின்போது, புதுப்பெரியவாள் ஸ்ரீமத் ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்களுடன், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், B.A., B.L., I.A.S., அவர்கள், சதசின் கண்காட்சிச் சாலையைப் பார்வையிடுதல்.

பொருளடக்கம்

1. இராசராசன் ஆட்சியும் மாட்சியும்
2. கோயில்களும், சமுதாய நலனும்
3. மணவாளமாமுனிகள் வைபவம்
4. இறைவழிபாடும், கோயில் தூய்மையும்
5. காஞ்சியில் தெய்விகக் கலைவிழா
6. மகாபாரதம்
7. அத்துவைத தத்துவ ஆசாரியர்கள்
8. மதுரகவிக்கோர் அமுதகவி
9. தன்மையறிவார் இல்லை
10. திருக்குறளில் திருவடி.
11. திருக்குறளில் அருள் நெறி

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்



மாலை 12] சௌமிய — கார்த்திகை — டிசம்பர், 1969 [மணி 3

இராசராசன் ஆட்சியும் மாட்சியும்.

அருமையாம் தமிழ்ப்பண் பாட்டின்
அற்புதச் சின்னம் ஆகத்,
திருமுறை கண்ட சோழன்
சிறந்தநல் இராச ராசன்,
பெருமையாம் கலைகள் போற்றிப்
பெருவுடையார் கோயில் கண்டான்;
இருநிலத்து இணையில் லாத
அவன்புகழ் இனிது வாழ்க!

— ந.ரா. முருகவேள்.

முன்னுரை :

இராசராசன், தமிழ்நாட்டில் அரசு செலுத்திய எண்ணற்ற பல அரசர்கள் எல்லோரிலும் தலைசிறந்த ஒரு பேரரசனாவான். அவனுக்கு நிகரான ஒரு சிறந்த பேரரசன் வேறு எவனும் இருந்திருக்க முடியும் என்று தோன்றவில்லை. 'இனி யார் உளரோ? முன்னும் இல்லை!' என்னும் நிலையில், அவன் ஒப்புயர்வற்ற பேரரசனாகச் சிறந்து விளங்கினான். வரலாற்றில் உருவாகியவர் என்றும், வரலாற்றை உருவாக்கியவர் என்றும் (Creatures of History and Creators of History), அரசர்கள் அனைவரையும் இருவகையாகப் பிரிக்கலாம். அவர்களில் இராசராசன், ஒரு புதிய மாபெரும் வரலாற்றையே உருவாக்கிய மாட்சிமைக்கு உரியவனாவான்.

எழில்வளர் ஊழி :

உரோமநாட்டு வரலாற்றில் அகஸ்டரின் காலம் (Augustan Age) என்றும், இந்திய நாட்டு வரலாற்றில் குப்தர்களின் பொற்காலம் என்றும், புகழ்ந்து சொல்லப்படுவதற்கும் மேலாக, இராசராசன் தமிழ் நாட்டில் அரசு செலுத்திய இனிய காலம், ஈடும் எடுப்

[தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் நிகழ்ந்த இராசராச சோழனின் சதயப் பெருநாள் விழாவில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார் B.A,B.L, I.A.S., அவர்கள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. (20-10-1969.)

—ஆசிரியர்.]

Q2,211, N58

பும் அற்று விளங்கியிருந்தது எனலாம். இராச ராசனின் கல்வெட்டுகளில் 'எழில்வளர் ஊழி' எனக் குறிப்பிடப் பெறுதல், இவ் வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். இராச ராசனின் ஆட்சிக் காலம் இனியதோர் எழில் வளர் ஊழியே ஆகும் என்பதில் ஐயம் இல்லை.

158574

தன்னிகரற்ற சான்றோன் :

இராசராசன், இரண்டாம் பராந்தகன் (கி பி. 957-970) என்னும் சுந்தர சோழனின் மைந்தனாகத் தோன்றியவன். சுந்தரசோழர் 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' எனப் பாராட்டப்பெறும் வீரமுடையவர். திரு வியலூர்ச் சிவயோகநாதர் கோயிலுக்குச் சிறந்த திருப்பணிகள் செய்தவர். இவர் பழை யாறையைத் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்தி வந்தார்.

'பழையாறை நகர்ச் சுந்தரச்சோழரை யாவர் ஒப்பார்கள் இத்தொல் நிலத்தே' எனவரும் வீரசோழிய மேற்கோட் செய்யுளால், இவர் தம் சிறப்பை யாவரும் இனிது உணரலாம். இராசராசனின் தாய் வானவன்மாதேவி என்பவர் ஆவர். தன் கணவன் உயிர் நீத்த போது, தானும் உடன் கட்டை ஏறி உயிர் நீத்த கற்புக்கரசி ஆகிய உத்தமி இவள்! இவ்விரு தந்தை தாயருக்கும் மைந்தனாகப் பிறந்தவன் என்பதே, இராசராசனின் சிறப்பை விளக்கப் போதியதாகும்.

இராசராசனின் உடன் பிறந்த தமையன், ஆதித்த கரிகாலன் (கி. பி. 962-970). இவன் 'வீரபாண்டியன் தலைகொண்டவன்' என்று சிறப்பிக்கப் பெறுவான். இவனது காலத் திலேயே நம்பியாண்டார் நம்பிகள் வாழ்ந்திருந் தார் என வரலாற்று ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். இராசராசனின் பெரிய பாட்டனர் கண்டராதித்த சோழர் (கி. பி. 953-957). இவர் சிவபக்தியிற் சிறந்து ஞான நெறியில் நின்று ஒழுகியவர் ஆதலின், இவரைச் 'சிவ ஞான கண்டராதித்தர்' எனக் கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறும். ஒன்பதாம் திருமுறை ஆகிய திருவிசைப்பாவில் இவர் பாடிய பாடல்கள் சேர்த்துத் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

இராசராசனின் பெரிய பாட்டியாரும், அவனை இளமையில் வளர்த்து ஒழுக்கப் பண் பாடுகளில் விழுத்தக்கவனாக விளங்குமாறு செய்தவரும், சிவஞான கண்டராதித்தரின் மனைவியாராகிய செம்பியன்மாதேவியார் என்னும் சீலம் மிக்க சிறந்த அம்மையார் ஆவர். அவ்வம்மையாரது பக்தியுணர்வின் சிறப்பும், பண்பாட்டின் மேன்மையும், மிகவும் வியந்து போற்றத் தக்கனவாகும். திருநல்லம் (கோனேரிராசபுரம்), திருமுதுகுன்றம், திருக் கோடிகா, திருவாரூர் அரனெறி, திருத்துருத்தி, ஆநாங்கூர், திருமணஞ்சேரி, திருவக்கரை, நாகப்பட்டினத்திற்கு அணித்துள்ள செம்பியன் மாதேவித் திருக்கயிலாயமுடையார் கோயில் என்னும் பத்துத் தலங்களில், மிகச் சிறந்த விழுமிய திருப்பணிகளைச் செய்துள்ளவர், இராசராசனுக்குப் பெரிய பாட்டியாராய் அவனைப் பேணி வளர்த்து ஆளாக்கிய, இச் செம்பியன் மாதேவியாரே ஆவர்!

இராசராசனின் உடன் பிறந்த தமக்கையார் குந்தவைப் பிராட்டியார் என்பவர். இவரும் மிகச்சிறந்த பண்பு நலங்கள் வாய்ந்து, தமது தம்பியாகிய இராசராசனைத் தமது கண்ணின் மணியெனப் பெரிதும் போற்றி வளர்த்த வராவர். வல்லவரையர் வந்தியத்தேவர் என் னும் வீரப் பெருமகனுக்கு வாழ்க்கைத் துணை யாக அமைந்த இவர், தஞ்சைப் பெரிய கோயிலில் தமது தந்தையாகிய பராந்தகச் சுந்தர சோழர்க்கும், தாயாராகிய வானவன் மாதேவியார்க்கும், திருவுருவப் படிமங்கள் எழுந் தருளச் செய்வித்தார். மேலும், தம் தந்தை யாரின் நினைவாகத் தஞ்சையில் 'சுந்தரசோழ விண்ணகர் ஆதுலர்சாலை' (Hospital) ஒன்று நிறுவி, மருத்துவக் காணியாக அதற்கு நில தானங்கள் பல அளித்துள்ளார்.

இராசராசனின் பட்டத்தரசியாக விளங்கிய வள் உலகமாதேவி என்னும் பெயரினள். இவளுக்குத் 'தந்தசக்தி விடங்கியார்' எனவும் பெயர் வழங்கும். திருவையாற்றில் அறப்பெருஞ் செல்வி (தரும சம்வர்த்தனி) ஆகிய அம்பிகை யின் கோயிலை 'உலகமாதேவீச்சரம்' என்னும் பெயரால் திருப்பணி செய்து எடுப் பித்தவள். இப்பெருமாட்டியே ஆவள். கங்கை

N69. 12.3

137

கொண்ட சோழன் என்னும் புகழ் பெற்ற இராசேந்திர சோழன், இராசராசனின் இனிய தவமைந்தன் ஆவன். மாதேவடிகள் சந்திர மவுலி, குந்தவைப் பிராட்டி என்னும் இருவரும் இராசராசனின் அருந்தவப் புதல்வியர் ஆவர். இவ்வாற்றால் இராசராசன் தோன்றிய அரச குடும்பத்தின் சீரும் சிறப்பும் இணைய எனத் தெளிவதுடன், அவனது தன்னிகரற்ற சான்றாண்மை நலங்களையும், நாம் நன்கினிது உணரலாம்.

இணையற்ற பெருவீரன் :

இராசராசன், சோழப் பேரரசை நிறுவி வளர்த்துப் பெருக்குவதற்காக, எத்தனையோ பல பெரும் போர்களில் ஈடுபட்ட இணையற்ற பெருவீரன். அவன் காந்தளூர்ச்சாலைக் கலம் அறுத்தருளினன்; வேங்கை நாட்டை வென்றான்; கங்க நாட்டைக் கைப்பற்றினன்; தடிகை பாடியையும் நுளம்பபாடியையும் தன்வயப் படுத்தினன்; குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் ஆகியவற்றை வென்று, தன் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டான்; ஈழ மண்டலத்தைச் சோழமண்டலத்திற்கு அடிமை யாக்கினன்; முரட்டு எழிற் சிங்களரைச் செருக்கு அடக்கினன்; இரட்டபாடி ஏழரை இலக்கமும் தன் திண்டிறல் தண்டால் வென்றி கொண்டான். அவனது ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டின் எல்லை பெரிதும் விரிவடைந்து வளர்ந்தது. இதனால் அவனது இணையற்ற வீரத்தின் சிறப்பை இனிது உணரலாம்.

சிறப்புப் பெயர்கள் :

இராசராசன், தான் செய்த போர்களில் எல்லாம் தோல்வி என்பதனைச் சிறிதும் அறியாது எங்கும் எப்போதும் வெற்றியே பெற்று வந்தான். அதனால் அவனுக்குச் சயங்கொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயரும் உண்டாயிற்று. சேர அரசனின் செருக்கை அழித்துக் கேரளாந்தகன் எனவும், பாண்டிய மன்னரின் படைகளை அழித்துப் பாண்டியகுலாசனி எனவும், அவன் புகழ்பெற்றான். இங்ஙனம் சேரர் பாண்டியர் சோழர் என்னும் மூவேந்தர்களின் முடி உரிமையையும் தான் ஒருவனே பெற்றுச் சிறப்புற்றதனால், மும்முடிச் சோழன் என்னும் பெயர் இவனுக்கு வழங்குவதாயிற்று. க்ஷத்திரிய சிகாமணி என்னும் நிலையில், கல்வி கேள்விகளிலும் கலை உணர்வுகளிலும் மேம்பட்டு, அவற்றைப் போற்றி வளர்ப்பதில் இவன் நித்தவினோதன் எனப் புகழ் பெற்று விளங்கினன்.

ஆட்சித்திறன் :

(1) அரசர்களிற் பலர் உலக வரலாற்றில் வெற்றி வீரர்கள் (Great Conquerors) எனச் சிறந்து விளங்கியிருந்தனர். ஆனால் அவர்களிற் பலர் நல்ல ஆட்சித்திறன் உடையவர்களாய் (Able Administrators) இல்லாமல், சீரழிந்து சிதைந்தொழிந்ததைக்காண்கின்றோம். அங்ஙனமின்றி, நம் இராசராசன், வெற்றிப் பெருவீரனாகவும், ஆட்சித்திறன் மிக்கவனாகவும் ஒருங்கே ஒப்புயர்வற்றுச் சிறந்தோங்கித் திகழ்ந்தான். அவனது ஆட்சி நல்லாட்சியாகவும் வல்லாட்சியாகவும் ஒருசேரத் திகழ்ந்தோங்கியது. அவன் தனது ஆட்சிக் காலத்தில் முதன் முதலாகச் சோழநாட்டில் உள்ள நன்செய் புன்செய் நிலங்களையும் காடுகளையும் எல்லாம் அளந்து கணக்கெடுக்கும்படி கட்டளை இட்டான். அதற்காகச் "சேனாதிபதிகுரவன் உலகளந்தானை இராசராச மாராயன்" என்னும் உயர் அலுவலாளனை நியமித்தான். கி. பி. 1001-ஆம் ஆண்டில் சோழநாடு முழுவதும் முற்றிலும் திருத்தமாகச் செவ்வனே அளந்து கணக்கெடுக்கப்பெற்றது. நிலத்தின் எத்துணைச் சிறுபகுதியும் விடாமல் நுட்பமாக அளக்கப் பெற்றது என்பது, "இறையிலி நீங்கும் நிலம் முக்காலே இரண்டு மாகாணி அரைக்காணி முந்திரிகைக்கீழ், அரையே இரண்டுமா முக்காணிக்கீழ் முக்காலே நான்குமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவினால் இறை கட்டின காணிக்கடன்" எனவரும் கல்வெட்டுப் பகுதியினால் நன்கு விளங்கும். விளைநிலங்களுக்கு மட்டுமே வரிவிதிக்குமாறு இராசராசன் ஆணையிட்டான். இதனால், நீதி நெறி சிறிதும் பிறழாத அவனது நேர்மைக்குணம் எவர்க்கும் இனிது புலனாகும். இது இராசராசனின் நல்லாட்சித்திறனுக்கு தனிமிகச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

(2) இங்ஙனமே இராசராசன் செய்த மற்றொரு செயலும், மிகவும் சிறப்பாகக் குறிப்பிடற்பாலது. இன்று நம் முன்னோர்களின் வரலாற்றை நாம் ஓரளவேனும் உணர்ந்து கொள்ள வரலாற்று ஆராய்ச்சிக்குத் துணை புரியும் கருவிகள் சிலவற்றுள், கோயிற் சுவர்களில் அரசர்களின் மரபுநெறியினையும், அருஞ்செயல்களையும், அருட்கொடைகளையும், பின்னுள்ளோர் அறிந்து கொள்ளும் வகையில், மெய்க்கீர்த்திகள் எனப்படும் ஒருவகைக் கவிதைநடைக் கல்வெட்டுக்களை, முதன்முதலாகச் செதுக்கி வைக்குமாறு செய்தவன்,இராசராசனே ஆவன். தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், இன்று நாம் சதயப் பெருநாள் விழாவை இங்ஙனம் மிகப் பெரும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கும். வேறுபிற வரலாற்றுச் செய்திகளைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கும் எல்லாம், இராசராசன் முதன் முதலாகச் செதுக்குமாறு செய்வித்த மெய்க்கீர்த்திகளே காரணமாகும்.

(3) இவ்வாறே இராசராசன் செய்த அரிய பெரிய சிறந்த தொண்டுகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டு நாம் பெரிதும் போற்றத்தகுவது, அவன் திருமுறைகளைக் கண்டெடுத்துப் பரப்பிய அருஞ்செயலாகும். ஒருசிலர் திருமுறை கண்டவன் இராசராசன் அல்லன் என்பர். ஆயினும், திருமுறைகண்ட புராணம், 'அலகில் புகழ் பெறும் இராசராச மன்னன் அபயகுலசேகரன்' தான், திருமுறைகளைக் கண்டெடுத்தான் எனக் கூறுகின்றது. நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு ஆதித்தகரிகாலன்தான் (கி.பி. 965-970), திருமுறைகளைக் கண்டெடுத்தான் என்பது உண்மையே ஆகலாம் எனினும், தன்னுடைய தமையனது தொண்டுகளுக்குத் தம்பியாகிய இராசராசன் பெரிதும் துணை புரிந்திருப்பான்; தமையன் விடுத்துச்சென்ற பணிகளைத் தான் எடுத்து மேலும் வளர்த்துப் பரப்பியிருக்கின்றான்; ஆதலின் திருமுறை கண்ட பெருமையில் இராசராசனுக்கும் பங்குண்டு என்பதில் சிறிதும் ஐயத்திற்கு இடமில்லை. இராசராசனின் ஆட்சித் திறனுக்கும், அறிவாற்றல் திறனுக்கும், அருங்கலைத் தொண்டினுக்கும், சிறந்த சமய நெறிப் பண்பாட்டிற்கும், பக்தி உணர்வு ஒழுக்கங்களுக்கும், திருமுறைகண்டு பரப்பிய செயல், நல்ல சிறந்த சான்றாகும்.

பண்பு நலங்கள்:

இராசராசன் உயரிய பண்பு நலன்களுக்கெல்லாம், ஓர் உறைவிடமாக விளங்கினான். தன் தாய் தந்தையர்களிடத்திலும் பாட்டனார் பாட்டியார் தமக்கையார் ஆகியோரிடத்திலும் மிக்க பேரன்பும் பெருமதிப்பும் வைத்து அவர்களைப் பெரிதும் போற்றி வந்தான். தன் பாட்டனார் ஆகிய அரிஞ்சயன் (957—970) நினைவாக, வடஆற்காடு மாவட்டத்தில் மேற்பாடி என்னும் இடத்தில், **அரிஞ்சயேச்சுரம்** என்னும் கோயில் எடுப்பித்தான். தனது தமக்கையாரின்மீது கொண்டிருந்த அன்பும்மதிப்பும் காரணமாக, தனது அருமை மகளுக்கும் **குந்தவை** என்றே பெயரிட்டான். தன் தாய் தந்தையரின் திருவுருவப் படிமங்களைத் தஞ்சைப் பெரிய கோயிலில் தமக்கையாரின் விருப்பத்தின்படி எழுந்தருளச் செய்வித்தான். தன் பெரிய பாட்டனாரையும், பெரிய பாட்டியாரையும் முறையே 'சிவஞான கண்டராதித்தர்' 'செம்பியன்மாதேவடிகள்' எனக் கல்வெட்டுக்களிற் புகழ்ந்து போற்றினான்.

தன் தமையனாகிய **ஆதித்த கரிகாலன்** (957—970) இறந்த பிறகு, அவனுக்குப் பின்னர் அரியணையைக் கைப்பற்றித் தானே ஆட்சி புரிந்திருக்கவல்ல ஆற்றல்கள் மிக்கவனாக இருந்திருந்தும், அங்ஙனம் செய்யாமல், கண்டராதித்தர் செம்பியன்மாதேவியார் ஆகிய இருவர் திறத்தும் தான் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் காரணமாக, அவர்களின் புதல்வனும் தனது சிறிய தந்தையும் ஆகிய **உத்தம சோழன்** ஆட்சிக்குரியவனாய் முடிசூடிக் கொள்ளும்படி இராசராசன் அன்புடன் விட்டுக் கொடுத்தான். "தன் சிறிய தந்தை ஆகிய உத்தம சோழனுக்கு (கி. பி. 970—985) நாட்டை ஆட்சி புரிவதில் விருப்பம் உள்ளவரையில், தான் மனத்தால்கூட அரசாட்சியை விரும்புவதில்லை'' என்று, இராசராசன் தன் குடிகளிடம் கூறினான் என்பது திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் அறியக் கிடக்கின்றது.

இங்ஙனம் தனது உரிமையினைத் தியாகவுணர்வுடன் விட்டுக்கொடுத்து, பதினைந்து ஆண்டுகள் (கி. பி. 970—985) அளவும் அமைதியாகக் காத்திருந்த இராசராசனின் பெருந்தகைமைப் பண்புநலன், உலக வரலாற்றிலேயே ஒப்புயர்

வற்றதாகும். அரச பதவியைக் கைப்பற்றுவதற்காக, எத்தனை எத்தனை நினைக்கொணுக் கொடிய அட்டூழியங்களெல்லாம் செய்யப்பட்டுள்ளன என்பதனை, உலக வரலாற்றேடுகளில் காணுங்கால்*, இராசராசனின் இணையற்ற பெரு மாட்சிமை இனிது புலனுகும்.

சிவபாத சேகரன்:

பற்பல போர்களில் வெற்றிமேல் வெற்றி பெற்று, நாட்டின் பரப்பளவை நனிபெருக்கி, இணையற்ற தனிப் பேரரசனுக விளங்கியிருந்தனன் ஆயினும், இராசராசன் எத்தகைய அகந்தையும், செருக்கும் அடையாமல் "வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமை தப்பித், தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்" பெற்று உயர்ந்துசிறந்து ஒளிர்ந்திருந்தமை, நினைத்தொறும் வியக்கத் தகுவதாகும். "அதிகாரம் கெடுக்கின்றது; எல்லையற்ற அதிகாரம்எல்லையின்றிக் கெடுக்கின்றது. பெரிய மனிதர்கள் அனைவரும் எப்போதும் கெட்டவர்களாகவே இருக்கின்றுர்கள்" (Power corrupts; Absolute power corrupts absolutely. Greatmen are always bad) என அறிஞர் ஒருவர் கூறியுள்ளது அனைவரும் அறிந்ததே. "செல்வம் எங்கே குவிகின்றதோ அங்கே மனிதர்கள் சீரழிகின்றுர்கள்" (Where wealth accumulates there men decay) என ஆலிவர் கோல்ட்ஸ்மித் பாடியிருக்கின்றுர்! 'அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க்கேனும், பெறலரும் திருப்பெற்ற பின் சிந்தனை பிறிதாம்' எனக் கம்பரும் குறிப்பிடுவர்.

உலக வரலாற்று நூல்களில் உரோமநாட்டு நீரோ (Nero), ஃபிரெஞ்சு நாட்டு பதினுலாம் லூயி (Louis XIV) மங்கோலியத்துச் செஞ்சிஸ்கான் (Chenchiskhan), துருக்கியத்துத் தாமர்லேன் (Tamerlane) முதலிய பற்பல தீயகொடுங்கோல் அரசர்களைப் பற்றிப் படிக்கின்றேம். அத்தகைய கொடுங்கோலர்களைப் போல் அல்லாமல், அறநெறி சிறிதும் பிறழாது இராசராசன் அரசோச்சிச் செங்கோல் செலுத்தி வந்தான். அறிவு திரு ஆற்றல் ஆகியவைகளிற் சிறந்து விளங்கியதுடன், நீதி நேர்மை பக்தி ஒழுக்கம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் இராசராசன் இணையற்றுத் திகழ்ந்திருந்தான். வெற்றிமேல் வெற்றி பெற்ற போதும், இறுமாப்புக் கொள்ளாமல், இவைகளெல்லாம் இறைவன் திருவருளால் பெற்றவையே என்று தெளிவுற எண்ணிச் சிந்தை நைந்து உருகினுன். இவ்வுண்மை, அவனது கல்வெட்டுக்களில் "சத்தியாசிரயனை எறிந்து போந்து ஸ்ரீபாத புஷ்பமாக அட்டின பொற்பூ" எனக் குறிப்பிட்டிருத்தல் கொண்டு செவ்விதின் தெளியப்படும். 'பெருக்கத்து வேண்டும் பணிதல்' எனத் திருவள்ளுவர் கூறியபடி மேன்மேற் பல வெற்றிகளைப் பெறுந்தோறும், இராசராசன் இறைவனின் திருவருளையே நினைந்து வியந்து பணிந்து நின்றுன்.

ஐப்பசிச் சதயமாகிய தன்னுடைய பிறந்த நாளில், பிறவியின் பயனைத் தான் பெறுவதற்காக, இறைவனுக்கு வழிபாடுகள் நிகழ்த்தத் தஞ்சை திருவையாறு முட்டம் திருவெண்காடு முதலிய இடங்களில் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தான். தில்லைக்கூத்தப் பெருமானிடத்திலும், திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானிடத்திலும் அவனுக்கு எல்லையில்லாத ஈடுபாடும் பக்தியும் இருந்தன. இராசராசனது பக்தியுணர்வு, சமயநெறி ஆர்வம் ஆகியவற்றின் விளைவாகவே, இப்பெரிய கோயில் எழுவதாயிற்று. 'சிவபாதசேகரன்' என்னும் சிறந்த பெயர், இராசராசனுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

இறையன்பின் திறம்:

இராசராசன் இப்பெரிய கோயிலுக்காக, மொத்தம் 41559 கழஞ்சு எடையுள்ள பொற்

---

* "Despot Succeeded despot, each rivalling each in cruelty. Claudius had his wife, Messalina, murdered; Nero, his mother, Agrippana; Commodus his Sister and his wife; CaraCalla, his brother.

Such gentle attentions appear to have been the rule in the smperial Families. To make up for this out of 50 emperors who occupied the throne in the first 3 centuries of the regime 37 died violent deaths- were poisnoed, beheaded, stabbed, had their throats cut, or Committed suicide. They were the victims of their relations, their wives, their mistresses, their soldiers or-themselves. The Roman Principate was to offer an inexhaustible supply of Subjeets for the tragic writers of future Centuries."

—Rene Sedillot,
The History of the World, p. 75

கலங்களை அளித்தான்; 10200 காசுகள் விலைமதிப்புள்ள அணிகலன்களை வழங்கினான்; 50650 கழஞ்சு நிறையுள்ள வெள்ளிக் கலன்களைக் கொடுத்தான். ஆண்டுதோறும் ஒரு லட்சத்துப் பதினாறாயிரம் (116000) கலம் நெல்லும், ஆயிரத்து நூறு காசுகளும் வருவாய் உள்ள கிராமங்கள் பலவற்றைத் தானமாக விடுத்தான். இவைகளினாலெல்லாம் அவனது சிறந்துயர்ந்த தெய்வபக்தியின் திறனை நாம் உணரலாம்.

இப்பெரிய கோயிலின் வளர்ச்சிக்காக அவன் மிகவும் நுனித்துணர்ந்து நினைத்துச் செய்துள்ள ஏற்பாடுகள் யாவும் மிகமிக வியக்கத் தக்கவை. இறைவனுக்கு ஆட்டும் திருமஞ்சன நீரில் இடுவதற்காகப் பெருஞ்சண்பக மொட்டு, ஏல அரிசி, இலாமிச்சம் ஆகியவற்றின் அளவையெல்லாம் வரையறுத்துக் குறிப்பிட்டு, அவன் ஏற்பாடுகள் செய்திருந்தான்.

இறைவனின் அமுதுபடிக்காகப் போனகப் பழவரிசி பூரிநெல் பருப்பு மிளகு நெய் கடுகு சீரகம் சர்க்கரை புளி தயிர் உப்பு வெற்றிலை பாக்கு சீதாரி விறகு முதலிய பலவற்றையும் குன்றவற வழங்குதற்கு ஏற்பாடுகள் புரிந்திருந்தான். நிசதம் கற்பூரம் குறைந்தது மூன்றுமா பயன்படுத்தப்படல் வேண்டுமென்று விதித்தான். பிள்ளையாருக்கு நிசதம் வாழைப்பழம் குறைந்தது நூற்று ஐம்பது (150) படைத்தல் வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளான். இவற்றினாலெல்லாம் இராசராசனுடைய இறையன்பின்திறம் எத்தகையது என்பது நமக்கு இனிது விளங்கும்.

பேருள்ளம்:

இராசராசன் பெருமனம் படைத்தவன்; அவனது உள்ளம் பரந்து விரிந்த பெருநோக்குடையது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பது அவனுக்கு இயல்பாகவே அமைந்திருந்தது. அவன் 'சிறியன சிந்திக்கத் தெரியாதவன்'! அதனாலேயே அவன் பெரிய கோயில், பெரிய விமானம், பெரிய பிராகாரம், பெரிய லிங்கம், பெரிய நந்தி என எல்லாவற்றையுமே பெரிய அளவில் அமைத்துப் பெருமகிழ்ச்சியுற்றான். இவற்றையெல்லாம் நோக்கும்போது பரந்துவிரிந்த அவனது பெரிய உள்ளத்தின் பெற்றியினை நினைந்து நினைந்து வியக்கின்றோம்.

ஏறத்தாழ 1000 ஆண்டுகளாக எத்துணையோ கோடிக்கணக்கான மக்கள் இப்பெரிய கோயிலைக் கண்டு வியந்து, இதனை எடுப்பித்தருளிய இராசராசனின் பேருள்ளத்தினைப் புகழ்ந்து பாராட்டிச் சென்றிருப்பர். இதனை நினைக்குங்கால், என்னுடைய உள்ளக் கண்ணுக்கு ஒரு கற்பனைக் காட்சி மின்னலிட்டுத் தோன்றுகின்றது.

கற்பனைக் காட்சி:

இக்கோயிலை நாம் கண்டு வியப்பதுபோல்வே, சிவநெறிப் பெருஞ்சான்றோராகிய சேக்கிழார் பெருமானும் வந்து கண்டு பார்த்து வியந்து மகிழ்ந்திருப்பார். இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை அரசாண்டான். சேக்கிழார் பெருமான், கி. பி. 1112 முதல் 1144 வரையில் அரசு செலுத்திய இரண்டாம் குலோத்துங்கனின் தலைமையமைச்சராக விளங்கியிருந்தார் என்பது வரலாறு. ஆதலின், அவர் இக்கோயிலை வந்து கண்டு வியந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. நாம் சேக்கிழார் பெருந்தகையைக் கண்டு மகிழும் வாய்ப்பைப் பெற்றிலோம். ஆயினும், அவர்கண்டு மகிழ்ந்த இக்கோயிலையும் விமானத்தையும் கண்டு மகிழ்கின்றோம் என்று எண்ணும்போது, நம் உள்ளம் இறும்பூது எய்துகின்றது.

கவிஞர்கள் தாம் காணும் காட்சிகளையும், தம் வாழ்வில் அமையும் நிகழ்ச்சிகளையும், எங்ஙனமேனும் தம் நூல்களிற் குறித்து வைப்பர் என்பது அனைவரும் அறிந்ததே. அம்முறையில் எண்ணும்போது, இத்தஞ்சை இராசராசேச்சுரத்தைக் கண்டு சேக்கிழார் எய்திய வியப்புணர்ச்சிகள், பெரியபுராணத்தில் எங்கேனும் அமைக்கப்பெற்றிருத்தல் கூடுமோ என்று, என் உள்ளத்தில் ஒருவகை ஆர்வ உணர்வு எழுகின்றது. ஒரு சில பெரிய புராணப் பாடல்கள், இப்பொழுது என் உணர்வுச் செவிகளில் முற்போந்து ஒலிக்கின்றன.

சேக்கிழார்:

இப்பெரிய கோயிலைக் கண்டு, இதனை அமைத்த இராசராசனின் பேருள்ளத்தினை, எண்ணி வியந்த சேக்கிழார், அவ்வியப்புணர்வினைப் பெரிய புராணத்தில் ஓரிடத்தில் சிறப்

புற இணைத்து இயைத்துக் குறிப்பிடுகின்றார். கயிலாய மலையைப்பற்றிப் பெரிய புராணத்தின் தொடக்கத்தில் பாடவேண்டிய இன்றியமையா மையும் இயைபும் அவருக்கு நேருகின்றன. அந் நிலையில் அவர் கயிலாய மலையையும், தட்சிண மேரு என்னும் இப்பெரிய கோயிலை அமைத்த இராசராசனின் பேருள்ளத்தினையும் இணைத்து எண்ணி, இரண்டிற்கும் இடையே பல பொருத் தங்களும் ஒப்புமைகளும் காண்கின்றார்.

கயிலாயமலை அளப்பரும் பெருமை உடையது. மெய்ஒளி தழைப்பது, மிகவும் தூய்மை வாய்ந்தது. ஓங்கி உயர்ந்து நிற்பது. சிவபெருமான் எழுந்தருளியிருப்பது. இவ் ஐந்துவகை இயல்புகளும் இராசராசனின் திருவுள்ளத்திலும் இயல்பாக அமைந்துள்ளன. அவனது திருவுள்ளம் அளப்பரும் பெருமை உடையது. சத்தியம் ஞானம் முதலிய உயர்ந்த பண்புகள் ஒளிமிக்குத் திகழ்வது; மிகப் பெரிதும் தூய்மை வாய்ந்தது; உயர்ந்த நோக் கங்களும் குறிக்கோள்களும் உடையது. எப்பொழுதும் மறவாது நினைத்துப் போற்றுத லால் இறைவன் எழுந்தருளி இருப்பது. இவ்வாற்றால் திருக்கயிலாய மலையும், சிவபாத சேகரனாகிய இராசராசனின் திருவுள்ளமும் ஒத்த தன்மை உடையன என்பதனைச் சேக்கிழார் பெருமான்,

> கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்
> கதிரிளம் பிறைநறுங் கண்ணி
> ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்,
> அளப்பரும் பெருமையி னாலும்,
> மெய்யொளி தழைக்கும் தூய்மையி னாலும்,
> வென்றிவெண் குடைஅந பாயன்
> செய்யகோல் அபயன் திருமனத் தோங்கும்
> திருக்கயி லாயநீள் சிலம்பு.

எனவரும் பெரியபுராணப் பாடலில் இனிது இயைத்துப் பாடியிருக்கும் திறம் அறிஞர் களின் உள்ளங்களுக்கு ஆராப் பெருவிருந் தாகும்.

ஆட்சிக்கால மாட்சி :

இராசராசன், இப்பெரிய கோயிலை எழுப்பு வித்ததோடு மட்டுமல்லாமல், இங்கே பற்பல விழாக்களை நடத்தவும் ஏற்பாடுகள் செய்தான். அவனுடைய காலத்தில் ஓர் ஆண்டில் மொத்தம் 34 பெரிய விழாக்கள் நடைபெற் றன என்பது கல்வெட்டுக்களால் தெரிகின்றது. மாதந்தோறும் நிகழும் சதயத் திருவிழாக்கள் 12. மாத சங்கராந்தி விழாக்கள் 12. வைகாசி உற்சவ விழாக்கள் 9. கார்த்திகை விழா 1. ஆக ஓராண்டில் 34 விழாக்கள் நிகழ இராச ராசன் ஏற்பாடுகள் செய்திருந்தான். இவ் வாறே தனது ஆட்சிப் பரப்பிற்கு உட்பட்ட நாடு முழுவதும் உள்ள கோயில்கள் அனைத்தி லும், பூசையும் விழாவும் பொற்புற நடை பெறச் செய்தான். தனது சிறிய தந்தையாகிய உத்தம சோழனின் புதல்வன் மதுராந்தகன் கண்டராதித்த சோழன் என்பவனைக் கொண்டு, தனது ஆட்சியிற் கோயில் காரியங்களும், பிற அறநிலையங்களும் நன்கு நடைபெறுகின்றனவா என்று கண்காணிக்கச் செய்தான். திருநெறிய தமிழிசையும், தெய்விக நடனமும், சிற்பம் ஓவியம் முதலிய கலைகளும் யாண்டும் செழித் தோங்கப் புரிந்தான். இராசராசனால் கோயில் களிலெல்லாம் பூசைகள் நீடினிது நிகழ்ந்தன; ஏழிசைப் பாடல் ஆடல்கள் எழிலுற மலிந்தன; அருங்கலைகள் பலவும் ஆதரித்துப் போற்றப் பெற்றன; தமிழ்நாடே ஒரு பெரும் புத்துயிர்ப் புணர்ச்சியும் மறுமலர்ச்சிவளமும் பெற்று நின்றது. சைவமும் தமிழும் தழைத்தினிதோங் கின. கருவூர்த் தேவர் போன்ற சிவநெறிச் சான்றோர்களும், சிவனடியார்களும் போற்றி வழிபடப் பெற்றனர்.

> "மங்கையைப் பாக மாக
> வைத்தவர் மன்னும் கோயில்
> எங்கணும் பூசை நீடி,
> ஏழிசைப் பாடல் ஆடல்
> பொங்கிய சிறப்பின் மல்கப்
> போற்றுதல் புரிந்து வாழ்வார்!
> தங்கள்நா யகருக்கு அன்பர்
> தாளலாற் சார்புஒன் றில்லார்"

எனவரும் பெரியபுராணப்பாடல், ஒருவகையில் இராசராசனின் ஆட்சிக்காலச் சூழ்நிலையின் மாட்சிமையினையே, குறிப்பின் நெறிப்படப் புலப்படுத்துகின்றன எனலாம்.

முடிவுரை :

நமது தமிழகத்தில் உள்ள எண்ணற்ற பல கோயில்களுள், ஒப்புயர்வற்ற கலைநலத்தினா லும், கட்டிட அமைப்புத் திறனாலும்

வரலாற்றுப் புகழினுலும், மிகவும் தலைசிறந் தோங்குவது தஞ்சைப் பெரிய கோயில்! 'உலகத் திலேயே கோயில்கள் அமைக்கும் திறனில் ஈடும் எடுப்பும் அற்றுத் திகழ்பவர்கள் தமிழர்களே யாவர்' என அயல்நாட்டு அறிஞர்களும் அகமகிழ்ந்து போற்றிப் பாராட்டும் நிலையில் இப்பெருவுடையார் கோயிலை எடுப்பித்த இராசராச சோழனின் அருமை பெருமைகள் எல்லையற்றன. தமிழகப் பெருவேந்தனுகிய அவனது சிறப்புக்களை நினைத்துணர்ந்து, தமிழ ராகிய நாம் அனைவரும் பெருமிதம் எய்தி இன்புற்று மகிழ்வதுடன், நம் தமிழ்நாட்டிற்கு அப்பேரரசன் ஆற்றியுள்ள அரும்பெருந் தொண்டுகளுக்காகத் தமிழ்மக்களாகிய நாம் அனைவரும், என்றென்றும் நன்றி செலுத்திப் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். வாழ்க இராசராசன் புகழ்! வளர்க சதயநாள் விழாச் சிறப்பு!

எங்காயி னும்காண இயலாத
எழில்நலஞ்சேர் திணையற் றோங்கி,
இங்காரும் வியந்துவக்கும் இனியதஞ்சைப்
பெருவுடையார் கோயில், என்றும்
மங்காத வகைஅமைத்த இராசராச
சோழன்விழா, மாண்பிற் கண்ட
சிங்கார வேலவர்தம் சிறந்தபெருந்
தொண்டின்திறம், சீர்த்தி நன்றே!

—ந. ரா. முருகவேள்

செய்திச் சுருக்கம்

14—11—69-ஆம் நாள் அன்று அழகர் கோயிலில், மதுரைத் துணை ஆணையர் திரு. பி. ஆர். பக்கிரிசங்கர் M.A. B.L., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா B.A., அவர்கள் திருப்பணித் துவக்க வேலைகளுக்கு அடிக்கல் நாட்டினர்கள். அடியிற்கண்ட திருப்பணி வேலைகளைத் துவக்க ஏற்பாடாகியிருக்கின்றது.

1. பதினெட்டாம்படி முதலான கோபுரங்கள்	...	ரூ.	62,000
2. நூபுர கங்கைக்கு மலைப்பாதைத் தார் ரோடு	...	ரூ.	3,00,000
3. ஸ்பெஷல் ரிப்பேர் கோட்டைக்குள் தார் ரோடு	...	ரூ.	18,800
4. யாத்திரீகர்கள் தங்கும் விடுதிகள்	...	ரூ.	57,000

ஆக ரூபா 5 லட்சத்திற்கு, திருப்பணி வேலைகள் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் அறிவுரைகளின்படி, விரைவில் நிறைவேற்றப்படும்.

தர்மகர்த்தாக் குழுத்தலைவர் திரு. வி. பி. எல். பெருமாள் நாயுடு அவர்களும், மற்ற தர்ம கர்த்தாக்கள் திரு. எம். கே. செல்லச்சாமி, திரு. எம். சுப்பிரமணியம், திரு. அ. வெள்ளைச்சாமி அவர்களும், நிர்வாக அலுவலர் திரு. இ. பிச்சையா அவர்களும், விழாவைச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள்.

—ஆசிரியர்

கோயில்களும், சமுதாய நலனும்

முன்னுரை:

தமிழ்நாடு கோயில்கள் நிறைந்தது. தமிழ் நாட்டினைப் போல, இவ்வளவு மிகுதியாக வானளாவி ஓங்கியுயர்ந்த மாபெரும் கோயில் களை, நாம் வேறு எங்கணும் காண்டல் இய லாது. நம் அருமைத் தமிழ்நாட்டில்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருவவதாரம் செய்து, கால் தரை தோய நடந்து சென்று எத்துணையோ பலப்பல தலங்களைத் தரிசித்து மகிழ்ந்து, திருமுறைகளையும் திவ்வியப் பிரபந் தங்களையும் அருளிச் செய்தனர். அதன் பயனுக எழில் மிகுந்த, எண்ணற்ற பெருங் கோயில்கள் பற்பல அமைந்து, நம் தமிழ்நாடு மிகவும் புகழ் பெற்றுத் திகழ்கின்றது.

கோயில்கள் நமது பழம்பெரும் நாகரிகத் தினையும், பண்பாட்டு நலங்களையும் விளக்கிக் கொண்டு நிற்கும் அடையாளங்கள் ஆகும். ஏனைய பிற நாடுகளில் எல்லாம் ஏதோ ஒரு சில நூற்றுண்டுகளுக்கே முற்பட்ட கட்டிடங் களும் பொருள்களும் கூட, மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தன போல, மிகப் பெரிதும் மதித்துப் போற்றப்படுகின்றன. இதனை உளங் கொண்டால், ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டு களுக்கும் முற்பட்டு, இன்றளவும் தமது சிறப்பும் பெருமையும் சிறிதும் குன்றுமல், நின்று நிலவி ஓங்கி வளர்ந்து வரும், நம் தமிழ் நாட்டுக் கோயில்களின் அருமை பெருமைகளை, யாவரும் இனிதுணரப் பெறுவர்.

அயலவர் ஆர்வம்:

நமது தமிழ் நாட்டுக் கோயில்கள், பழமை யும் பெருமையும் வாய்ந்து, பற்பல சிறப்புக் களுடன் விளங்கி, அயல்நாட்டு அறிஞர் பெருமக்களின் உள்ளங்களையும் கவர்ந்து, பெரிதும் வியப்புறச் செய்து வருகின்றன. காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் கோயில் மதிலைக் கட்டி முடிக்கக் காரணமாக இருந்த 'ஆட்சன்' (Hodgson), மதுராந்தகம்கோயில்திருப்பணியை நடத்திய 'லியோனர்ட் பிளேஸ்' (Leonard-Place), பவானி சங்கமேசுவரர் கோயிலில் வேதநாயகி அம்பாளுக்குத் தந்தத்தாற் செய்த பள்ளியறை ஊஞ்சலை நன்கொடையாக வழங்கி மகிழ்ந்த 'வில்லியம் கேரோ' (William-Garrow), மதுரை மீனுட்சி அம்மைக்குத் தங்கத் தாற் செய்த அங்க வடிகளை அன்பளிப்பாகத் தந்த 'ரூஸ்பீட்டர்' (Rous Peter) முதலிய மேலை நாட்டுப் பெருமக்கள், நம் நாட்டுக் கோயில்களின்பாற் கொண்டிருந்த அன்பும் ஆர்வமும் ஈடுபாடும் அளப்பரியனவாகும்.

கோயில்கள், மக்கட் சமுதாயத்தின் இம்மை மறுமை நல்வாழ்வுக்குப் பெரிதும் இன்றியமை யாத சிறந்த சாதனங்களாக விளங்கி வருகின்றன. மக்கட் சமுதாயத்தின் நல்வாழ் வுக்கு மிகவும் துணைபுரியும் சாதனமாகக் கோயில்கள் விளங்கி வருதற் பொருட்டே, பல்லவ மன்னர்கள், சோழப் பேரரசர்கள், பாண்டிய வேந்தர்கள், விஜய நகர அரசர்கள், நாயக்க மன்னர்கள் ஆகிய பலரும், கோயில் களின் வளர்ச்சிக்கும் அமைப்பிற்கும் அளப்பருந் தொண்டுகள் ஆற்றிப் போந்தனர். சுருக்க மாகக் கூறவேண்டுமாயின், சமுதாய நன்மை குறித்துப் பல துறைகளிலும், கோயில்கள் தொன்று தொட்டே பெரிதும் தொண்டாற்றி வந்துள்ளன, எனத் துணிந்து சொல்லலாம்.

சிற்பம், ஓவியம்:

கோயில்கள் நம் நாட்டு நாகரிகச் சின்னங் களாகவும், கலை வளர்ச்சி நிலையங்களாகவும் விளங்கி வருகின்றன. ஓவியம், சிற்பம், காவியம், இசை, நடனம், நாடகம் முதலிய

பல்வேறு கலைகளும் கோயில்களில் இடம் பெற்று, அவைகளால் போற்றி ஆதரிக்கப் பெற்று வளர்ந்து வந்துள்ளன. மாமண்டூர்க் குகைக் கோயிலின் வெளி மண்டபத் தூண் களிலும், மாமல்லபுரம் ஆதிவராக மண்டபத் தின் விதானத்திலும், தஞ்சைப் பெரிய கோயி லின் கருவறை வெளிச் சுற்றுப்புறச் சுவர் களிலும், நார்த்தாமலை விஜயாலய சோழீச் சுரம் கோயிலிலும், சித்தன்ன வாசல் முதலிய இடங்களிலும் காணப்படுகின்ற, பழமை மிக்க சிறந்த அழகிய ஓவியங்கள், கண்டு களிக்கத் தக்கவை. திருப்பரங்குன்றம் கோயிற் சுவர் களில் சூரியன், சந்திரன், மன்மதன், இரதி, அகலிகை வரலாறு முதலிய, அழகோவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்னும் செய்தியைப், பரிபாடல் என்னும் சங்க நூல் பாடுகின்றது.

மாமல்லபுரத்துச் சிற்பங்களும், தஞ்சை இராசராசேச்சுரம், கங்கை கொண்ட சோழேச் சுரம், திரிபுவனம் கம்பஹரேசுரம், தாராசுரம், இராமேசுவரம் முதலியபல பெரும் கோயில்க ளும், தமிழ்நாட்டு மக்களின் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

இசைக் கலை:

கோயில்களில், அழகுக் கலைகளில் தலை சிறந்த இசைக்கலை, பெரிதும் தழைத்தோங்கி வளர்ந்து வந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமது பாடல்களால், இனிய இசைக் கலையைப் போற்றிப் பரப்பி வளர்த்தனர். கோயில்களில் வகை வகையான தோற்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி முதலிய பற்பல, இசைக் கலைக் கருவிகள் இடமளித்து வளர்க்கப் பெற்றன. குடுமியான் மலைச் சிகாநாதர் கோயிலிலுள்ள மகேந்திரனின் கல்வெட்டு, இசைக் கலை உண்மைகள் பலவற்றை, அறிதற்குத் துணை புரிவதாக உள்ளது. மதுரைக் கோயில் பிராகா ரத்தில், நடராசர் சந்நிதியில் உள்ள தூண் ஒன்றில் 35 வகையான தாளங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலில் தேவாரத் திருமுறைகளை விண்ணப்பம் செய் வதற்காக இசைத் தமிழில் வல்லார் நாற்பத்து எண்மர் நியமிக்கப்பட்டு இருந்தனர். மற்றும் கொட்டி மத்தளக்காரர், பக்க வாத்தியர், முரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, சங்கு, முதலியன வாசிப்போர், ஆகிய பலரும் இருந்தனர். உவச்சுப்பறை, சகடை, கரடிகை என்னும் பலவகை வாத்தியங்களும்கூட, அங்கு இடம்பெற்று இருந்தன.

நாடகம்:

கோயில்களில் இசைத் தமிழே அன்றி, நாடகத் தமிழும் போற்றி வளர்க்கப் பெற்று வந்தது. கதை தழுவி வரும் நாட்டிய நாடகம், மெய்ப்பாடுகளாகிய உணர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்தும் நிருத்தியம், தாளத்தை அடிப் படையாகக் கொண்ட நிருத்தம், இவற்றோடு தொடர்புடைய கவுத்துவம் முதலியன எல்லாம், கோயில்களில் போற்றி வளர்க்கப் பெற்றன. திருவண்ணாமலை, சிதம்பரம், தஞ்சாவூர் முதலிய பல கோயில்களில், சிவபிரான் ஆடியருளும் தாண்டவத்தின் 108 கரண வகைகள் சிற்பமாக வடித்துத் தரப் பெற்றுள்ளன.

கோயில்களில் ஆடரங்கும், நாடக சாலை களும் இருந்தன. இசையிலும் நாடகத்திலும் வல்ல நாடகமாராயன், சாக்கைக் கூத்தன், கானம்பாடி, வாத்தியமாராயன் முதலியவர் கள் இருந்தனர். தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேசுவர நாடகம், சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் முதலியன நடிக்கப் பெற் றன. விக்கிரம சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில், திருவேங்கைவாசல் ஈசனூர் திருமுன் னிலையில் கூத்துக்கள் பல நடித்ததற்காக ''ஏழுநாட்டு நங்கை'' என்பவளுக்கு நில தானம் அளிக்கப் பெற்ற செய்தி, குறிக்கப் பட்டுள்ளது.

இங்ஙனம் சிற்பம் ஓவியம் இசை நாடகம் முதலிய கலைகள், கோயில்களில் போற்றி வளர்க்கப் பெற்றமையே அன்றி, ஒவ்வொரு கோயிலுக்கும் அதனைச் சார்ந்த தலத்திற்கும் எனக் கோவை உலா தூது அந்தாதி முதலிய பிரபந்தங்களும், தலபுராணங்கள் போன்ற எண்ணற்ற இலக்கியச் செல்வங்களாகிய காவி யங்களும், மிகப் பலவாகத் தோன்றிப் பெருகி வளர்ந்து வருகின்றன. இவ்வாற்றால், நாகரிக நாடுகள் போற்றும் நற்கலைகள் அனைத் திற்கும், கோயில்களே தாயகமாக விளங்கி வந்தமை உணரலாம்.

கலைக்கூடங்கள் :

கோயில்களில் புராணங்கள் முதலிய இலக் கியங்களைப் படித்து விளக்கும் படன மண்டபம்,

நடன மண்டபம், நாடக மண்டபம், புராண மண்டபம், புலவர்கள் கூடிச் சொற்போர் நிகழ்த்தும் தருக்க மண்டபம், முதலியன இருந்தன. திருவொற்றியூர்க் கோயிலில் வியாகரணதான வியாக்கியான மண்டபம் என்று ஒன்று இருந்தது. இவற்றிலெல்லாம் பல்வேறு கலைகளும் நூல்களும் பயிலவும் ஆராயவும் பரப்பவும் பட்டு வந்தன. திருவொற்றியூர்க் கோயிலில், பங்குனி உத்தரத் திருவிழாவின் 6ஆம் நாளில், படம்பக்க நாயக தேவரை மகிழ மரத்தின் கீழ் எழுந்தருளுவித்து 'ஆளுடைய நம்பிகள் புராணம்' கேட்டருளச் செய்வது வழக்கம். இந்நிகழ்ச்சியில் ஓர் ஆண்டு குலோத்துங்க சோழனும் கலந்துகொண்டு மகிழ்ந்தான் எனக் கல்வெட்டு ஒன்று கூறுதல், இங்கு நாம் அறிந்து மகிழ்தற்குரியது. இவ்வாற்றால் புலவர்க்குப் புகலிடமாகவும், கலைஞர்களுக்குக் கலைக்கூடங்களாகவும், அறிஞர்களுக்கு ஆராய்ச்சி நிலையங்களாகவும், கோயில்கள் விளங்கி வந்தமை புலனாகும்.

கல்வெட்டுக்கள் :

நம்முடைய முன்னோர்களின் வரலாற்றுச் செய்திகள், வாழ்க்கைத் திறங்கள், அறச் செயல்கள், ஆட்சி முறைகள் முதலியவற்றை அறிந்து கொண்டு, நாம் பயன் பெறுவதற்கும் கோயில்கள் பெரிதும் துணை புரிகின்றன. கோயில்களிற் காணப்பெறும் பல்லவர், சோழர், பாண்டியர் ஆகிய அரசர்கள் பற்பலரும் அமைத்து வைத்த பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்கள், பண்டைக் காலத் தமிழகத்தின் சமயம்-சமுதாயம்-வரலாறு-இலக்கியம் -மக்களின் வாழ்க்கை நிலை-பழக்க வழக்கப் பண்பாடுகள்-முதலியவற்றை அறிவித்துதவும் பெருஞ்சான்றுகளாக, நின்று நிலவுகின்றன. கடந்த காலத்தையும், நம்மையும், நம்முடைய முன்னோர்களையும் இணைத்தியைத்துத், தொடர்புபடுத்தி வைக்கும் தூய இனிய கருவியாகக் கல்வெட்டுக்கள், நலம்பல விளைவித்து வருகின்றன.

உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள முதலாம் பராந்தக சோழனின் (கி. பி. 907-953) கல்வெட்டுக்கள் இரண்டு (கி. பி. 919; 921), இந்நாளிற் போலவே முன்னாளில் நிலவிய ஊராட்சிமுறை - ஊராட்சி வாரியங்கள்-ஊராட்சித் தேர்தல் முறை-உறுப்பினர் ஆதற்குரிய தகுதிகள்-உறுப்பினர் ஆக விரும்புவோர்பால் இருக்கக் கூடாத குற்றங்கள் - என்பனவற்றைப் பற்றிய செய்திகளை யெல்லாம், தெளிவுற விளக்குதல் காணலாம்.

கோயில்களின் வரவு செலவுக் கணக்குகளையும், நகை விவரங்களையும், அரசு அலுவலர்கள் ஆண்டுதோறும் தணிக்கை செய்தமை; மதுராந்தகன் கண்டராதித்தன், காழி ஆதித்தன், அருமொழி மூவேந்த வேளான் போன்ற புகழ் மிக்க அரச அலுவலர்கள் இருந்தமை; என்பன போன்ற பல சுவைமிகு செய்திகளைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

நமது செந்தமிழ்த் திரு நாட்டின் 'தேசிய இலக்கியம்' எனப் போற்றத்தகுந்த பெரிய புராணத்திற் கூறப்படும் பற்பல செய்திகள், கோயில்களிலுள்ள கல்வெட்டுச் சான்றுகளால் பெரிதும் உறுதிப் படுகின்றன. சேக்கிழார் காலத்துச் சோழப் பேரரசனாகிய அநபாயன் என்னும் இரண்டாம் குலோத்துங்கனின் (கி. பி. 1133-1150), தந்தை ஆகிய விக்கிரம சோழனது (கி. பி. 1120-1135) ஐந்தாம் ஆட்சியாண்டில், திருவாரூர்ப் புற்றிடங் கொண்டார் கோயிலில் இரண்டாம் சுற்றின் வடபுறச் சுவரில் அமைக்கப் பட்டுள்ள மநுநீதிச் சோழன் வரலாறு பற்றிய கல்வெட்டே, பெரிய புராணத்தில் 'திருநகரச் சிறப்பு' என்னும் பகுதியில் ஏறத்தாழ 35 பாக்களாகச் சேக்கிழார் பெருமான் விரித்து உரைத்துப் பாடுதற்கு ஏதுவாயிற்று என்பது, அறிந்து மகிழ்தற்கு உரியது.

அதன்கண் மநுநீதிச் சோழனின் அமைச்சனுடைய பெயர் 'இங்கணாட்டுப் பாலையூருடையான் உபய குலாமலன்' எனக் குறிக்கப்பெற்றுள்ளது. மற்றொரு கல்வெட்டில், குங்கிலியக் கலய நாயனாரின் மனைவி பெயர் நீலாயி என்ற ஓர் அரிய செய்தி காணப்படுகின்றது. சுந்தரரின் தாயாராகிய இசைஞானியார், திருவாரூர்க் கோயிலின் தலைமை அருச்சகரான ஞான சிவாசாரியார் என்பவரின் மகளார் என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இத்தகைய அரிய கல்வெட்டுக்கள் பற்பல அமைந்த கோயில்களின் சிறப்பிற்கு ஓர் எல்லை யுண்டோ ?

ஆவணக் களரிகள் :

இம்மட்டோ! பண்டைக் காலத்தில் பல்வேறு கலை நூல்களையும், ஓலையேட்டில் எழுதிப் பதிவு செய்து பாதுகாத்து வைக்கும் இடங்களாகவும், கோயில்கள் இருந்தன. திருமுறைகளை அபயகுலசேகரனும், நம்பியாண்டார் நம்பிகளும் தில்லைப் பெருங் கோயிலினின்றே வெளிப்படுத்தி உதவினர் என்னும் செய்தியும், இதற்குச் சான்று பகரும். கோயில்களில் இங்ஙனமிருந்த நூல் நிலையங்கள் ''சரசுவதி பண்டாரம்'' என வழங்கி வந்தன.

மேலும், விற்றல் வாங்கல் முதலியனவற்றிற் குரிய பத்திரப் பதிவுகள் செய்யும் ஆவணக் களரிகள் (Registration and Record Offices) என்னும் நிலையிலும், கோயில்கள் திகழ்ந்து வந்தன. முதலாம் இராசராசன் பெரும் பற்றப் புலியூரில் ''அறப் பெருஞ் செல்வி'' என்னும் ஒரு தரும சாலையை உண்டாக்கி, அதற்குரிய நிலப்பட்டியல்களைக் கோயிலில் உள்ள 'திருக்கைக் கோட்டி' என்னும் கோயிற் கருவூலத்தில் வைத்துப் பாதுகாக்கும்படி கட்டளையிட்டான் என ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.

நீதிமன்றங்கள்:

பொது மக்களின் குறைமுறைகளைக் கேட்டு விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் நல்ல நீதிமன்றங்களாகவும் கோயில்கள் பணியாற்றி வந்தன. சுந்தரர்க்கும் இறைவனுக்கும் நேர்ந்த வழக்கு திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலிலும், நீலி என்பவளுக்கும் வணிகன் ஒருவனுக்கும் நேர்ந்த வழக்கு பழையனூர்த் திருவாலங்காட்டுக் கோயிலிலும், விசாரிக்கப் பெற்றன என்னும் இலக்கியச் செய்திகள், இங்கு நாம் நினைவு கூரத்தகும்.

திருவோத்தூர்க் கல்வெட்டு ஒன்றில், விளையாட்டாக வேட்டைக்குச் சென்ற ஒருவன் எய்த அம்பு குறிதவறி, ஒரு மனிதன் மேல் பட்டுவிட, அவ்வூர்ச் சபையார் கூடி அவனைக் குற்ற விசாரணை செய்து, அவன் செய்த குற்றத்துக்குத் தண்டமாக அவனைக் கோயிலுக்கு 16 பசுக்களை வாங்கிக் கொடுத்து விளக்கு இடும்படி பணித்துத் தீர்ப்பு வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. இவ்வாறே திருமாற்பேறு, கூகூர், திருவெறும்பியூர், திருப்பனந்தாள் முதலிய தலங்களின் கல்வெட்டுக்களும், கோயில்கள் ஒரு வகையில் நீதி மன்றங்களாக விளங்கி வந்ததனை யுணர்த்துகின்றன.

அறச்சாலைகள்:

கோயில்கள், பலவகை அறச்செயல்கள் நடைபெறுவதற்குரிய நிலைக்களமாக விளங்கி வந்தன. திருவாவடுதுறைக் கல்வெட்டுக்களில் விக்கிரம சோழன் காலத்தில் பெருந்திருவாட்டி அறச்சாலை, சங்கரதேவன் அறச்சாலை, முந்நூற்று அறுபத்து நால்வன் அறச்சாலை முதலிய பல அறச்சாலைகள் இருந்தமை புலனுகின்றது. இவற்றில் அடியார்களுக்கும் அந்தணர்களுக்கும் துறவிகளுக்கும் அனாதைகளுக்கும் உணவு அளிக்கப் பெற்று வந்தது. சில அறச்சாலைகளில் மருத்துவநூல் பயிலுவோர்க்கும், இலக்கண இலக்கியம் முதலிய கலை பயில்வோர்க்கும், உண்டியும் உறையுளும் வழங்கப்பெற்று வந்தன. திருப்பூவணம் கோயிலில் குலசேகர பாண்டியனின் 25-ஆம் ஆட்சியாண்டில், வேதபாராயணம் செய்யும் 1008 அந்தணர்களுக்கு நாடோறும்உணவளிக்க நில தானம் செய்யப் பெற்றது. மேலும், திரிபுவனம் எண்ணாயிரம் திருமுக்கூடல் பாகூர் முதலிய இடங்களில் சிறந்த கல்வி நிலையங்களும், அவற்றிற் பயிலும் மாணவர்களுக்கு உண்டி உறையுள் வசதிகளும், மிகப் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தமை, கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

திருமடங்கள்:

சிறந்த பெருந் தலங்களின் கோயில்களைச் சார்ந்து, பற்பல திருமடங்கள், பழங்கால முதலே ஏற்பட்டு விளங்கி வந்தன. அத்தகைய திருமடங்கள், தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்காக இருந்தமை, கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. திருமடங்கள் கல்வியைப் பெருக்கி, ஒழுக்கத்தையும் பண்பையும் வளர்த்தன. நாடு போற்றி மகிழும் சான்றோர்களும், புலவர்களும், துறவிகளும் மிகப் பலராகப் பெருகுதற்குத் திருமடங்கள் சிறந்த நிலைக்களமாகத் திகழ்ந்து வந்தன. திருமடங்களால் நம் தமிழகத்திற்கு விளைந்துள்ள நலங்களுக்கு அளவே இல்லை.

மருத்துவ மனைகள்:

மக்களின் மலப் பிணிப்பை அகற்றி உயிர் நோயைத் தீர்ப்பதற்கென அமைந்த கோயில்களில், அவர்களின் உடற் பிணிகளைத் தீர்த்து உதவுவதற்கும் தக்க வசதிகள் செய்யப் பெற்றிருந்தன. திருமுக்கூடல் கல்வெட்டில் 'வீரசோழன்' பெயரால் அமைந்த ஆதுலர் சாலை (Hospital) 15 படுக்கைகளை உடையதாக விளங்கியமை கூறப்பட்டுள்ளது. திருவாவடுதுறையில், மக்களுக்கு மருத்துவம் செய்வதற்காக ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார் உத்தமசோழ அசலரையனுக்கும், அவன் மரபினர்க்கும், நிலக்கொடையும் பொருட்கொடையும் வழங்கியருளினர்.

திருவாமாத்தூர்க் கோயிலில் காலை மாலை நண்பகல் என்னும் மூன்று சந்திகளிலும் திருப்பதிகம் பாடிவர, குருடர்கள் பதினறு பேர்களும், அவர்களுக்கு வழிகாட்டுவோர் இருவருமாகப் பதினெண்மர்கள், நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குத் தலைக்கு நெல் பதக்காக நாளொன்றுக்கு முக்கலமும், ஆண்டொன்றுக்கு 1080 கலமும், அணிந்து கொள்ளத் துணிமணி வகைகளுக்காக 18 பொற்காசுகளும் வழங்கப் பெற்றன. இத்தகைய செய்திகளால் கோயில்கள், ஏழை எளிய மக்களுக்கும் அனுதைகளுக்கும் பேராதரவு புரிந்து வந்ததனை உணரலாம்.

நிதி நிலையங்கள்:

கோயில்கள், இந்நாளைய நிதிவைப்பு நிலையங்கள் ஆகிய பாங்குகள் (Banks) போலவும், பழங்காலத்தில் பலவகைகளில் பயன்பட்டன. இராமநாதபுரம் மாவட்டம் திருப்புத்தூர்க் கோயிற் கல்வெட்டு ஒன்று, 'தயாபஞ்சகம்' என்று அழைக்கப்படும் மண்டபத்தில் ஊர்ச் சபையார் கூடிச் சில கொடுக்கல் வாங்கல்கள் செய்த செய்தியைக் கூறுகின்றது. குமார மார்த்தாண்டபுரம், காஞ்சி இராச சிம்மேசுவரம் ஆகியவற்றின் கல்வெட்டுக்களும், இத்தகைய பல செய்திகளைக் கூறுகின்றன. கோயிலுக்கு வரும் தானங்களைப் பெறவும், கோயிற்பண்டாரத்தில் இருந்து பொருள்களைக் குறித்த வட்டிக்குக் கடன் தரவும், இவற்றின் தொடர்பான பத்திரங்களைப் பாதுகாக்கவும், கோயில் தொடர்புற்ற பிற வேலைகள் எல்லாவற்றையும் கவனிக்கவும் 'அமிர்த கணத்தார்' என்னும் குழுவினர் இருந்தனர்.

தொழில் நிறுவனங்கள் :

கோயில்கள், சமுதாயத்துறையில் இன்றியமையாத சிறந்த பல உதவிகளைச் செய்து வந்துள்ளன. இந்நாளைய தொழில் தரும் நிறுவனங்கள் (Employment Offices) போலவும், பழங்காலத்தில் கோயில்கள் பயன்பட்டு வந்தன. கோயில்களில் பண்டாரகர், கணக்கர், மெய்காப்பாளர், பரிசாரம் செய்வோர், திருவிளக்கிடுவோர், மாலைகட்டுவோர், வண்ணமிடுவோர், சுண்ணம் தீற்றுவோர், சோதிடர், தச்சர், தட்டார், கன்னர், குயவர், தையற்காரர், நாவிதர், வண்ணர் முதலிய தொழிலாளர்கள் பற்பலர் நியமிக்கப்பெற்று இருந்தனர். இவர்களுக்குப் பரம்பரையாக வேலையும், மானியங்களும் அளிக்கப் பெற்றன.

கோயில்கள் பழங்காலத்தில், சமுதாயத்திற்குப் பலவகைகளில் நலங்கள் புரிந்து வந்தன. படை எடுப்புகள் நிகழும் போதும், போர்கள் ஏற்படும் போதும், மக்களுக்குப் புகலிடம் அளிக்கும் அரண்களாகவும், வலிமை வாய்ந்த கோட்டைகளாகவும், படை வீடுகளாகவும் கோயில்கள் பயன் பட்டுள்ளன. தஞ்சை இராசராசேச்சுரம் முதலிய பல கோயில்கள், கோட்டைகளின் அமைப்பைப் பெற்றிருத்தல் காணலாம். அண்மைக் காலத்திலும் பெரும் புயல், பெரு வெள்ளம் முதலியனவற்றால் இடுக்கண் நேர்ந்த பொழுது, பல ஊர்களில் பொது மக்கள் கோயில்களையே புகலிடமாகக் கொண்டனர்.

சமுதாயப் பணிகள் :

ஒவ்வொரு சிற்றூரிலும் அறுவடையானவுடன், பஞ்சங்கள் ஏற்பட்டால் பயன்படுத்தப் படுவதற்கென்று, ஒரு பகுதி நெல் ஒதுக்கி வைக்கப் பெற்றது. அதனைச் சேர்த்தல், மேற்பார்வையிடல், பாதுகாத்தல், பஞ்ச காலத்தில் குடிமக்களுக்குப் பங்கிட்டுதவல் முதலிய வேலைகளைப் 'பஞ்சவார வாரியத்தார்' என்னும் குழுவினர் கவனித்து வந்தனர். இவர்களின் செயல்கள் யாவும் கோயில்களைச் சார்ந்தே நடைபெற்றன. கி.பி. 1152-ஆம் ஆண்டில் சோழ நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது கோயில் பண்டாரத்தில் 1011

கழஞ்சு நிறையுள்ள பொன் நகைகளும், 464 பலம் நிறையுள்ள வெள்ளிப் பொருள்களும் கடனாகப் பெற்று உயிர் வாழ்ந்தனர் என்னும் செய்தியை ஆலங்குடிக் கல்வெட்டு கூறு கின்றது.

இதுமட்டுமோ! தமிழகக் கோயில்களின் கட்டிடக் கலைச் சிறப்பும் பெருமையும், சுமத்திரா, ஜாவா, பாலி, போர்னியோ, பர்மா, மலேயா, இந்தோனேசியா, சயாம், கம்போடியா, சம்பா முதலிய கடல் கடந்த நாடுகளிலும் பரவி விளக்கமுற்றன. ஜாவாவிலுள்ள போரா புதூர் (கி.பி. 750-850) புத்தர் கோயிலும், கம்போடியா அங்கோர்தம் (கி. பி. 802-820) சிவன் கோயிலும், அங்கோர்வாட் (கி.பி. 1110-1150) பெருமாள் கோயிலும், தமிழகக் கோயிற் கட்டிடக் கலை-சிற்பக்கலைகளினுடைய வளர்ச்சியின் சிறப்பையும், பரவலையும் விளக்கு வனவாகும். இவ்வாற்றால், கடல் கடந்த அயல் நாடுகளிலும் கூட, நம்முடைய தமிழ் நாகரிகமும் பண்பாடும் கலைகளும் நன்முறையிற் படர்ந்து பரவி வளர்வதற்கும், தமிழகக் கோயில்கள் சாலவும் துணைபுரிந்துள்ளமை காணலாம்.

முடிவுரை :

இதுகாறும் கூறி வந்தவாற்றால், நம் தமிழ் நாட்டிற் பழங்காலத்திற் கோயில்களே கல்விக் கூடங்களாகவும், கலை வளர்ச்சிக் கழகங்களாகவும், ஆவணக்களரியாகவும், அறங்கூறவையங்களாகவும், அறச் சாலைகளாகவும், மருத்துவ மனைகளாகவும், மக்களுக்குத் தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவும் நிதி நிலையங்களாகவும், மன்பதை நலம் வளர்க்கும் மன்றங்களாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி வந்தமையுணரலாம்.*

இங்ஙனம் சமய இயல், சமுதாய இயல், கலையியல், பண்பாட்டியல், பொருளியல், முதலிய எல்லாத் துறைகளிலும் தலைமைச் சிறப்பிடம் பெற்று, நமக்கெல்லாம் நலம்பல விளைவித்து வருகின்ற கோயில்களே, உண்மையில் நமது "சமுதாய நல நிலையங்கள்" (Social Welfare Centres) எனத் தக்கனவாகும் என்பதற்குத் தடையும் உண்டோ ?

—ஆசிரியர்.

* "Above all, temples became centres of religious and social life. As landholder, employer and consumer of goods and services, as bank, school and museum, as hospital and theatre, in short as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma, the mediaeval Indian temple has few parallels in the annals of mankind."

—Prof. K. A. Nilakanta Sastri.

செய்திச் சுருக்கம்

திருமுறைப் பரிசுச் சொற்பொழிவு: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தணிகைமணி டாக்டர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் பெயரில் நிறுவியுள்ள "திருமுறைப் பரிசுச் சொற்பொழி"வின் முதல் விழா, (21,22—11—1969) ஆகிய இருநாட்களில் சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் நடைபெற்றது. "திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்" என்னும் பொருள் பற்றிச் செஞ்சொற்கொண்டல் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர். இவ்விருநாள் விழாவிற்கும் காஞ்சிபுரம் சிலத்திரு ஞானப் பிரகாச பரமாசாரிய சுவாமிகள் தலைமை தாங்கியருளினர்.

முதல்நாள் சொற்பொழிவில், திரு. சிங்காரவேலன், ஞானசம்பந்தப் பெருமானின் வரலாற்றை விரித்துக்கூறி, அவ்வரலாற்றுக்கு அவர் பாடிய தேவாரப் பாக்களிலேயே அகச் சான்றுகள் உள்ளன என்று எடுத்துக் காட்டினர்; இரண்டாம் நாள் சொற்பொழிவில் சம்பந்தப் பெருமானின் தேவாரங்களில் காணப்படும் இலக்கிய இலக்கணச், சுவைகளையும் அவற்றின் பல்வேறு சந்தங்களின் இனிமையையும் விளக்கினர்.

சொற்பொழிவுகள் முன்னரே நூல்வடிவில் அச்சிடப்பெற்றிருந்தமையால், அந்நூலினை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ. பி.எல்., ஐ.ஏ.எஸ்., அவர்கள் வெளியிட்டார். சொற்பொழிவாளருக்குரிய பரிசுத்தொகை ரூபா ஐந்நூற்றினை, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள், திரு. சிங்காரவேலனுக்கு வழங்கினர். கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள், வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்.

—ஆசிரியர்.

மணவாளமாமுனிகள் வைபவம்

(ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.)

நமது சம்பிரதாயமானது ஆழ்வார்களாலும் ஆசாரியார்களாலும் பெருமை பெற்றுப் பொலிகின்றது. இவ்வாழ்வாராசாரியர்களின் பரம்பரையானது பொய்கை யாழ்வார் தொடங்கிப், பொய்யில்லாத மணவாள மாமுனிகளோடு தலைக்கட்டுகின்றது. இப்பெரியார்கள் நமக்குச் செய்தருளிய பேருதவிகளுக்கு நாம் செலுத்தவேண்டிய கைம்மாறு, அவர்களுடைய புகழ்களை வாயாரச் சொல்லிப் போற்றுவதும், கையார எழுதி மகிழ்வது மேயாம். நாமாகச் சில செய்யுள்களையோ சுலோகங்களையோ இயற்றிப் போற்றுவதிற் காட்டிலும், முன்னோர்கள் மொழிந்தவற்றைக் கொண்டு போற்றுவது மேம்பட்டதாம். ஆழ்வார்களில் நம்மாழ்வார் ஒருவர்க்கு மட்டுமே மதுரகவிகள் அருளிய ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்ற துதியுள்ளது. மற்றுள்ள ஆழ்வார்களுக்கு அவரவர்களின் திவ்வியப் பிரபந்தங்கட்குத் தோன்றியுள்ள தனியன்களைத் தவிர, வேறொரு துணுக்கையும் துதியாக அமைந்திலது.

இனி ஆசாரியர்களைப்பற்றிப் பேசப் புகுவோமாயின், ஸ்ரீ ராமாநுஜர் ஒருவர் தவிர, மற்றெவர்க்கும் தோத்திர நூல் அமைந்திலது. இராமாநுச நூற்றந்தாதியானது ஆசாரியரின் காலத்திலேயே அவதரித்து மேன்மை பெற்றது. யதிராஜஸப்ததி, யதிராஜவிம்சதி, யதிராஜதண்டகம் முதலானவை, பிற்காலத்தில் தோன்றியவை. சமகாலத்தில் தோன்றியதான துதிநூல் மேலே கூறிய நூற்றந்தாதி ஒன்றேயாம். வடுகநம்பியென்பவர் யதிராஜ வைபவம் என்று ஒரு வடமொழி நூல் பணித்தார் எனினும், அது சரித்திர நூலேயன்றித் தோத்திர நூலன்று. இராமாநுசர்க்கு அடுத்துள்ள எம்பார், ஆழ்வான், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை முதலான ஆசாரியர்களுக்கு, ஒரு தோத்திர நூலும் திருவவதரிக்கக் கண்டிலோம். இதனால் தோத்திரம் செய்யக்கூடிய பெருமை, அவ்வாசிரியர்களிடத்து இல்லையென்று நாம் சொல்லுவதாகக் கருதலாகாது. பிரகிருதம் மணவாளமாமுனிகளைப் பற்றி, நாம் கூறுவதை மட்டும், குறிக்கொள்ளவேணும்.

''ஏராரும் எதிராசர், எனவுதித்தான் வாழியே'' என்று வாழ்த்தப் பட்டுவருகின்ற மாமுனிகள், எம்பெருமானுடைய அபராவதாரமாகத் தோன்றினர் என்பதில் ஐயமில்லை. இவ்வளவேயன்று; அவர்தம் அவதாரத்திற் காட்டிலும் மிக்க மேம்பாடுடையது மாமுனிகள் தம் அவதாரம். சுதந்திரமாகப் புதிய நூல்களை அருளிச் செய்வதில் விசேஷ விருப்பமற்று, ஏற்கெனவேயுள்ள சிறந்த நூல்களுக்கு வியாக்கியானமான நூல்களை இயற்றுவதிலேயே ஊக்கமும் ஊற்றமும், இருவர்க்கும் சமமானது. ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், கீதாபாஷ்யம் என்னுமிவை இராமாநுஜர் இயற்றிய வியாக்கியான நூல்களேயன்றோ? அப்படியே மணவாள மாமுனிகளும் ''சீர் உலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடு நாள்'' என்கிறபடியே பிள்ளைலோகாசாரியருடையவும், அவரது திருத்தம்பியாருடையவும், அருமருந்தன்ன திவ்விய ரகசிய நூல்களுக்கு வியாக்கியானங்களை அருளிச்செய்தார். ஸ்ரீ ராமாநுஜர் வேதார்த்த ஸங்கிரஹம், கத்தியத்திரயம், நித்தியம் என்கிற சுதந்திர நூல்கள் சிலவற்றையும் அருளியதுபோல மாமுனிகளும், யதிராஜவிம்சதி உபதேசரத்தினமாலை முதலிய சுதந்திர நூல்களும், பல இட்டருளினர். இவ்வகையாலே இவ்வாசிரியர்களிருவர்க்கும் ஒருபுடையொப்புமை என்பது நிற்க, மாமுனிகளுக்கு

ஸ்ரீ ராமாநுஜரிற்காட்டிலும், மிக்க ஏற்ற முள்ளமை கேண்மின்.

உபதேச ரத்தின மாலையில் ''ஒராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர், ஏரார் எதிராசர் இன்னருளால்-பாருலகில், ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின்'' என்ற பாசுரத்தின் படி ஸ்ரீராமாநுஜர்க்கு ஓர் ஏற்றம் பிரசித்தமாக உள்ளது. அதாவது ஆளவந்தார் முதலான முன்னோர்கள், அர்த்த விசேஷங்களின் அருமை பெருமைகளைக் கண்டு மறைத் தொளித்துப் போந்தார்களாயிருக்க, ஸ்ரீ ராமாநுஜர் அங்ஙனமன்றிக்கே பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் கூறுமாறு, கட்டளையிட்டதாகக் காண்பதேயாகும். இங்ஙனே பிறர்க்குக் கட்டளையிட்ட அப்பேராசிரியர் முன்னம் தாம் ரகசியப் பொருள்களை ஏற்படுத்தி விளக்கியிருக்க வேண்டும். பிரமசூத்திரத்துக்குப் பல உரைநூல்கள் இட்டருளின ஸ்ரீ ராமாநுஜர் ரகசியப் பொருள்களை விளக்கி ஒரு நூலும் பணித்திலர் அன்றோ? அஃது அவர்க்கு ஒரு குறையே யாகும். அக்குறையைத் தீர்த்துக் கொள்வதற்காகவே, அவ்விராமாநுஜர் தாமே மாமுனிகளாகத் திருக்கோலம் பூண்டார். இவ்வவதாரந் தன்னில் செய்தருளின காரியங்களே மிகமிகப் புகழத்தக்கவையாயின.

இப்பேருதவியின் பெருமையைக் கண்டே, மாமுனிகளுக்குப் பலபல தோத்திர நூல்களை அக்காலத்தவர்களே இட்டு வைத்தனர். வடமொழியில் ஸ்ரீமத் வரவரமுனி சதகம் என்று நூறு நூறு சுலோகங்கள் கொண்ட இரண்டு துதி நூல்கள் தோன்றின. ஒன்று எறும்பியப்பா பணித்தது; மற்றொன்று அஸ்மத்குல கூடஸ்தரான பிரதிவாதி பயங்கராசாரியர் பணித்தது. அன்றியும் ''பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அஷ்டப்பிரபந்தங்கள்'' என்னுமா போலே, மாமுனிகளின் திருவடி பணிந்து அஷ்டதிக்கஜாசாரியர்கள் என்று பேர் பெற்ற எண்மர், எட்டுப் பிரபந்தங்கள் தென்மொழியில் இட்டு வைத்தனர். எறும்பியப்பா என்னும் ஆசிரியர் வரவரமுனி சதகம் ஒன்றேயன்றி, வரவரமுனி காவியம், வரவரமுனி சம்பூ, வரவரமுனி கர்ணாமிர்தம், அம்ருதத்வனி, தினசர்யா என்றிவை முதலான, பல துதிநூல்களையும் பணித்துள்ளார். இத் துதிநூல்களெல்லாவற்றிலும் கூறப்பட்டுள்ள விஷயங்களைச் சாரமாக எடுத்துரைப் போமாயின் 'மாமுனிகளின் திருநாவீறு ஒப்பற்றது' என்பதொன்றே தேறி நிற்கும். இவர்தம் முந்தின அவதாரமான ராமாநுஜரைப் பற்றின நூற்றந்தாதி முதலான துதி நூல்களை நோக்குங்கால், பிறமதத்தவர்களின் செருக்கையடைக்கினர் என்பது, அவர் தம் பெருமையின் சாரமாகத் தெரியவரும். விரோதிகளை மாய்க்கும் பணி அவ்வவதாரந் தன்னில் தலைக்கட்டிற்றுதலால், மாமுனிகளான இவ்வவதாரத்தில் ''முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்; முழுதும் நமக்கவை பொழுதுபோக்காகப் பெற்றோம்'' என்று தாமே பணித்தருளினபடி, தூய அமுதைப் பருகிக் களிப்பதே செயலாக இருந்தது இவ்வவதாரத்தின் ஏற்றம்.

இராமாநுஜரும் மாமுனிகளுமான இரண்டவதாரங்களையும் உற்று நோக்கும் அளவில், இராமாநுஜரைச் சூரியனாகவும், மாமுனிகளைச் சந்திரனாகவும் அறுதியிடலாம். உலகத்தில் பலர் பலவகையான விருதுகளைப்பெறுவதுண்டு. பண்டிதர் என்றும், வித்வான் என்றும், வாக்மி என்றும், விசாரதர் என்றும், அவரவர்கள் பெறும் விருதுகளைக் காண்கிறோம். மாமுனிகள் பெற்றவிருது 'விசதவாக் சிகாமணிகள்' என்பது. கடல் சூழ்ந்த மண்ணுலகினுள் இந்த விருது மாமுனிகள் ஒருவர்க்கே ஏற்கும். கூறியது கூறல், மயங்கவைத்தல், நலிந்து பொருள் கொள்ள வைத்தல், இன்னது சொல்லிற்றென்று தெரியாதபடி பேசி வைத்தல், பிறர்மனம் நோவப் பேசுதல், வீண் பேச்சுக்களை வளர்த்தல், முன்னோர் மொழிந்த முறைகளுக்கு மாறாகப் பேசுதல், முன்பின் முரண்படப் பேசுதல் முதலிய குற்றங்குறைகளை, மாமுனிகளின் திவ்விய சூக்திகளில் இறையுங்காண இயலாது. இதைப் பலகால் பேசினாலும் கூறியது கூறல் ஆகாது.

நம்பிள்ளை என்னும் ஆசிரியர், அரங்கன் சன்னிதியில், திருவாய் மொழியின் அரும் பெரும் பொருள்களை அனவரதமும் அருளிச் செய்து போந்தார் என்கிற பிரசித்தியிருந்தும், அரங்கன் அவ்வாசிரியரைத் தனக்கு ஆசாரியராகக் கொள்ளவோ சிறப்புப் பாயிரம் என்கிற



திருச்செந்தூர் முருகன்

தனியனே அவர்க்குப் பணிக்கவோ மனங் கொண்டிலன். அப்பரமன்தானே மாமுனிகள் பக்கலிலே சீடனுக இருந்து, சந்திர சூரியர்கள் உள்ள அளவும் உலகில் ஓங்கி விளங்கி நிற்கு மாறு, உலகம் புகழும் தனியன் ஒன்றை விண்ணப்பம் செய்தது மிக அற்புதம். அந்த வரலாற்றின் சுருக்கம் வருமாறு:

தென்திருவரங்கம் கோயில்கொண்ட பெருமான், மணவாள மாமுனிகளுக்குத்தான் சீடனுகி, அவரைத் தனக்கு ஆசிரியராகக் கொள்ளக் குதுகலித்தனன். திருவாய் மொழிக்குச் சிறந்தவியாக்கியானமாகஅமைந்த ஈடு முப்பத்தாறுயிரப்படியின் அரும்பெரும் பொருள்களே, மாமுனிகளின் திருவாக்கினல் கேட்கப் பெறவேணும் என்று ஆவல் கொண்டனன். தனது திருக்கோயிலின் திருமுன்பே எழுந்தருளியிருந்து விளம்பியருள வேணுமென்று கட்டளையிட்டனன். அது கேட்டவுடனேயே மாமுனிகள் ''நாமார்? பெரியதிரு மண்டபமார்? நம்பெருமாள் தாமாக வெம்மைத் தனித்தழைத்து—நீமாறன் செந்தமிழ் வேதத்தின் செம்பொருளே நாளு மிங்கே வந்துரையென் றேவுவதே வாய்ந்து'' என்று நைச்சியமாய் அநுசந்தித்து, சீரிய பொருள்களேச் சிறப்புற விளக்கி வந்தார். அவ்வாண்டில் திருவரங்க நாதனுடைய நித்திய நைமித்திகத் திருவிழாக்களெல்லாம் நிறுத்தப் பட்டிருந்தன. ஓர் ஆனி மாதத் திருமூல நன்னுளில், இந்தப் பிரவசனம் சாத்துமுறை செய்வதாக நிச்சயிக்கப்பட்டு, அது நடை பெற்று வரும்போது அரங்கநாதன் ஒரு சிறு குமாரனுய் அத்திரளிலே வந்து நின்று ''ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம், யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்'' என்று கைகூப்பி நின்று விண்ணப்பஞ் செய்து விரைந்து சென்று மறைந் தனன். இந்த இதிகாசத்தை மாமுனிகளின் சீடர்களென்று பிரசித்தர்களாய் அஷ்டதிக் கஜாச்சாரியர்கள் என்று வழங்கப்படுபவர் களான ஆசிரியர்கள் எண்மரும், வடமொழிச் சுலோகங்களிலும் தென்மொழிச் செய்யுள் களிலும் அமைத்துப் பாடியுள்ளார்கள். அந்நாள் தொடங்கி அரங்கநாதனது கட்டளையினல் ஊரும் நாடும் உலகமும் எங்கும், இத்தனியனே கோயில்களிலும் மடங்களிலும் மனேகளிலும் திவ்வியப் பிரபந்தங்கள் ஓதும்போது தொடக் கத் தனியனுக விளங்கி வருகின்றது.

வியாக்கியானங்கள் அருளிச்செய்வதில் மணவாள மாமுனிகள் திறமை ஒப்புயர் வற்றது. பிள்ளேலோகாசாரியர் என்னும் ஆசிரியர் 'அஷ்டாதச ரகசியம்' என்று பெயர் பெற்ற பதினெட்டு ரகசிய நூல்களேப் பணித் திருந்தார். அவருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் ஆசார்யஹ்ருதயம் என்னும் ரகசிய நூலே அருளிச் செய்திருந்தார். ஸ்ரீ வைஷ்ணவ சமயத் தில் உபயவேதாந்தம் என வழங்கப்படுகின்ற வடமொழி தென்மொழி மறைகளின் ஆழ்ந்த கருத்துக்களே, ஆர அமர ஆராய்ந்து வெளி யிட்ட நூல்கள் இவற்றுக்கு மேற்பட வேறு எதுவுமில்லே. உலகாசிரியர் பணித்தபதினெட்டு ரகசியங்களுள் ஸ்ரீ வசனபூஷணம், தத்துவத் திரயம், முமுட்சுப்படி என்ற மூன்று ரகசிய நூல்களானவை, அறியவேண்டும் அர்த்த மெல்லாம் அடங்கி நிற்பன என்று கொண்டு இவற்றுக்கு வியாக்கியானம் அருளிச் செய் தனர் மாமுனிகள். ஆசார்யஹ்ருதயம் என்னும் நூலானது, மேலே குறித்த மூன்று ரகசியங் களும் நாலாயிர திவ்வியப் பிரபந்த வியாக்கி யானங்களும் சேர்ந்து ஒரு வடிவு கொண்டது என்னும்படி அமைந்ததாதலின் அதற்கும் வியாக்கியானம் இட்டருளினர் மாமுனிகள். இவர் அருளிச்செய்த நூல்கள் மற்றும் சில பல இருப்பினும், இந்நான்கு வியாக்கியான நூல்களும், நான்கு வேதங்களிலும் மேம்பட் டவை என்னலாம்படி அமைந்தன.

உலகில் வியாக்கியான நூல்கள் எண்ணிறந் தவை தோன்றியுள்ளன. பெரிய வாச்சான் பிள்ளேயும், வடக்குத்திருவீதிப்பிள்ளேயும், திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கட்கு வியாக்கி யானங்கள் இயற்றினர்களேயன்றி, 'சூத்திரங் கள்' என்னும் வகையிலே அமைந்த இத்தகைய நூல்களுக்கு வியாக்கியானம் இயற்றியவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தில் மாமுனிகளேத் தவிர வேறு எவ்வாசியரும் இலர். மூலத்திற்கு அவதாரிகையிடுகிற அழகும், மூலத்தை விவரித் தருளுகிற பாங்கும், ஆங்காங்கு அர்த்தங்களேத் தொகுத்து நிகமித்தருளுகிற பண்பும், பண்டி தர்கட்கும் தோன்றமாட்டாத சங்கைகளேத்

தோற்றுவித்துப் பரிகார வழிகளை உணர்த்தும் பரிசும், பிற மதங்களை மறுத்தெழுத நேர்ந் தாலும் ஒருவர் மனமும் நோவாத படிக்கும், வீணான நிந்தைகளும் பரிகாசங்களும் புகாத படிக்கும், எந்த இடத்தை யெடுத்தாலும் சாத்திர நுண்பொருள்களே கைகொள்கனி யாம்படிக்கும், 'நூற்கடல்கள் எல்லாவற்றை யும் கரைகண்டவர் இவர் ஒருவரே' என்று திண்ணமாக எண்ணும்படிக்கும், வியாக்கி யானித்தருளினவர் மாமுனிகள் ஒருவரே.

இவருடைய திவ்விய சூக்தியமுதக் கடலி னின்று முக்கியமான ஒரு விசேஷத்தை முன் னம் இங்கு எடுத்துக் காட்டுவோம். மாமுனி கள் தாம் ஆங்காங்கு மூலத்திற்குச் சேர விவ ரித்து அருளிச் செய்யும் அர்த்த விசேஷங்கள் வேறு சில ஆசிரியர்களின் நூல்களிலும் இருந் தால் அவ்விடங்களை எடுத்துக்காட்டி அருளா தொழியார். இந்த நடை பிற ஆசிரியர்களின் நூல்களிற் காண அரிது; 'சிலர் இப்படி உரைப் பார்; சிலர் இங்ஙனே கூறுவர்' என்று எளி தாகக் காட்டிப் போவார்களேயன்றிப் பெயரையும் இடத்தையும் வாசகங்களையும் காட்டவே மாட்டார்கள். மாமுனிகள் வியாக் கியான நடை இத்தகையதன்று. 'இன்ன ஆசிரியர் இன்ன இடத்திலேயே இன்னபடி கூறியுள்ளார்; அவரது வாசகங்கள் இவை' என்று மிக விளக்கம் காட்டியே தீருவார். இது மாமுனிகளின் திவ்விய சூக்திகளுக்கு உண்டான தனிச்சிறப்பு. இது காரணமாகவே, "பொய்யிலாத மணவாள மாமுனி புந்தி வாழி" என்று உலகப் பிரசித்தமான வாழ்த்து அமைந்தது.

வைணவ சமயக் குரவர்களில் வடமொழியி லும் தென்மொழியிலும் சிறியனவும் பெரியன வுமாக நூல்கள் இயற்றினவர்கள், ஆழ்வார் களைத் தவிர ஏறக்குறைய இருபதின்மரே, உலகம் போற்ற நின்ற ஆசிரியர்களாக மாமுனிகளுக்கு முற்பட்டவர்கள் தேறுவர்கள். அத்தனை பேருடையவும் நூல்களிலிருந்து, உரிய இடங்களில் உரிய வசனங்களை எடுத்து மேற்கோள் கொடுத்திருக்கும் அழகு அற்புத மானது. இதற்குமேல் மற்றோர் அதிசயம். மேற்கோள்களை எடுத்துக் காட்டிவிட்டு 'என் கிறபடியே' என்று போய்விடாமல், அவற்றின் பொருளைத் தெரிந்துகொள்வதற்கு வேறு வியாக்கியானங்களைத் தேடவேண்டாமல், அவ் விடங்களில் தமக்கே உரிய நடையில் விவரண முங் காட்டியருள்வது மிகப்பெரிய மாண்பு. 'ஆழ்ந்து கூர்ந்து ஆராய்தல்' என்னும் முறை யிலே மாமுனிகளின் வியாக்கியானத் திரு வாக்குகளை நோக்குங்கால், இராமபிரான் மாருதியின் இனிய சில மொழிகளைக் கேட்ட தும் இளையோனை நோக்கிக் கூறியதாகக் கம்பர் பெருமான் பாடியுள்ள,

"இல்லாத உலகத் தெங்கும்
ஈங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே யென்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
ஆர்கொலிச் சொல்லின் செல்வன் ?
வில்லார்தோள் இளைய வீர
விரிஞ்சனோ விடைவ லானோ ?"

என்னும் செய்யுளே நினைவுக்குவரும். இக் காலத்தில் இதிகாசபுராண பாஞ்சராத்திரம் முதலிய எல்லா நூல்களும், பல லிபி களில் பல முறைகளில் பலவகை அட்டவணை களுடனும் அச்சேறியுள்ளன. இஃது ஒரு நூற் றுண்டுக்கு உட்பட்ட செய்தி. ஆசிரியர் காலத் தில் ஓலையேடு தவிர வேறு கிடையாது. அதுவும் ஓரூரில் ஒன்றிரண்டு சுவடிகளுக்கு மேல் காண்பதரிது. எந்த மூலையில் எந்த விஷ யம் உள்ளதென்று கண்டறிவதற்கும் இய லாது. இத்தகைய நிலையில் மாமுனிகள் இதி காசபுராண ஸ்ரீ பாஷ்யாதிகளான வடமொழி நூல்கள் பலவற்றிலும் இருந்து, ஆயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு வசனங்களை மேற் கோளாக எடுத்துக்காட்டியுள்ளார் என்று, நாம் ஏற்றக் குறைவின்றிக் கணக்கெடுத்து வெளியிட்டிருப்பது உலகம் பரவியுள்ளது. இஃதொன்றை மட்டும் நோக்குங்கால், ஆள வந்தார் என்ற ஆசிரியரால் "ப்ரக்ருஷ்ட விஜ்ஞான பலைகதாமநி" என்று போற்றப் பட்ட ஆதிசேஷனே, மாமுனிகளாகத் திருவ வதரித்தனர் என்று மேலையார் கூறியுள்ளது மிகப் பொருத்தம் என்று உணரலாகும்.

மாமுனிகளின் மாண்பைச் சுருங்கச் சொல் லில், தாம் இயற்றியருளின நூல்களுள் ஒன்றான ஆர்த்திப் பிரபந்தத்தில் (பா—28),

"பண்டுபல ஆரியரும் பாருலகோர் உய்யப் பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மை, கண்டதெல்லாம் எழுதியவை கற்றறிந்தும் பிறர்க்குக் காதலுடன் கற்பித்துங் காலத்தைக் கழித்தேன்" என்று தாமே அருளிச் செய்த படி, ஏற்கெனவே தோன்றியுள்ள பூருவர்களின் பொன்மொழிகளைப் பிரவசனஞ் செய்தருள்வதிலேயே மிகுந்த காதலுடையராயிருந்தும், இவ்வுலகின் பாக்கிய பரிபாகம் அடியாகச் சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கு இணங்கியும், எம்பிரானது கட்டளையை முன்னிட்டும், தேனும் பாலும் கன்னலும் அமுதமுமான திவ்விய நூல்களையும் இட்டருளிக் கலியுகத்தைக் கிருதயுகமாக்கி, எழுபத்து மூன்றுண்டுகள் இந்நிலவுலகத்தில் வாழ்ந்து நலமந்தம் இல்லாதோர் நாடு புகுந்தனர் என்பதாம்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் 'துவளில் மாமணி மாடம் ஓங்கு' 'உண்ணுஞ் சோறு பருகுநீர்' முதலான சில பதிகங்களில், தம்முடைய பெருமையைத் தாமே வெளியிட்டுக் கொண்டவாறுபோல, மாமுனிகள் தாமும் ஆர்த்திப் பிரபந்தத்திலே,

"தென்னரங்கர் சீரருளுக் கிலக்காகப் பெற்றோம்; திருவரங்கந் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்; மன்னியசீர் மாறன்கலை யுணர்வாகப் பெற்றோம்; மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்; முன்னவராம் நங்குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம்; முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்; பின்னையொன்றுதனில் நெஞ்சுபோமற் பெற்றோம்; பிறர் மினுக்கம் பொறாமையிலாப் பெருமையும் பெற்றோமே"

என்று அருளிச்செய்த பாசுரத்தையே நிச்சலும் சிந்தனை செய்து உய்வோமாக.

மாமுனிகளின் திவ்விய சூக்திகளை மாச்சரியத்தினால் அநுபவிக்கப் பெறுதவர்கள் கிடக்கட்டும். அப்பிரமேய பாக்கிய வசத்தாலே அவற்றை அநுபவிக்கப் பிறந்தவர்களிலுங்கூட, ஆழ்ந்தது நோக்கி அநுபவிக்கப் பெறுதார் பலருளர் என்பது, அடியேனுடைய அனுபவத்தில் கண்ட விஷயம். கடலலைகள் போன்ற விஷயங்களில் ஒரே ஒரு விஷயம், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னும் முறையில் காட்டி நிற்கிறேன்.

ஸ்ரீ வசநபூஷணத்தில் (96) "ஆத்ம குணங்களில் பிரதாநம் சமமும் தமமும்" என்பதொரு சூர்ணிகை. இவ்விடத்து வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் "சமமாவது அந்தக்கரண நியமநம்; தமமாவது பாகியகரண நியமநம்" என்றருளிச் செய்து, இதற்குப் பிரமாணங் காட்டியருளத் திருவுள்ளம்பற்றி "சமச் சித்தப்ரசாந்திஸ் ஸ்யாத் தமச்சேந்த்ரிய நிக்ரஹ: என்னக்கடவதிறே" என்று ஒரு பிரமாணம் காட்டி, உடனே பூர்வாச்சார்ய ஸ்ரீ சூக்தியையும் காட்ட வேண்டி "க்ஷமா ஸத்யம் தமச் சம: என்கிற இடத்தில் "தமோ பாஹ்யகரணுநாம் அநர்த்த விஷயேப்யோ நியமநம்; சம:-அந்த: கரணஸ்ய ததா நியமநம் என்றிறே பாஷ்யகாரரும் அருளிச் செய்தது", என்று கீதாபாஷ்ய சூக்தியை எடுத்துக்காட்டியருளினர். இவ்வளவோடு நில்லாமல் அடுத்தபடியாக "மாறிச் சொல்லும் இடமும் உண்டு" என்றருளிச் செய்தார். அதன் கருத்து என்னவென்றால், 'பாஹ்யகரணுநாம் நியமநம் தம:, அந்தக் கரணநியமநம் சம:' என்று இப்படியே கொள்ளவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை: 'அந்தக்கரண நியமநம் தம:, பாகியகரண நியமநம் சம:' என்று கொள்ளுவதும் உண்டு என்பதாம். கீழே இரண்டு பிரமாணங்களைத் தாமே எடுத்துக் காட்டி விட்டு, அவற்றோடு சம்பந்தப்படாதபடி "மாறிச் சொல்லுமிடமும் உண்டு" என்று அருளிச் செய்வது மணவாள மாமுனிகளின் இயல்புக்குச் சேராது; அப்படியிருக்க எங்ஙனே அருளிச் செய்தார் என்று விமர்சிக்க பிராப்தம். மேலே காட்டின ஸ்ரீ சூக்தியில் "மாறிச் சொல்லுவதுமுண்டு" என்னமல் "மாறிச் சொல்லுமிடமும் உண்டு" என்று சாதித்திருக்கையாலும், அதுதானும் கீதாபாஷ்ய சூக்தியை உதாகரித்தவுடனே சாதித்திருக்கையாலும், பாஷ்யகாரரான சுவாமியே மற்றோரிடத்தில் மாறிச் சொல்லியிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டதாகிறது. அப்படி ஓரிடத்தைத் தாம் காணுமல் அந்த சூக்தியை ஒருகாலும் அருளிச்செய்யமாட்டார் மாமுனிகள் என்பது சத்தியம். இதுபற்றியேயன்றோ "பொய்யிலாத மணவாளமாமுனி புந்திவாழி" என்று உலகமெல்லாம் வாழ்த்துவது.

கேண்மின்: அந்தக் கீதாபாஷ்யத்திலேயே சுவாமி தாமே மாறிச் சொல்லியுள்ளார்; (அதாவது)—பதினாறும் அத்தியாயத்தில் முதல்

சுலோகத்தில் ''தானம் தமச் ச யஜ்ஞச் ச'' என்றும், இரண்டாம் சுலோகத்தில் ''த்யாகச் சாந்தி: அபைசுநம்'' என்றும் வருகிறது. அங்கும் தம சமங்களுக்கு விவரணம் உள்ளது. கீழே காட்டின விவரணம் பத்தாம் அத்தியாயத்தில் நான்காவது சுலோகத்தின் பாஷ்யத்திலுள்ளது. (16—1, 2இல்) காணும் விவரணம் அதனில் வேறுபட்டது. அந்தக் கரணத்தின் நியமனத்தைத் தமமாகவும், பாகியகரணத்தின் நியமனத்தைச் சமமாகவும் இங்கு பாஷ்யகாரர் அருளிச் செய்துள்ளார். அவரும் சுவோக்தி விருத்தமாக அருளிச் செய் பவர் அல்லர். இரண்டு படியையும் அவர் பிரமாண சித்தமாகக் கண்டவர் ஆகையாலே, ஒருபடியை ஓரிடத்திலும் மற்றொரு படியை மற்றோரிடத்திலும் அருளிச் செய்தார். மணவாள மாமுனிகள் அவருடைய புநரவதார பூதர் ஆதலால் இரண்டு படியும் தமக்கு ஹ்ருத்கதமாயிருக்கையாலே ''மாறிச் சொல்லு மிடமுமுண்டு'' என்றருளினர்.

இங்ஙனே தத்துவம் இருக்க, வேதாந்த வாசிரியர் பணித்த தாத்பர்ய சந்த்ரிகையில் மேலேயெடுத்துக்காட்டியபதினாறும் அத்தியாய ஸ்தலத்தில் **"ஏதேந கேஷாஞ்சித் அநயோச் சப்தயோர் வ்யுத்க்ரமேண அர்த்த வ்யாக்யாநம் நிரஸ்தம்"** என்கிற பங்க்தி காணப்படுகிறது. மணவாள மாமுனிகள் தேசிகனுடைய காலத் திற்குப் பிற்பட்டவர் ஆகையாலே, மாமுனி களின் சூக்திக்கு மறுப்பாக அது அருளிச் செய்ததென்று கொள்வதற்கு அவகாச லேசமு மில்லை. வேறு யாருடைய உக்திக்கு மறுப் பென்று விமர்சிக்குமளவில் சங்கர பாஷ்யத் திற்கு மறுப்பென்று ஸ்பஷ்டமாக விளங்கா நின்றது. ஆனால் நம் பாஷ்யகாரருடைய ஸ்ரீ சூக்திக்கும் மறுப்பாகத் தேறுகிறது. வ்யுத்க்ரமேண அர்த்த வ்யாக்யானம் பண்ணி யருளினவர் நம் பாஷ்யகாரருமாதலால், இது ப்ராமாதிகமென்னவேணும்.

பத்தாவது அத்யாயத்தில் பாஷ்ய ஸ்ரீசூக்தி யிருக்கும்படியையும், அங்கு சந்த்ரிகையில் தாம் விசேஷித்து அருளிச் செய்தபடியையும் மறக்க வல்லவரன்றே தேசிகன். சமம் தமம் என்று இரண்டுபதம் வேண்டியதில்லை; அந்யதர பதமி ருந்தாலும் அதற்கே பாஹ்ய ஆந்தரகரண நியமனத்தைப் பொருளாகக் கொள்ளமுடியும். ஆனாலும் தனித் தனி இரண்டு பதங்களிருப்பது வீணாகாதபடிக்கு அர்த்தபேதம் காட்டுவது யுக்தம் என்று திருவுள்ளம்பற்றி ''...பௌநருக்த்ய பரிஹாராய விஷயபேதே வக்தவ்யே நியமந க்ரமேண தமசமயோ: பாஹ்யாந்தகரண விஷயத்வோக்தி:'' என்று சந்த்ரிகையில் ஸாதித்திருப்பதினால் இதற்கும் சேராதபடி யன்றோ பதினாறுமத்யாயத்தில் சந்த்ரிகை அவதரித்துள்ளது. அன்றியும் ''ஏதேந, வ்யுத்க்ரமேண கேஷஞ்சித் வ்யாக்யாநம் நிரஸ்தம்'' என்கிற பங்க்தியும், சிறிது பராமர்சிக்கத்தக்கது. ஏதேந என்ப தற்கு 'பாஷ்யகாரர் இப்படி அருளிச்செய்திருக் கையாலே' என்று தானே பொருளாகும். நம்முடைய பாஷ்யகாரர் சாதித்ததனாலே சங்கரபாஷ்யம் எப்படி நிரஸ்தமாகும். இது மஹா ப்ராஜ்ஞர்கள் விமர்சிக்கவேண்டிய விஷயமென்று விட்டுவிடுகிறேன். மணவாள மாமுனிகளின் பரம ப்ராமாணிகத்வ நிரூபணம் மட்டுமே இங்கு அடியேனுக்கு உத்திஷ்டம். இத்தகைய விப்லவங்களோ உபப்லவங்களோ ஈஷத்தும் இடம் பெறாத ஸ்ரீ சூக்திகள் மாமுனி களுடையனவே.

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்
தன்னருளே தஞ்சமெனத் தாங்கொண்ட-மின்னுபுகழ்
வேதியர்கள் தாளன்றி வேறொன் றறியாதார்
மேதினியில் விண்ணவர்க்கும் மேல்.

இறைவழிபாடும், கோயில்தூய்மையும்

முன்னுரை:

தொண்டை நாட்டுப் பாடல்பெற்ற சிவத் தலங்கள் முப்பத்திரண்டினுள் ஒன்ருக, திருஞான சம்பந்தரின் தேவாரத் திருப்பதிகம் பெற்று விளங்குவது, **திருமாகறல்** என்னும் இச்சிறந்த சிவத்தலமாகும், இத்தகைய தலங்களுக்குச் செல்லுங்கால், பொதுவாக அங்குள்ள இறைவனை நினைப்பது நம்மனோர் இயல்பு. ஆயினும் திருத்தலங்களிலுள்ள இறைவனை நினைப்பதுடன், அங்கு வாழ்ந்து செயற்கரும் செயல்கள் செய்த சிறந்த சான் ரோர்களை நினைவு கூர்வதும், சிறப்புடைய தொரு செயலாகும்.

திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டிற்குச் சென்ற போது, அத்தலத்தில் காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து போற்றிய அருமைப்பாட்டினை நினைவு கூர்ந்து, அதனை மிதிப்பதற்கும் அஞ்சி, அருகிருந்த பழைய னூரில் தங்கியருளினர் என்பது வரலாறு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கோலக்காவிற் குச் சென்றபொழுது, அங்குத் திருஞானசம்பந் தர் பொற்ருளம் பெற்ற நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார். திருவீழிமிழலை சென்றபொழுது அங்கு ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் படிக்காசு பெற்ற நிகழ்ச்சியை நினைந்து குறிப் பிட்டுப் போற்றினர்.

அங்ஙனமே, திருமாகறலுக்கு வரும் செந் தமிழ்ச் சிவநெறி அன்பர்கள் அனைவரும், இங்கு அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ப் பெரும் புலவராகிய மாகறல் **திரு. கார்த்திகேய முதலியார்** அவர்களை நினைவுகூராமல் இரார். இற்றைக்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழில் 'மொழிநூல்' (Linguistics) என்னும் பெயரில் ஓர் அரிய ஆராய்ச்சி நூலை, எழுதி வெளியிட்டவர் அப்பெருந்தகையார்! தமிழ் உணர்வுடையவர்கள் அப்பெரும் புலவரை நினைவு கூர்வதன் வாயிலாகவே, இச்சிவத்தலத்தையும் நினைவு கூறப் பெறுவர் என்னும் அளவுக்கு, அவர்தம் அரிய தொண்டும் புலமையும் புகழும், தமிழறிஞர் உலகிற் பரவி யுள்ளன.

இறையுண்மை:

இறைவழிபாடு என்னும் பொருள்பற்றிப் பேசுதற்கு முற்படுங்கால், அவர் இயற்றியுள்ள அரிய இனிய வெண்பா ஒன்று, இங்கு நாம் கருதத் தகுவதாக உள்ளது. இறைவன் ஒருவன் உண்டு என்னும் உண்மையினை, அவர் பின்வரு மாறு அழகுற உணர்த்துகின்ருர்: ''இறைவன் நம் மனோரின் கண்களுக்குப் புலனுவதில்லை. ஆனுல் அதுபற்றி, நாம் அவனை இல்லையென்று மறுத்துச் சொல்லிவிடுதல் கூடாது. பரந்து விரிந்த கடலைப் பாருங்கள்; அதன் ஆழத்தை யும் அகல நீளத்தையும் கருதுங்கள். அதன்கண் வாழும் எண்ணிலாத உயிர்த்தொகுதிகளையெல் லாம் உய்த்துணருங்கள். உங்களுக்குக் கடவுளு ணர்ச்சி உண்டாகும்.

அது மட்டுமா? ஓங்கி உயர்ந்து எல்லையற்று விளங்குகின்ற வானத்தை உற்று நோக்குங்கள். அதன்கண் ஒளிவிட்டுத் திகழும் எண்ணற்ற பலகோடி விண்மீன்களைப் பற்றி நீளநினைந்து

[**திருமாகறல் ஆலயத் தூய்மைக்காக நிகழ்ந்த சுழற் கோப்பைப் பரிசளிப்பு விழாவில், ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், B. A., B. L., I. A. S., அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (30—10—1969)**

—**ஆசிரியர்.**]

ஆராயுங்கள். உங்களுக்கு இறையுணர்வு உண்டாகும். மேலும், மேகங்கள் படியும்படி பச்சைப் பசேலென உயர்ந்தோங்கி விளங்கு கின்ற அழகிய மலைநிலப்பகுதிகளுக்குச் சென்று காணுங்கள். அங்கே வளரும் பற்பல செடி கொடி மரவகைகளின் இயல்புகளையெல்லாம் ஆராய்ந்து அறிய முயலுங்கள். உங்களுக்குக் கடவுளுணர்ச்சி உண்டாகும்.

அவ்வளவு தானும் வேண்டுவதில்லை. உங்களுடைய உடலின் அமைப்பையே நீங்கள் ஒரு சிறிதேனும் ஓர்ந்துணர்ந்து பாருங்கள். மனித உடல்தான், எத்தகைய புனிதமான தன்மையில், வியத்தகு நலங்களுடன் அமைந்து திகழ்கின்றது! கண் காது இதயம் முதலிய உறுப்பு ஒவ்வொன்றின் அமைப்பையும் இயல்பையும் ஓர்ந்து ஓர்ந்து உணர்ந்து காண்மின்கள். உங்களுக்கு இறையுணர்வுஒருதலையாக உண்டாகியே தீரும். இத்துணைப்பெரிய உடம்பு, தாயின் கருப்பையிலே முந்நூறு நாட்கள் கிடந்து, முறை முறையே வளர்ந்து வெளிவந்த அற்புத நுட்பங்களைப் பற்றியெல்லாம் சிந்தனை செய்யுங்கள். இங்ஙனம் உய்த்து உய்த்து உணர்ந்து சிந்திக்கும் போதெல்லாம், உங்களுக்குக் கடவுளுணர்ச்சி உண்டாவது திண்ணம். அதுவெறும் கற்பனையோ, போலி உணர்வோ அன்று! உண்மை அனுபவ உணர்வேயாகும்.

அங்ஙனம் ஏற்படும் இறையுணர்வு உங்களுக்குக் கைகூடுமாயின், நீங்கள் எல்லா நலங்களும் பெற்று இன்புற வாழலாம்'' என்னும் கருத்து அமைய, மாகறல் திரு. கார்த்திகேய முதலியார் அவர்கள், தாம் எழுதிய மொழிநூலின் தொடக்கத்தில், ஒரு சிறந்த வெண்பாவைக் கடவுள் வாழ்த்தாக இயற்றிச் சேர்த்துள்ளார். சங்கப் புலவர்களின் விழுமிய செஞ்சொற் பாடல்களைப் போல, அவ்இனிய வெண்பாவும் அழகுமிக்குத் திகழ்கின்றது. பாடல் சிறிய தாயினும், அதன் பொருள் மிக விரிவுடையது. சொற்பொருள் நலங்கள் பலவும் அமைந்தது. விரிந்த பொருளைத் திறம்படத் தொகுத்துச் சுருங்க உணர்த்துகின்றது.(1)

இறைவழிபாடு:

இப்பாடல் கூறும் முறையில், இறைவன் ஒருவன் உண்டு என்று உணர்ந்து கொள்வதும், உணர்ந்த பின்னர் அவ் இறைவனை வழிபட்டு அவன் அருளைப் பெறமுயல்வதும், நம்மனோர்க்கு மிகவும் இன்றியமையாத கடமையாகும். மக்கள் வாழ்க்கைக்கு இறைவழிபாடு என்பது, பெரிதும் முதன்மை வாய்ந்தது. உடல் நலத்திற்கும் நோயின்மைக்கும், உணவும் நீரும் காற்றும் எங்ஙனம் இன்றியமையாதனவாக விளங்குகின்றனவோ, அங்ஙனமே உயிர்நலத்திற்கும் தூய்மைக்கும் உரியனவற்றுள், இறை வழிபாடு என்பது மிகமிகத் தேவைப்படுகின்றது. வழிபாடு பிரார்த்தனை செபம் தியானம் முதலியவற்றினால், உள்ளத்தூய்மை-அமைதி-எழுச்சி-ஒருவகைப் புதிய ஆற்றல் முதலியவற்றைப் பெறுகின்றோம். இறைவழி பாட்டினால் நம் உயிர் வாழ்க்கைக்கு, எத்துணையோ பல நன்மைகள் நாளடைவில் ஏற்படுகின்றன.

எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உளன். அவனாலேயே இவ்வுலகம் அனைத்தும் இயங்கி வருகின்றது. அவனை நாம் நம் மனமொழி மெய்களினால் வழிபட்டு, அறநெறி கடைப்பிடித்து ஒழுகினால், நம்முடைய துன்பங்கள் யாவும் நீங்கி, கவலைகள் எல்லாம் தீர்ந்து, நலம்பலவும் பெற்று நாம் உய்யலாம். இவ்வுண்மையினை நம் பழந்தமிழ்ப் பெரும் சான்றோர்கள் அனைவரும் நமக்குப் பெரிதும் வலியுறுத்தி அறிவுறுத்தியுள்ளனர். ‘தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது’ என அருளிச் செய்திருக்குமாற்றால் இறைவழிபாட்டினையும், அதனால் விளையும் நலனையும் குறித்துத் திருவள்ளுவர் பெருமான் செவ்விதின் விளக்கி இருத்தல் காணலாம்.

---

(1) ''கடற்காட்சி வான்காட்சி கார்வரைசூழ் காட்சி
உடற்காட்சி அவ்வுடல் ஒண்சூல்—படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண் ஓர்இறைவன் உண்டென்னும்
மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்.''

— மாகறல் கார்த்திகேய முதலியார்.

இற்றைக்கு ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டே தமிழ் மக்கள் தெய்வவழிபாடு செய்துவந்தனர்; தாம் வழிபடுகின்ற தெய்வம், தம்மை நிச்சயம் காப்பாற்றும் என்ற தெளிவு உடையவராகத் திகழ்ந்தனர்; தெய்வ வழிபாட்டால், செல்வம் முதலிய பல்வகை நலங்களும் எய்தப்பெற்றனர்; தாம் மட்டுமேயன்றி, தம்முடைய சந்ததியினர்க்கும்கூட, தம்முடைய தெய்வ வழிபாட்டுத் திறனல், நலன்கள் விளைந்து பெருகும் என்ற நம்பிக்கையும் உறுதிப்பாடும் கொண்டிருந்தனர். இத்தகைய செய்திக் குறிப்புகள், 'வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப், பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து, பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே' எனவரும் தொல்காப்பிய நூற்பாவினல் உணர்த்தப் பெறுகின்றன.

தூய்மையே வழிபாடு :

வழிபாடு என்பது, நம்மை நாமே பலவகைகளிலும் தூய்மைப் படுத்திக் கொள்ளும் செயலேயாகும். 'எமக்குத் தூய்மை வேண்டா: யாம் அழுக்கிலேயே கிடப்போம்' என்று எவரேனும் கூறுவரோ? நம்முடைய மனம் மொழி மெய் என்னும் மூன்றும் அழுக்குகளினல் மூடப்பெற்றுள்ளன. அழுக்காறு அவா வெகுளி செற்றம் என்பன மன அழுக்குகள். பொய்கூறல் புறங்கூறல் கடுஞ்சொற்கூறல் பயனில்சொற்கூறல் என்பன மொழியின் அழுக்குகள். பொல்லாதன செய்தல், புல்லியனசெய்தல் போல்வன மெய்யின் அழுக்குகள். மன அழுக்கைத் தியானித்தல் என்னும் நீரினலும், மொழியின்கண் நிகழும் அழுக்கைத் துதித்தல் என்னும் நீரினலும், உடலின்கண் விளையும் அழுக்கினை அர்ச்சித்தல் என்னும் நீரினலும் முறையே கழுவி, நாம் நமது முக்கரணங்களையும் நாடோறும் தூய்மை செய்து கொள்ளுதல் வேண்டும். இதுவே உண்மையான சிறந்த இறைவழிபாடாகும் எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு பாடலால் உணர்த்துகின்றர். வழிபாட்டின் சிறப்பினையும் முறையினையும் இனி வேறொரு வகையாகவும் விளக்கலாம்.

நம்முடைய உடல் என்பது ஒருவகை மாளிகை. அதன்கண் மனம் என்பது ஒரு புனிதமான அறை. அதனை நாம் ஏற்றபெற்றி போற்றிப் பாதுகாவாமையால், அது தூசுபடிந்து இருள்நிறைந்து பாழறையாகக் கிடக்கின்றது. காமம் வெகுளி பொய் முதலிய குப்பைகள், அதன்கண் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. புனிதமும் தூய்மையும் மிக்கு நிலவிப்பொலிய வேண்டிய மனம் ஆகிய அறையானது, ஒரு மாட்டுத் தொழுவம்போலச் சீரழிந்து கிடக்கின்றது. அதன்கண், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளாகிய எருமைக்கடாக்கள், கொணர்ந்து கட்டப்பெற்றுள்ளன. அதனல் மனமாகிய புனிதமான அறையானது, ஓர் இழிந்த பாழறையாக ஆக்கப் பட்டுள்ளது. இங்ஙனம் பல்லாற்ருலும் அசுத்தப் படுத்தப்பட்டுள்ள மனமாகிய பாழறையினைத் தூய்மைப் படுத்த முனையும் நன்முயற்சியே, இறைவழிபாடு எனலாம்.

மனமாகிய பாழறையினைத் தூய்மைப்படுத்த நாம் அங்கே உள்ள காமம் வெகுளி பொய் முதலிய குப்பைகளையெல்லாம், துடைத்து வாரி அகற்ற வேண்டும். ஐம்பொறிகளாகிய எருமைக்கடாக்களை அவிழ்த்து, வெளியே வெருட்டி ஓட்டுதல் வேண்டும். பின்னர் அதனை அன்பு என்னும் நறுமணச் சாந்தினல் மெழுகவும், அங்கே அருளாகிய விளக்கினை ஏற்றவும், துன்பம் என்னும் இருளைப் போக்கவும் வேண்டும். அதன் பின்னர் உண்மை என்னும் விதானம் (Canopy) விரித்து, அப்பாழறையினை அழகிய சிறந்த பள்ளியறையாகத்திருத்தி மாற்றியமைத்தல் வேண்டும். அங்கே சிந்தனை அல்லது தியானம் என்னும் செழுமலர்த்தவிசு இட்டு, அதன்கண் சிவபிரானும் உமாதேவியும் ஆகிய கணவன் மனைவி இருவரும் எழுந்தருளிக் குடிபுகுந்து, நிலையாக வாழ்ந்துவருமாறு செய்ய முயலுதல் வேண்டும். இங்ஙனம் மனமாகிய பாழறையில், இறைவனும் இறைவியும் எழுந்தருளிக் குடிபுகும் பள்ளியறையாக மாற்றித் திருத்தியமைக்கும் சீரிய முயற்சியே, இறைவழிபாடாகும். இதனைப் பட்டினத்தடிகள் என்னும் பழம் பெரும் தமிழ்ச் சான்ருேர், தமது பாடலொன்றில் விளக்கியிருக்கின்ருர்.

வழிபடும் முறை :

இறைவழிபாட்டினைத் தனியாக இருந்தோ, பலரோடு சேர்ந்தோ செய்யலாம். வீட்டிற் குடும்பத்தினரோடும், கோயில்களில் பொதுமக்

கட் கூட்டத்தோடும் சேர்ந்து செய்யலாம். நாள்தோறும் செய்யலாம்; இயலாமற் போனல் வாரம் ஒருமுறையேனும், தகுதி யுடைய நல்லவர்கள் சூழலிற் சேர்ந்துகொண்டு செய்யலாம். இவற்றினலெல்லாம் நாளடை வில் நமக்குப் படிப்படியே பலப்பல நலங்கள் விளையும் என்பது திண்ணம்.

எவர் எங்கு வழிபாடு செய்யினும், அங்குத் தூய்மையும் அமைதியும் பொலியுமாறு பார்த் துக் கொள்ளுதல் இன்றியமையாதது. தூய் மையும் அமைதியும் இல்லாத இடத்தில், மன ஒருமைப்பாடும் உண்மை அன்பும் வழிபாட் டுணர்வும் ஒரு போதும் நிகழமாட்டா. ஆத லின், இந்துக்களும், சமய உணர்வுடன் தெய்வ நம்பிக்கை உடையவர்களும் ஆகிய நாம் அனை வரும், நம்முடைய திருக்கோயில்களில் எப் போதும் தூய்மையும் துப்புரவும் அமைதியும் புனிதமும் ஒழுங்கு முறையும் நிலவுமாறு கவனித்துக் கொள்ள வேண்டுவது, நமக்குத் தலையாய கடமையாகும்.

கோயில்களிலோ அதன் சுற்றுப்புறச் சூழல் களிலோ, எத்தகைய அசுத்தத்தையும் நாம் செய்தல் கூடாது. பிறர் அசுத்தம் செய்வதைத் தடுத்து விலக்காமல், பார்த்துக் கொண்டிருத் தலும் கூடாது, கோயில்களில் எச்சில் துப்புதல் மூக்குச் சிந்துதல், காகிதம் வாழைப்பழத் தோல் தேங்காய் ஓடு முதலிய குப்பைகளைப் போடுதல் கூடாது. கோயிலின் எல்லாப் பகுதி களையும் துப்புரவுடன் பேணிக்காப்பது நம் கடமை. திலகவதி அம்மையார், கோயிலைத் திருவலகிட்டுப் பெருக்கியும், திருமெழுக் கிட்டுக் கழுவியும், துப்புரவு செய்து ஆற்றிய தொண்டு நாம் உளங்கொளத்தக்கது. திரு நாவுக்கரசர் பெருமான் உழவாரப்படை ஏந்திக் கோயில்களில் புல்லும் முள்ளும் போன்ற வற்றை அகற்றி ஆற்றிய தொண்டும், நாம் கருதி உணர்ந்து கடைப்பிடிக்கத் தக்கது. கோயில்களுக்குச் செல்வோர் வீண்பேச்சுப் பேசுதல், கூச்சலிடுதல், அமைதியைக் குலைத் தல், ஒழுங்கு முறைகளை மீறுதல் ஆகியவற்றை ஒருபோதும் செய்தல் ஆகாது. திருநீறு குங்கு மம் முதலியவற்றைக் கீழே சிந்திச் சிதறுதல் கூடாது. அது மிகப்பெரும் பாவமாகும். முறை யான இறைவழிபாட்டின் பயனைப் பெற நாம் இத்தகைய சிறுசிறு செயல்களையும் நன் கினிது கடைப்பிடித்துக் கவனித்து ஒழுகுதல், மிகவும் நலம் பயக்கும்.

மேலும் தூய்மையை வற்புறுத்தும்முறையில், இயைபுடைமைபற்றி ஈண்டு ஒரு செய்தியினைக் குறிப்பிடுதல் மிகை ஆகாது. உலகப்புகழ் பெற்ற எழுத்தாளரும், **The Razor's Edge, Cakes and Ale, Of Human Bondage** என்பன போன்ற பல புகழோங்கிய நூல்களின் ஆசிரி யரும் ஆகிய, வில்லியம் சாமர்செட் மாம் என் னும் பேரறிஞர், பல ஆண்டுகளுக்கு முன்னர் (1937) நம் இந்திய நாட்டிற்கு வருகை தந் தார். நமது இந்திய நாட்டின்கண் உள்ள முதன்மையான நகரங்களுக்குச் சென்று சுற் றிப் பார்த்தார். அந்நிலையில் அவர் நம் தென் னுட்டிற்கும் போந்தார். 'கோயில் மாநகர்' என்னும் புகழ்மிக்க நமது மதுரையிலுள்ள, மீனுட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கும் வந்தார்; அக்கோயிலின் சிறப்பத்திறனையும் செவ்விய அமைப்பினையும் கண்டு வியந்தார்! அப்போது அவர் உள்ளத்தில் எழுந்த சில எண்ணங்களை யும் உணர்ச்சிகளையும், 'ஓர் எழுத்தாளனின் குறிப்புப் புத்தகம்' என்னும் நூலில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றுர்:

> ''இந்தியாவில் எப்பொழுதுமே ஒரு சப்தம் இருந்து கொண்டிருக்கிறது. இங் குள்ள மக்கள் நாள் முழுவதும், இடையீடு இல்லாமல், தங்களுடைய குரலின் உச்ச நிலையில் பேசிக்கொண்டே இருக்கின்றுர் கள். அதுவும் கோயில்களிலோ எப் பொழுதையும்விட இன்னும் மிக அதிக மாக உரத்த பெருங் குரலில் பேசுகின்றுர்

" There is always a noise in India. People talk all day long at the top of their voices, but in the temple they talk more loudly than ever. The row is terrific. People pray and recite litanies, they call to one another, vociferously discuss, quarrel or greet one another. There is nothing that suggests reverence and yet there is a vehement overwhelming sense of the divine that sends cold shivers down your spinel In come strange way the gods there seem to be near and living. "

—William Somerset Maugham,
A Writer's Note book p. 245.

கள். இந்தச் சந்தடியும் இரைச்சலும் மிகப்பயங்கரமாக இருக்கின்றது.

இவர்கள் பிரார்த்தனை புரிகின்றார்கள்; துதிப் பாடல்கள் பாடுகின்றார்கள்; ஒருவரை ஒருவர் உரக்கக் கத்திக் கூப்பிடுகின்றார்கள். மிகவும் உரத்துக் கூச்சலிட்டு விவாதிக்கின்றார்கள். சண்டை சச்சரவுகள் புரிகின்றார்கள். ஒருவருக்கொருவர் அன்புரை தெரிவித்துக் கொள்கின்றார்கள். இவ்வளவும் கோயிலிலேயேநடைபெறுகின்றன. மக்களின் பயபக்தி உணர்வைக்காட்டும் அறிகுறிகள் எதுவும் இங்குத் தென்படவில்லை, என்றபோதிலும், இத்தனை குறைபாடுகளுக்கும் இடையே கூட, ஏதோ ஒருவகையான தெய்விக உணர்வு, நம்மை மெய்சிலிர்க்க வைக்கும் நிலையில் இக்கோயில்களில் நிலவுகின்றது. எவ்வாறே ஒரு வியக்கத் தக்க வகையில், அருகிலும் உயிர்ப்புடனும் இங்குத் தெய்வங்கள் விளங்கி வருவதாகத் தெரிகின்றது.''

முடிவுரை :

நாம் நம்முடைய கோயில்களில், அமைதியையும் தூய்மையையும் தெய்வ சாந்நித்திய உணர்வையும், போற்றிப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தினை உணர்ந்துகொள்ளுவதற்கு, மேலே குறித்த அயல்நாட்டுப் பேரறிஞரின் குறிப்பு, நமக்குத் துணைபுரியும். நமது தெய்வ நிலையங்களில், தூய்மையையும் அமைதியையும் ஒழுங்கினையும் பேணிப் பாதுகாத்து, இறைவழிபாட்டினை முறையுற நிகழ்த்தி, நலங்கள் பலவும் பெற்று உய்ய, நாம் அனைவரும் முயலுவோமாக!

ஆசிரியர்.

மாகறல், திருமாகறலீசுவரர் கோயிலின் தூய்மை நிலைக்காக, அதன் பரம்பரை அறங்காவலர் திரு. எம். டி. நடராச முதலியார் அவர்களிடம், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார் B.A., B.L., I.A.S., அவர்கள், தூய்மைப் பரிசளிப்புச் சுழற்கோப்பையை வழங்குதல் (30—10—69).

காஞ்சியில் தெய்விகக் கலைவிழா

காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின்படி, காஞ்சிபுரத்தில் ஆகம—சிற்ப—வியாச—பாரத—சதஸ், நிகழும் 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 முதல் 25 தேதி வரையில், சிறப்புற நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. **கே. எஸ். நரசிம்ம முதலியார் B. A. B. L., I. A. S.** அவர்கள் அதனைத் துவக்கி வைத்தார்கள். பாரதநாட்டின் பழம்பெருங் கலைகளின் முதன்மையான நோக்கம், கடவுளின் தத்துவத்தை வலியுறுத்துவதுதான் என்றும், இந்தியாவின் புராதன ஆன்மீகச் சிறப்பு நீடித்து வரவேண்டுமாயின், ஆலய வழிபாடு நன்கினிது நடைபெற்று வருதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டு, ஆலயங்களை நன்கினிது பராமரிப்பதற்கும், அவற்றில் பூசைகள் ஆகம விதிகளின்படி சரிவர நடப்பதற்கும், சிவாசாரியர்கள் பட்டர்கள் போன்றவர்களின் நலனைப் பேணுவதற்கும், தம்மால் இயன்றவரை பாடுபட்டு வரப்போவதாக, தமது உரையில் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள்:

பின்னர், **ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள்** சென்ற ஆண்டு செகந்தராபாத்தில் நடந்த சதஸின் மலர் ஒன்றை வெளியிட்டுப் பின்வருமாறு உரை நிகழ்த்தினார்கள்: புராதன ஆலயக் கலைகளை மக்கள் ஆதரிக்க வேண்டும். இதனால் கலைஞர்களுக்கு ஊக்கம் ஏற்படுவதுடன், பழங் கலைகளும் பாதுகாக்கப் பெறும். அர்ச்சகர்கள் வறுமை நிலையில் உள்ளனர். அவர்களது தேவைகளை அரசினர் கவனிக்க வேண்டும். ஆலயங்கட்கு மக்கள் அளிக்கின்ற தரும சொத்துக்கள், ஆலயப் பணிகளுக்கு மட்டும் தான் உபயோகிக்கப்பட வேண்டும். பிரபலமான பெரிய பெரிய கோயில்களுக்குச் சென்று தரிசிப்பதுதான் முக்கியம் என்று மக்கள் நினைப்பது சரியன்று. சிறிய கிராமத்துக் கோயில்களையும் பேணவேணும். கோயில் வருவாயிலிருந்து கோவிற்பணிகளைக் கவனிப்பதுடன், அதில் மீதம் ஆகக் கூடிய தொகை இருக்குமாயின், கோயில் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களது குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்கவும் பயன்படுத்தலாம். சிற்பக்கலையில் பயிற்சி பெற்றவர்களை ஆதரிப்பது மிகவும் இன்றியமையாதது. பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு போன்ற கிராமீயக் கலைகளையும் ஆதரிக்க வேண்டும். கோயில் வழிபாட்டின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகளை ஓரளவாவது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். முனிவர்கள் தவம் செய்து, மன அமைதியும் அருளும்பெற்ற தலங்களில், கோயில்கள் தோன்றியுள்ளன. அதனால் அங்குச் சென்று வழிபடுபவர்களுக்கு மனச் சாந்தியும் அருளும் கிடைக்கும். கிராமங்களில் அர்ச்சகர்களின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகின்றன. கிராமங்களில் உள்ள அர்ச்சகர்கள் தங்களது தினசரி வாழ்க்கையை நடத்துவதற்காக இரண்டு மூன்று கோயில்களுக்குச் செல்லும் நிலை உள்ளது. இந்நிலை நீடிக்குமாயின், இன்னும் ஒருசில ஆண்டுகளில் கோயில்களில் பூசை செய்வதற்கே அர்ச்சகர்கள் யாரும் கிடைக்க மாட்டார்கள் போல் தோன்றுகின்றது. வழிபாட்டிற்குச் செல்லும் பக்தர்கள் இயன்ற அளவு தாராளமாகக் காணிக்கைகளைச் செலுத்தி, கோயிலின் வருமானத்தை உயர்த்தினால் அர்ச்சகர்களின் நிலை உயரும். கோயில்களில் தூய்மையும் அமைதியும் நிலவும்படிப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். கோயிலுக்குச் செல்லுமுன் கைகால்களைச் சுத்தி செய்து கொண்டு, திருநீறு

[அண்மையிற் காஞ்சிபுரத்தில் நிகழ்ந்த ஆகம—சிற்ப—வியாச—பாரத—சதஸ் பற்றி அனுப்பப் பெற்ற அறிக்கையின் தொகுப்பு, இங்கு வெளியிடப்பெறுகின்றது.

—ஆசிரியர்.]

குங்குமம் முதலிய சமய சின்னங்களை அணிந்து கொண்டு செல்லுவது மிகவும் முக்கியம். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது பழமொழி. கோபுரத்தைத் தரிசிப்பதே கோடி புண்ணியமாயின், கோயிலுக்குள் உள்ள மூர்த்தியைத் தரிசித்தால் இன்னும் எவ்வளவு புண்ணியம் கிடைக்கும் என்று சொல்லத் தேவையில்லை. 'சிவ' 'ராம' என்பனபோன்ற இறைவனின் திருப்பெயர்களை அன்புடன் மனத் தூய்மையுடன் உச்சரிப்பதே எல்லா நலங்களையும் தரும் என்று சொல்லி ஆசியுரை வழங்கினார்கள்.

சிவாகம சதஸ் :

ஆகம சிற்ப சதஸின் ஆராய்ச்சி விரிவுரை நிகழ்ச்சிகள் அன்று நிகழ்ந்தன. **ஸ்ரீ அய்யாமணி** சிவாசாரியர் சிவாகமங்களைப் பற்றிய உரைக் கோவையைத் துவக்கி வைத்து, சந்தனபி ஷேகம் பற்றிய பற்பலசெய்திகளை விவரித்தார். தருமபுர ஆதீனம் **ஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார்** பூசைக்குரிய மலர்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்தார். பின்னர் ஆந்திர தேசத்தைச் சேர்ந்த முக்தீசுவர சுவாமி தேவஸ் தானத்தின் தலைமை அர்ச்சகர் **கோனசீமா** சிவாசாரிய ஆகமப் பிரவீண அவவரப்பு **காமேசுவரச் சிவாசாரியார்**, வேதாகம சமன்வயம் பற்றிப் பேசினார். திருக்காளத்தி ஆஸ்தான பண்டிதர் **ஸ்ரீ வெங்கடேசுவர தீட்சிதர்**, விபூதி உருத்திராக்க மகிமைகளையும், அணியும் முறை களையும் பற்றி விளக்கினார். **ஸ்ரீ ஏகாம்பர குருக்கள்**, சிவாலயமும் சிவலிங்கமும்; **ஸ்ரீ சுவாமி நாத குருக்கள்** சிவாகமங்களின் சிறப்பு, அரியலூர்**சுப்பிரமணிய சிவாசாரியார்**சோடசோப சாரங்கள், புதுச்சேரி திரு. **என். ஆர். பட்**, சிவலிங்கம் என்னும் பொருள்கள் பற்றிச் சிறந்த உரைகள் நிகழ்த்தினார்கள்.

ஃபிரெஞ்சு நாட்டுப் பேரறிஞர் திரு. **ஜான் ஃபிலியோசா** அவர்கள், 'கடல் கடந்த அந்தணர்கள்' என்பது பற்றி ஆராய்ச்சிமிக்க அரியதொரு சொற்பெருக்கு ஆற்றினார்கள். அன்று இரவு திரு. **டி. எஸ். கண்ணபிரான் பிள்ளை** அவர்களால் மகாபாரதச் சொற்பொழிவும், திரு. **காங்கேய முதலியார்** அவர்களால் மீனாட்சி கல்யாண வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், ஆந்திர தேசத்திலிருந்து வந்திருந்த குச்சுபுடி குழுவின ரின் நாட்டிய நாடகமும் நடைபெற்றன. திருச்சி திரு. **கே. சடகோபன்** அவர்கள் எடுத் திருந்த செகந்தராபாத் சதஸின் திரைப்படக் காட்சியும் நடைபெற்றன.

வைகானச ஆகமம் :

மறுநாள் வைகானச ஆகமம் பற்றிய உரைக் கோவைகள், காலையிலும் மாலையிலும் நடை பெற்றன. ஸ்ரீவில்லிபுத்தூர் **ஸ்ரீ அலங்கார பட்டர்** உரைக்கோவையினைத் துவக்கி வைத்தார். இராமன், கிருஷ்ணன், திரிவிக்கிரமன், மகாலட்சுமி முதலிய தெய்வத் திருவுருவங் களின் தத்துவ நுட்பங்களை விளக்கினார். அடுத்து, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ இராமகிருஷ்ண **கிருஷ்ணமாசாரிய சுவாமிகள்** சொரூப பேதங்கள் பற்றிச் சொற்பொழி வாற்றினார். வைகானச முறைப்படி பகவானை வழிபடும் முறைகளை **ஸ்ரீ லட்சுமி நரசிம்மபட்** வளவனூர் **ஸ்ரீ லட்சுமி நரசிம்ம பட்டர்**, மைசூர் **ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தீட்சிதர்** ஆகியோர் உரை நிகழ்த்தினர். சூலமங்கலம் **ஸ்ரீ** அரங்கநாத பட்டர் காலை முதல் இரவு வரையில் அர்ச்சகர் மூர்த்திக்குச் செய்ய வேண்டிய உபசார முறை களை விவரித்தார். திருவாவடுதுறை ஆதீனத் தைச் சேர்ந்த திரு. **ஜி. சுவாமிநாத குருக்கள்** பிரதட்சிண விதிப்பலன்கள் பற்றி விரிவுரை நிகழ்த்தினர்.

பரதக் கலை :

அன்று பிற்பகல் நிகழ்ச்சிகள் அரியலூர் வேதாகம பாடசாலை மாணவர்களின் பதிபசு பாசம் பற்றிய உரையாடலுடன் ஆரம்ப மாயின. 'விமான லட்சணங்கள்' பற்றித் திரு வாவடுதுறை ஸ்ரீ **ஜி. சுவாமிநாத** குருக்கள், ஒரு கட்டுரை வாசித்தார். மெலட்டூர் **ஸ்ரீ பாலுபாக வதர்**, மக்களிடையே பக்தியைப் பெருக்க நாட் டியக் கலையைப் பயன்படுத்தும் முறைகள் பற்றி விவரித்தார். **ஸ்ரீ கிருஷ்ணசுவாமி அய்யங் கார்** 'பஞ்சசூக்தி' பற்றியும்; நாதெள்ள **ஸ்ரீ இராமேசுவர குருக்கள்** 'ஆகமிக பரம்பரை' பற்றி யும்; **ஸ்ரீ வேணுராமமூர்த்தி** 'தியாகராஜரின் கீர்த்தனைகளில் துளசிதாசரின் கருத்துக்கள்' பற்றியும், திரு **ஆர். கணேசன்** என்ற மாணவர் 'சதஸ்' என்பது பற்றியும் உரை நிகழ்த்தினர்.

அன்று இரவு சென்னை எம். ஓ. கிருஷ்ணசாமியின் விகடக் கச்சேரியும், திருவாரூர் அந்தகப் புலவரின் பாரதப் பிரசங்கமும், ஸ்ரீ சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டும், திருச்சி கே. சடகோபன் அவர்கள் எடுத்துள்ள ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த வேமுலவாடாவில் உள்ள அரிஹரர் கோயில் பற்றிய செய்தித் திரைப்பட நிகழ்ச்சியும், ஸ்ரீ ஆதிமூலம் பிள்ளை குழுவினரின் பொம்மலாட்டமும் நடைபெற்றன. சதஸின் முடிவில் புதுப்பெரியவாள் ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்கள், பக்தியின் அவசியத்தையும், ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை செய்வதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். ஸ்ரீ காஞ்சி ஆசாரியாரின் அருமை பெருமைகளைப் பற்றி டாக்டர் வி. ராகவன் அவர்கள் விரித்துரைத்தார்கள்.

பாஞ்சராத்திர ஆகமம் :

மூன்றாவது நாள் நடைபெற்ற பாஞ்சராத்திர ஆகமம் பற்றிய சர்ச்சையில், ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ ராகவபட்டர் 'அர்ச்சாவதாரமும் மூர்த்தி லட்சணமும்' என்பது பற்றி உரை நிகழ்த்தினர். திருப்பதி கேந்திரீய சம்ஸ்கிருத வித்யா பீடத்தைச் சேர்ந்த திரு. சீனிவாச ஐயங்கார், கோயில்களை அமைப்பதற்கு வெறும் சாஸ்திர ஞானம் மட்டும் போதாது; அனுபவ ஞானமும் வேண்டும் என்றார். சிவாகமங்களில் குமாரக் கடவுளைப்பற்றிப் பல அத்தியாயங்கள் கூறப்பட்டிருப்பதாகச் சிவாசாரியர்கள் அறிவித்தனர். பிற்பகலில் திரு. சேஷபட்டர் 'ஸ்நானசனம்' என்பது பற்றிப் பேசினர். திருப்பதி கேந்திரீய வித்தியா பீடத்தைச் சேர்ந்த திரு. எச். வி. பாலசுப்பிரமணியம் ஆகமகோசத் தொகுப்பு விவரங்களைக் கூறினர். வைகானச ஆகமம் பற்றிய தொகுப்பு வேலை முடிந்துவிட்டது என்றும், தெரிவித்தார். பாஞ்சராத்திர ஆகமங்கள் பற்றிய வேலையும் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும், சுவடிகள் வைத்திருப்போர் கொடுத்து உதவினல் நலம் என்றும் கூறினர். அடுத்து டாக்டர் பிரபாகரி ஆப்டே 'மண்டலங்கள்' பற்றி வண்ண வரைபடங்களின் உதவியுடன் உரை நிகழ்த்தினர். பௌஷ்கர சம்மிதையில் 25 மண்டலங்கள் கூறப்பட்டுள்ளன. க்ஷேத்திர கணிதம், வர்ணகளேபரங்கள் என்னும் இரு அம்சங்களிலும் இவை அழகு நிறைந்து காணப்படுகின்றன. இந்த 25 மண்டலங்களும், 25 விதமான கோயில் கட்டிடங்களின் வரைவு அமைப்புகளா (Plan) என்பது ஆராய்தற்குரியது என்றார். பின்னர் திரு. பெ. நா. அப்புசுவாமி அவர்கள், இறைவனின் திருநாமத்தை நினைத்து உச்சரிப்பதனுல் எவ்வளவு பெரிய அபாயமும் நீங்கும் என்பதைப் பலசான்றுகளுடன் விளக்கினர்.

பின்னர் தினமணி துணை ஆசிரியர் திரு. ஏ. ஜி. வெங்கடாசாரியார், 'தன்னைக் காப்பவனைத் தருமம் காக்கிறது' என்பது இராமனுக்குச் கௌசலை செய்த உபதேசம். நம் பரமாசாரிய சுவாமிகளும் இப்பொழுது இதைத்தான் மக்களுக்கு உபதேசிக்கின்றார். நம் கலைகளெல்லாம் தர்மத்தைக் காப்பவையாக இருக்க வேண்டும். நல்ல பொருள்களையெல்லாம் முதலில் பகவானுக்கு அர்ப்பணிப்பது நம் பண்பு. நமது புராதனக் கலைகளெல்லாம் பகவத் அர்ப்பணமாகவே உள்ளன. தெய்வ வடிவங்களை வடிப்பதற்காகவே சிற்பக்கலை பெரிதும் பயன்படுகின்றது. இந்த அரும்பெரும் கலை அழிந்துவிடாமல், அதனைக் காத்துப் புத்துயிர் அளிப்பதற்காக, ஆசாரிய சுவாமிகள் அரும்பாடுபட்டு வருகின்றார். அரசினரின் கையை எதிர்பாராமல், பொதுமக்கள் தாங்களே கோயில்களைப் பழுதுபார்த்து பாதுகாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். பொது மக்கள் தினமும் கோயில்களுக்குச் சென்று வழிபடுதல் அவசியம் என்று வற்புறுத்தினர்கள்.

பின்னர், கணிதமேதை திரு. என். சஞ்சீவராய சர்மா தமது மேதையை விளக்கும் வகையில், சில அரியபெரிய கணக்குகளையெல்லாம் மனத்தினலேயே போட்டுக் காட்டினர். அடுத்து திரு. நடராசச் செட்டியாரின் கிருஷ்ணன் தூது கதாகாலட்சேபமும், ஸ்ரீ குருகுல ராமமூர்த்தி குழுவினரின் கரக ஆட்டமும், கும்பகோணம் ஸ்ரீ முருகன் பொம்மலாட்டக் குழுவினரின் பொம்மலாட்ட நிகழ்ச்சி ஆகியவையும் நடைபெற்றன.

சிற்பக்கலை ஆராய்ச்சி :

சிற்பக்கலை ஆராய்ச்சி பற்றிய கூட்டத்தின் தொடக்கத்தில், மாவட்ட நீதிபதி திரு. சாமிக்

கண்ணா அவர்கள் பேசினார்கள். காஞ்சி ஏற்கெனவே புனிதமான புண்ணியத் தலம். பெரியவாளால் இது மற்ற எல்லாப் புண்ணியத்தலங்களையும் விட மேன்மை பெற்றுவிட்டது. கடவுள் வழிபாடு ஆத்மாவைப் பகவானிடம் அர்ப்பணிப்பதாகும். கடவுள் நிலையை உணர ஆகமங்கள் உதவுகின்றன. நம் நாட்டுக் கலைகள் அனைத்தும் ஆன்மீகத்தை உணர்த்தவே பயன்பட்டு வந்திருக்கின்றன. திருவிழாக் காலங்களில் கருத்தமைந்த நல்ல நாடகங்கள் நடிக்கப் பட்டதாக 'மாலதி மாதவம்' கூறுகின்றது. 'நம் ஆலயங்கள் எல்லாக் கலைகளுக்கும் நிலைக்களமாக விளங்குகின்றன' என்று குறிப்பிட்டு, கீதைக்கும் திருக்குறளுக்கும் உள்ள ஒற்றுமைகளை அவர் விளக்கினார். பின்னர் முன்னாள் ஆணையர் திரு. **ஆ. இராதாகிருஷ்ணன்** அவர்கள் பேசுகையில், ஆலய வழிபாட்டின் பயனைப் பாமர மக்களுக்கு உணர்த்த ஸ்ரீ ஆசாரியார் ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டினைப் பாராட்டினார். பின்னர் திரு. **கணபதி ஸ்தபதி** அவர்கள் 'பிராசாதம்' என்பது பற்றி ஒரு கட்டுரை படித்தார். அவர் தமது உரையில் ஏழுவித விமானங்களின் இலக்கணங்களைக் கூறி, அவற்றை அமைப்பதால் ஏற்படும் பலன்களை விளக்கினார். சிற்பத்தின் அளவைக்கு, காஞ்சிபுரத்தில் விளையும் நெல்லை அடிப்படை அலகு (unit) ஆகக் கொள்ள வேண்டும் என்று விசுவகர்மா கூறியிருப்பதாகக் குறிப்பிட்டார். கர்ப்பக்கிரகம் உபபீடம் அதிஷ்டானம் விமானம் பிராகாரங்கள் பரிவார தேவதைகள் ஆகியவைபற்றி அவர் மேலும் விளக்கினார்.

பிற்பகலில் திரு. **கௌரீசங்கர்** ஸ்தபதி, 'பிரதிமாலட்சணம்' பற்றிப் பேசுகையில் விக்கிரக அமைப்பில் கையாளப்படும் தானம்-மானம்-சூத்திரம் முதலியவைகளை விளக்கினார். அடுத்து டாக்டர் **பரமசிவம்** அவர்கள் பேசுகையில், புராதன முறையில் மண்ணில் இருந்து தயாரிக்கப்படும் வண்ணங்களைக் கொண்டு கோபுரங்களுக்குப் பூசுவதுதான் சிறப்பு என்று வற்புறுத்தினார். அடுத்து மாமல்லபுரம் அரசினர் சிற்பக் கலைப் பயிற்சிக் கல்லூரியின் தலைவர் திரு. **கணபதி ஸ்தபதி** அவர்கள், உத்திரமேரூர்க் கோயிலில் உள்ள அஷ்டாங்க விமானத்தின் சிறப்புகளை விளக்கி, அவ்விமானத்தின் அமைப்பு மரீசி முனிவர் இயற்றிய விமாஞசனக் கல்பத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லும் பொருந்தும்படி இருக்கின்றது என்றார். நாகர் கோயில் திரு. **ஆறுமுக ஸ்தபதி** விநாயகர் திருவுருவின் தத்துவங்களை விளக்கினார். திருப்பதி தேவஸ்தானத்தின் சிற்பப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. **தேவ. சண்முகநாதஸ்தபதி** சிற்பிகளின் தகுதிகளையும், சிற்பக் கலையில் பயன்படுத்தப்படும் முழக்கோல் தயாரிக்கும் முறைகளையும் விவரித்தார். திருச்சி மாவட்டம் மணக்காலைச் சேர்ந்த **அன்பறிவழகன்** என்னும் சிறுவனின் திருக்குறள் அவதான நிகழ்ச்சி நடைபெற்றது. திருக்குறளிலிருந்து அதிகாரத்தின் பெயரையும், பாட்டின் எண்ணையும் சொன்ன உடனே அச்சிறுவன் அந்தந்தக் குறளை வியத்தகு முறையில் ஒப்புவித்தான். பின்னர் திரு. **சுப்பண்ணா** சதாவதானியின் அஷ்டாவதான நிகழ்ச்சியும் நடைபெற்றது. அன்றிரவு வங்காளத்தைச் சேர்ந்த ஸ்ரீ **ரத்தீன்கோஷ்** குழுவினரின் பஜனை, திரு. **பிரமீச முதலியா**ரின் பாரதச் சொற்பொழிவு, சென்னை திரு. **கே. விஸ்வநாதனி**ன் சிவதாண்டவம், சாத்தூர் திரு. **பிச்சுக்குட்டி** குழுவினரின் கலை நிகழ்ச்சி ஆகியவைகள் நடைபெற்றன.

புதுப் பெரியவாள் ஆசியுரை:

கலைவிழாவின் கடைசிநாள் மாலையில், காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ **ஜயேந்திர சரசுவதி சுவாமிகள்** (புதுப் பெரியவாள்), முடிவுரையும் ஆசியுரையும் கூறியருளினார்கள். ''ஆகம சிற்ப வித்வ சதஸ் இன்றோடு முடிவடைகின்றது. நிபுணர்கள் ஆகமங்கள் பற்றியும் சிற்பக்கலை பற்றியும் சுவையான ஆராய்ச்சியுரைகள் நிகழ்த்தினார்கள். பொதுமக்கள் திரளாகக் கூடி இத் தெய்விகக் கலைகளை ரசித்தனர். சினிமாவைத் தவிர மற்றைய கலை நிகழ்ச்சிகளுக்குப் பொதுவாகப் பெருந்திரளான கூட்டம் கூடுவதில்லை. ஆனால் இப்பொழுது இந்த சதஸ்களில் பெருந்திரளான கூட்டம் கூடத் தொடங்கியிருப்பது, மகிழ்ச்சிக்குரியது. மனத்திற்குச் சாந்தியளிப்பதே கலைகளின் நோக்கம். கலை என்ற பெயரில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இங்கு நடக்கும் கலைநிகழ்ச்சிகளைக் காணும்போது ஏற்படும் மன அமைதி மற்ற கலைகளைக் காணும்போது ஏற்படுகிறதா என்பதை, அவரவர்களே யோசித்து முடிவு செய்து கொள்ள வேண்டும்.

நாம் அன்ருட வாழ்க்கையில் அனுபவிக்கும் கஷ்டங்களேயே மற்ற கலேகள் பிரதிபலிக்கின்றன. இலவசமாகவே கிடைக்கும் கஷ்டங்களே நாம் சினிமாவிற்கும் நாடகத்திற்கும் சென்று காசு கொடுத்து அனுபவித்து விட்டு வருகின்ருேம். கலேகள் தூய உணர்ச்சிகளேத் தூண்டுவனவாக இருக்க வேண்டும். மனிதன் நல்லவனுக வாழக் க்டவுள் பக்தியும், அவனுக்கு மனச்சாந்தி தர நல்ல கலேகளும் அவசியம். கோயிலுக்குப் போய் நாம் செய்யும் தவறுகளே மன்னித்து விடும்படி பகவானே பிரார்த்திப்பதுடன், இனி அத்தவறுகளேச் செய்யாமல் இருக்க, காலே மாலேகளிலும் இரவில் உறங்கச் செல்லும்போதும், இறைவனே நினேத்து வணங்குவது அவசியம். மனத்திற்கு விகாரம் ஊட்டும் கலேகளே விடுத்து, சாந்தி அளிக்கும் கலேகளே ரசிக்கப் பொது மக்கள் பழகிக் கொள்ள வேண்டும். பகவானேப் பக்தி பண்ணிவிட்டு உடனே கைம்மேற் பலன் கிடைக்கும் என்று, எதிர்பார்க்கக் கூடாது. தேங்காயை உடைத்து விட்டு அதற்குப் பிரதி பலன் கேட்கக் கூடாது. அப்படிக் கேட்டால் அது வெறும் பண்டமாற்று; வியாபாரமாகி விடும். பகவானிடம் இல்லாதது ஒன்றும் இல்லே. நாம் கொடுத்து அவருக்கு ஆகவேண்டுவது எதுவும் இல்லே. நாம் அவருக்குக் கொடுக்கக் கூடியது பக்தி கலந்த மனம் ஒன்றுதான். சிறந்த பக்தியையும் நல்ல புத்தியையும் கொடுக்கும்படி நாம் இறைவனேக் கேட்க வேண்டும்.

இந்த சதஸ் போன்ற நல்ல சூழ்நிலேகள் நிலவும் இடங்களில் பொது மக்கள் பெருந் திரளாகக் கலந்து கொள்ள வேண்டும். மேலும் இதுபோன்ற சூழ்நிலேயை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். இந்த சதஸ் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வோர் இடத்தில் நடக்கின்றது. ஒரு ஆண்டு நடந்த இடத்தில் மறு ஆண்டும் இத்தகைய சதஸ்கள் சிறிய அளவிலாவது அந்தந்த ஊர்மக்களால் நடத்தப்படுவது, நலம்பயக்கும். திரு. வி. என். பெருமாள் நாயுடு, திரு. எல்லப்ப முதலியார் முதலிய அன்பர்கள் பலர் செய்த ஏற்பாடுகளால், இந்த சதஸ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அரசினர் தாராளமாக உதவி அளித்தனர். கேந்திரீய சம்ஸ்கிருத வித்தியா பீடத்தினர் பூரண ஒத்துழைப்பு நல்கினர். சென்னே ஸ்ரீ எம். கே. ரெங்கசாமி அய்யங்கார் கண்காட்சி வைக்கக் கோயிற் படங்களே அனுப்பி உதவினுர். இவர்களின் அன்பும் தொண்டும் பெரிதும் போற்றத் தக்கவை'' என்று புதுப் பெரியவாள் அவர்கள் ஆசியுரை வழங்கினுர்கள்.

வரவேற்புக் குழுவின் சார்பில் டாக்டர் திரு. சி. என். வி. இராஜப்பாவும், வித்வத் சதஸ்களின் சார்பில் ஸ்ரீ கலியாணசுந்தரம் ஐயரும் நன்றியுரை நவின்றனர். ஆகம சிற்ப வியாச பாரத சதஸ் மிகவும் சிறப்புற நடைபெற்று, இனிது நிறைவெய்தியது.

— ஆசிரியர்.

மகாபாரதம்

அருள்மொழியரசு
(திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்)

அரங்கேற்றம் :

ஒருநாள் துரோணருக்குப் பாண்டவர்களும் கௌரவர்களும் தங்கம், பட்டு இவைகளைக் குருதட்சிணையாகத் தந்தார்கள். துரோணர், ''மாணவர்களே! இந்தப் பொன்னும் மணியும் வேண்டாம். இதை நான் விரும்பவில்லை. எனக்குச் சிறந்த குருதட்சிணை எது என்றால், பாஞ்சால தேயத்து மன்னன் துருபதனை உயிரோடு தேர்க்காலில் கட்டிக்கொண்டு வரவேண்டும்'' என்றார்.

''அப்படியே செய்கின்றோம்'' என்று கூறி விட்டு மிகுந்த ஊக்கத்தோடும் உவகையோடும் அக்குமாரர்கள் கவசத்தை யணிந்துகொண்டு பாஞ்சால நகரை நோக்கிப் புறப்பட்டார்கள். பாண்டவர்கட்கு முன்னே துரியோதனன், கர்ணன், விகர்ணன் முதலியோர் வேகமாகச் சென்று நகரை வளைத்துப் போர்க் கருவிகளால் தாக்கினார்கள். பாஞ்சால மன்னனாகிய துருபதன் தன் தம்பியர்களுடனும் நால்வகைச் சேனைகளுடனும் போருக்கு வந்தான். கொடிய கடும் கணைகளை மழைபோல் பொழிந்தான். துரியோதனாதியர்களும் தத்தம் வில்லை வளைத்துக் கணைகளைச் சொரிந்து போர் புரிந்தார்கள். துருபதன் சிங்கம் போல் திரிந்து அவர்களது வில் முதலியவற்றை அறுத்து அவர்களின் உடம்பைப் புண்படுத்தினான். அவர்கள் அல்லல்பட்டு அத்தினபுரத்தை நோக்கிப் பின்வாங்கிச் சென்றார்கள்.

அர்ச்சுனன் துருபதனைத் துரியோதனனால் வெல்ல முடியாது என்றும், அவன் கர்வபங்கம் அடையட்டும் என்றும் கருதித் தன் உடன் பிறந்தாருடன் பாஞ்சால நகருக்கு அரை குரோச தூரத்தில் தங்கியிருந்தான். துரியோதனாதியர் ஓடியதைக் கண்டு சிரித்து இளம் சிங்கம் குகையில் இருந்து புறப்படுவதுபோல் சென்றான். தருமரை, ''நீர் போர் புரிய வேண்டாம்'' என்று ஒருபுறம் நிறுத்தி விட்டு, நகுல சகாதேவர்களை தேர்ச்சக்கரத்தைக் காக்குமாறு பணித்துப் பீமசேனனுடன் சென்று துருபதனுடைய சேனைகளைத் தாக்கினான். பீமன் கதையை எடுத்து, யானைச் சேனையில் புகுந்து கடல் நீரை முதலை கலக்குவது போல் கலக்கினான். பெரிய பெரிய யானைகளை ஒவ்வொரு அடியில் அடித்து மலைகளை இந்திரன் சிறகரிந்தது போல் வீழ்த்தினான். தும்பிக்கையைப் பிடித்துச் சுழற்றி வேடிக்கையாகவே கொன்றான். அநேகர் நம்பிக்கையிழந்து மாண்டார்கள்.

அர்ச்சுனன் துருபதனை விரைந்து எதிர்த்தான். மகாபலிக்கும் இந்திரனுக்கும் நடந்த போரைப் போல் அது உக்கிரமாக இருந்தது. இருவரும் விட்ட பாணங்கள் விண்ணையும் மண்ணையும் மூடி விட்டன. அடிக்கடி வீர முழக்கம் செய்தார்கள். சத்யஜித் என்பவன் துருபதனுக்குத் துணையாக வந்து அர்ச்சுனனுடன் போர் புரிந்தான். வில்லும் தேரும் இழந்து புறந்தந்து போனான்.

துருபதன் மிக்க வேகமாகக் கணைகளைச் சொரிந்து போர் புரிந்தான். அவன் விட்ட கணைகளை யெல்லாம் அழித்து, தேர், வில் இவைகளை ஒடித்து, துருபதனைக் கருடன் நாகத்தைப் பற்றுவது போல் பற்றித் தன் தேர்க்காலில் கட்டி, பீமனைப் பார்த்து, ''அண்ணா! வீணே இனி இந்தச் சேனைகளைக் கொல்ல வேண்டாம்'' என்று கூறி வெற்றிச் சங்கத்தை முழக்கிக் கொண்டு, உடன் பிறந்தாருடன் வந்து துருபதனைத் துரோணரிடம் தந்தான்.

துரோணர், அந்த அரசசபையில் துருபதனைப் பார்த்துப் புன்னகை புரிந்து ''வீரசிங்கமே! மிக்க இளைஞனாகிய இந்த வீரனால் நீ தோற்றனை போலும். தோழனே! உன் உயிருக்கு இறுதி வரும் என்று அஞ்சாதே. நான் பிராமணன்; உன்பால் கோபிக்கவில்லை. நாம் இருவரும் நண்பர்கள். ஆனால், நீ மதிகெட்டு ஏழைக்குத் தனவந்தனுக்கும் நட்பு ஏது? என்று கூறினாய். நீயும் நானும் என்றும் நட்பாக இருக்க வேணுமானால் அதற்கு இரு வழிகள். ஏழையாகிய என்னைப்போல் நீ ஏழையாக வேண்டும். உன்னை ஏழையாக்க நான் விரும்பவில்லை. அடுத்த வழி உன்னைப் போல் நான் தனவந்தனாக வேண்டும். கங்கையில் தென்கரையில் உள்ள ராஜ்யத்தை நீ அடைவாயாக. வடகரையில் உள்ள பாஞ்சால ராஜ்யத்தை நான் அடைகின்றேன். நீயும் அரசன்; நானும் அரசன். இனி நாம் நட்பாக இருக்கலாந்தானே?'' என்றார்.

நாணிக் கோணி நின்ற துருபதன், ''நல்லது'' என்றான். ''துருபதனே! இனி யாவது நன்றி மறவாதே. பண்பாட்டை விடாதே. போய் அரசு செய்'' என்றார் துரோணர். அஹிச்சத்ராபுரி என்ற தேசத்தை அடைந்தார்.

துருபதன் துரோணரைக் கொல்வதற்கு ஒரு புதல்வனும், தனஞ்சயனை மணந்து கொள்ள ஒரு புதல்வியும் தனக்குப் பிறக்க வேண்டும் என்று, அதற்குரிய உபாயத்தை நாடி உலகமெல்லாம் திரிந்தான். துருபதனுக்குத் தூக்கம் வரவில்லை. பெருமூச்சு விட்டுக் கொண்டு துரோணருடைய பேராற்றலை நினைத்துப் பெரிதுங் கலங்கினான்.

கானிடைத் தவஞ் செய்யும் முனிவர்களிடம் போய், ''ஆயிரம் ஆயிரம் பசுக்களையும்பொன்களையுந் தருகின்றேன். துரோணரைக் கொல்லுகின்ற ஒரு மகனும், அர்ச்சுனனைப் புல்லுகின்ற ஒரு மகளும் பிறக்குமாறு வேள்வி செய்யுங்கள் என்று வேண்டினான். முனிவர்கள், ''துருபதனே! நாங்கள் ஆக்கவேலைக்கு உதவி செய்வோம். அழிவு வேலைக்கு உதவமாட்டோம். தனஞ்சயனை மருவுகின்ற பெண் மகவை உண்டாக்குவோம். துரோண முனிவரைக் கொல்லுகின்ற ஒருவனை உண்டாக்க மாட்டோம். அர்ச்சுனனைக் கொண்டு உன்னை உயிருடன் கட்டிக் கொணருமாறு செய்தார். நீ இளம் வீரன் கையில் அகப்பட்டாய். துரோணர் அப்போது அர்ச்சுனனைப் பார்த்து, ''தனஞ்சயனே! இவனை வெட்டு'' என்று கூறியிருந்தால் அர்ச்சுனன் வாளால் உன் தலை உருண்டிருக்குமே? அப்படி உன்னை வெட்டாமல் உயிர்ப்பிச்சை நல்கி உதவிய ஒரு உத்தமனைக் கொல்லவா நீ முயலுகின்றாய். இது பிழையான முயற்சி; இந்த முயற்சி அறத்துடன் கூடியதன்று. ஒரு சாதுவான அந்தணனைக் கொல்ல முயன்றால் ஒரு காலம் உன் பாஞ்சால வம்சமே அழிந்து போகும். ஆதலால் இம் முயற்சியை விட்டு விடு'' என்று சில முனிவர்கள் கூறினார்கள்.

நாணமும் கோபமும் உடைய துருபதன் தன் முயற்சியை விடாது அலைந்தான். கங்கைக் கரையில் உள்ள கல்மாஷி என்ற நகரத்திற்கு அருகில் ஒரு சில அந்தணர்கள் வாழ்ந்தார்கள். துருபதன் அங்கு சென்றான்.

அங்கே கடுந்தவமும் உறுதியும் ஆசாரமும் உடைய உபயாசன் என்ற முனிவரைப் பணிந்தான். ''தபோதனரே! பொன்குப்பி யணிந்த ஆயிரம் பசுக்களையும், இரத்தினங்களையும் விரிப்புக்களையுந் தருகின்றேன். வேள்வியின் மூலம் துரோணரை வதஞ் செய்யும் மகனையும், பார்த்தனை மனஞ்செய்யும் பாவையையுந் தருவீர்'' என்று வேண்டிக் கொண்டான்.

''துருபதனே! பயன் கருதி நான் ஒன்றையுஞ் செய்யமாட்டேன். எனக்கு விருப்பு வெறுப்பு கிடையாது'' என்று கூறி மறுத்து விட்டார். துருபதன் அவருடைய கருணையைப் பெறும் பொருட்டு ஓராண்டு அங்கேயே

இருந்து அவருக்குப் பணிவிடை செய்துகொண் டிருந்தான்.

உபயாஜர் துருபதனைப் பார்த்துக் கூறுகின் ருர். "மன்னவனே! நீ உன் நாடு நகரம் அரண்மனை படுக்கை முதலிய அனைத்தையுந் துறந்து இந்த வசதியில்லாத இடத்தில் ஓராண் டாக வசிக்கின்ருய். உன் நிலைமைக்கு நான் இரங்குகின்றேன். அதோ அங்கே தவஞ் செய் கின்ருரே அவர் என் தமையனுர். யாஜர் என்ற பேருடையவர். அவர் உன் கருமத்தை முடித்து வைப்பார். அவருக்குப் பொருளில் பற்றுண்டு என்று நான் கருதுகின்றேன். மனித சஞ்சார மில்லாத காட்டில் ஒற்றையடிப்பாதையில் அவர் போய்க் கொண்டிருந்தார். அங்கே வழி யில் கிடந்த ஒரு மாம்பழத்தை எடுத்தார். எடுத்து "இது யாருடைய பழமோ? யாரா வது வைத்துவிட்டுச் சென்ருர்களோ? அவர் களிடம் இருந்து நழுவி விழுந்து விட்டதோ? இதற்கு உடையவர்கள் ஒருக்கால் தேடிக் கொண்டு வரக்கூடும். ஆதலால் தெளிவு பெருத இதனை நான் ஆசைப்பட்டு எடுப்பது முறையன்று" என்று நினைத்து அப்பழத்தை அங்கேயே வைத்துவிட்டுச் சென்ருர். இந்த நிகழ்ச்சியை நான் ஒரு புறம் இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். இதனுல் அவரை ஆசை வயப்பட்டவர் என்று அன்று தீர்மானித்தேன். ஏன் தெரிகின்றதா? "எடுத்த பழத்தை வைத்துவிட்டாரே? அப்படியானுல் அவர் ஆசையில்லாதவர்தானே?" என்று கூட உனக்குத் தோன்றலாம். வேந்தனே! நுட்ப மாகக் கேள். அப்போது தான் உனக்கு விளங் கும். பழத்தைக் கண்டவுடன் எடுத்துக்கொண் டார். எடுத்துக்கொண்ட பின் யாருடையதோ என்று ஆராய்கின்ருர். வழியில் கிடந்த ஒன் றில் மனம் பற்றவே கூடாது. அதுதானே பற் றற்ற உள்ளத்துக்கு அடையாளம். விரும்பி எடுத்துக்கொண்டு, பின்னர் சிந்தித்துக் கீழே வைத்தார். அது சிறந்த அறமன்று. அன்றியும் இளமையில் உஞ்ச விருத்தி செய்து வேதம் ஓதிக் கொண்டிருந்த காலத்திலும் உணவின் சுவையைப் பற்றிச் சிறப்பித்துப் பேசுவார். கல்வி கற்போன் நாவுக்கு அடிமையாகக் கூடாது. இத்தகையஊகத்தால்தான் அண்ணன் நீ தரும் செம்பொன்னுக்காக உனக்கு யாகஞ் செய்யக்கூடும் என்றேன்" என்று கூறினுர்.

இதனைக்கேட்ட துருபதன் வருந்திய மனம் உடையவனுய் யாஜன் என்ற அந்தணருடைய ஆச்சிரமத்தை யடைந்தான். அவரைப் பணிந் தான்.

"முனிபுங்கவரே! நான் பாஞ்சால நாட்டு மன்னன். என் பேர் துருபதன். துரோணர் என்னை மிகவும் அவமானப்படுத்தினுர். என் மனம் கொதிப்புற்றுள்ளது. அவர் போரில் கார்த்த வீரியார்ச்சுனனுக்கும் பரசுராமருக்கும் கட்வாங்கனுக்கும் நிகரானவர். அவருடைய வில் ஆறு முழ நீளமுள்ளது. அதில் இருந்து புறப்படும் கணைகள் மன்னர்களின் மார்புகளைப் பிளக்கும் வலிமை யுள்ளவை. அவரை யாரும் வெல்ல முடியாது. காய்ந்த புல்லைக் கனல் எரிப்பது போல் அவர் பகைவரின் கூட்டங்களை எளிதில் எரிக்கத் தக்கவர். அவரைச் சதா நினைத்து நான் பெருமூச்சு விட்டுக் கொண் டிருக்கின்றேன். அவருடைய உத்தமமான சீடன் அர்ச்சுனன். அவன் இளமையிலேயே மூவுலங்களையும் வெல்லும் பேராற்றல் பெற் றுள்ளான். அதனுல் அவனை நான் மருகனுக அடைந்துவிட்டால் அவனிடமிருந்து பயம் ஏற்படாது. எனவே அர்ச்சுனனை மணக்கும் ஒரு ஆண் மகவையும், துரோணரை வதைக்கக் கூடிய ஒரு பெண் மகவையும் தாங்கள் சிறந்த வேள்வி செய்து உண்டாக்கும். தங்கட்கு எண் ணூறு பசுக்களைத் தருவேன். வேண்டிய நிதி களை விரும்பித் தருவேன் என்றுன்.

யாஜர் "வேந்தே! வருந்தற்க. அதுபடியே அந்த அரிய வேள்வியை உனக்குச் செய்து உன் கவலையை மாற்றுவேன். யாகத்துக்கு உரிய சாதனங்களைச் சேகரஞ் செய்" என்ருர். யாகத் திரவியங்கள் நிரம்பவும் தயார் செய்யப் பட்டன.

யாஜர் தன் தம்பி உபயாஜரை யழைத்து "நீ இதில் உதவி செய்" என்ருர். விருப்ப மில்லாத உபயாஜர் தந்தைக்கும் குருவுக்கும் சமானமான தமையனுர் மொழியை மறுக்க மாட்டாமல் வேண்டிய கிரியைகள் செய்வதில் உதவியாக இருந்தார். யாகம் முறைப்படி நடந்தது. அந்த யாகத்துக்கு ஸௌத்ராமணி என்று பேர். யாகம் செம்மையாக நிறைவேறி யது. பூரணுகுதி கொடுத்தார். யாக அவிசை

உண்பதற்குத் துருபதன் மனைவியான கௌசவி என்பாளை அழைத்தார். அவள் அந்த சமயம் நீராடாமல் இருந்தாள். அவளைப் பார்த்து நீ இதையுண்டு மகப்பெறும் தகுதியை யிழந்தாய். என் தவ வலிமையால் இதோ இப்போதே குழந்தைகளை உண்டாக்குவேன்'' என்று கூறினர்.

அந்த அவிசை இரண்டாகப் பகிர்ந்தார். ஒரு பகுதியை வேள்வியிலிட்டு அதற்குரியமந்தி ரங்களைக் கூறினர். உடனே வேள்விக் குண்டத் திலிருந்து, மகுடம், கவசம், வாள், வில், அம்பு இவைகளைத் தரித்தவனும், சுடர்விடு கின்ற நெருப்பைப் போன்ற வண்ணமுடைய வனுமாகிய ஒரு குமாரன் பிறந்தான்.

இவன் துரோணருக்குச் சீடனுகவும் இயமனு கவும் பிறந்திருக்கின்றுன். ''பாஞ்சாலருடைய குலத்தை வளர்த்துத் துருபதனுடைய துயரைப் போக்குவான்'' என்று அசரீரி வாக்கு உண் டாகியது.

மற்றப் பகுதியை யாஜர் வேள்வியில் இட்டு முறைப்படி மந்திரஞ் சொன்னவுடன் அழகே ஒரு வடிவாயும் ஒப்பற்றவளும், திருமகளே மானிட உருவங்கொண்டு வந்தது போலவும், ஒரு பெண்மணி தோன்றினுள். அவளுடைய மேனியிலிருந்து எழுந்த மணம் ஒரு குரோச தூரம் வீசியது.

1. ''மண்மேல் ஒருத்தி முன்னர் அசுரர் குலம் மாளப் பிறந்தாள். இவள் இப்போது சிவமூர்த்தியின் கண்மேல் பிறந்தாள். இவள் அரசகுலம் முழுவதையும் அழித்துப் பூபாரந் தீர்ப்பாள்'' என்று வார்த்தை விண்மேல் எழுந்தது.

''திருஷ்டத்தய்ம்னன்'' [1] என்றும் ''கிருஷ்ணை'' [2] என்றும் இவருக்கும் பேரிட் டார்கள்.

துருபதனும் பாஞ்சாலர்களும் பெருமகிழ்ச்சி யுற்றுர்கள். மக்களுடன் துருபதன் பாஞ்சால நகரை யடைந்தான். திருஷ்டத்யும்னன் வேத வேதாந்தங்களைக் கற்றுன். வில் வேதம் பயின்றுன். அவனுக்கு அக்கலையில் நிறைவு பெறவில்லை. துரோணர் தான் சிறந்த வில்லா சிரியர் என்று அறிந்தான். பிதாவிடம் விடை பெற்றுச் சென்றுன். அத்தினபுரம் போய்த் துரோணரது பாதமலர்மீது வீழ்ந்தான்.

அவர் ''குழந்தாய்! நீ யார்? உன் பேர் யாது? உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

அவன் ''குருநாதா! நான் துருபதன் மகன். என் பேர் திருஷ்டத்யும்னன். தங்கள்பால் வில் வேதம் பயில வந்தேன். அருள்புரிய வேண்டும்'' என்றுன். அப்போது துரோணர் தன் மனத்துக்குள் ''இவன் நம்மைக் கொல்லும் பொருட்டு வேள்வியிற் பிறந்தவன். இவன் நம்மிடம் வித்தையை வேண்டி வந்துளான். மர ணத்துக்கு அஞ்சுவது அறிவுடைமையாகாது. அறிஞருக்கு மரணம் திரணமாகும். என் மரணத்துக்கு விதிதான் காரணம். மரணத்தை யாராலும் தடுக்க முடியாது. இவன் காரணனுக மாட்டான். இவனை நான் வெறுத்து அனுப் பினுல் மரணம் வராது ஒழியுமா? வித்தையை இவன் யாசிக்கிறுன். தானத்தில் வித்யாதானம் சிறந்தது. ஆதலால் இவனை ஒரு சிறிதும் வெறுப்பது அறமன்று'' என்று கருதினர். உயர்ந்த உள்ளம் படைத்த அவர் அசுவத் தாமாவை யழைத்து ''இவன் உனக்குத் தம்பி'' என்றுர். மனைவியை அழைத்து ''இவன் உன் இளைய மகன்'' என்றுர். அது முதல் அவனைத் தன்மகனைப் போலவே அன்பு காட்டிச் சகல வித்தைகளையும் போதித்தார். தன்னைக் கொல்லும் மகனுக்குத் தானே வஞ்சனை யின்றி விற்பயிற்சி யளித்தார். துரோணருடைய பெருமை இந்தச் செய்கையால் அதிகம் வெளிப்பட்டது. திருஷ்டத்யும்னன் வித்தை பூர்த்தியானதும் துரோணரைத் தொழுது விடை பெற்றுத் தன் நகரம் போய்ச் சேர்ந்தான்.

(தொடரும்)

---

1. த்ருஷ்டன் – வெல்ல முடியாதவன்; த்யும்னன்– த்யும்னம் என்ற பொற் கவசத்தோடும் பிறந் தவன்.
2 கிருஷ்ணை – கருநிறம் படைத்தவள்.

அத்துவைத தத்துவ ஆசாரியர்கள்

35. பிரகாசானந்தர் :

இவர் அப்பைய தீட்சிதரின் காலத்தவர். (கி. பி. 1520—1593). அவருக்குச் சிறிது மூத்தவர். சித்தாந்த முக்தாவளி, தாராபக்தி தரங்கணி, மனோரமா, தந்திரராஜ டீக்கை, மகாலட்சுமிபத்ததி முதலிய நூல்களின் ஆசிரியர். பரிணாமவாதம் விவர்த்தவாதம் ஆகிய இரண்டையுமே இவர் உடன் பட்டிலர். மாயை என்பது இல்பொருள்; வெறும் கற்பனை (துச்சம்) என்பது இவரது கொள்கை. சிருஷ்டி திருஷ்டிவாதம் என்பதனை இவர் விளக்கினார். இது விஞ்ஞான பௌத்தவாதம் போலத் தோன்றினாலும், அதனின் வேறுபட்டது. கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த மண்டனமிஸ்ரர் என்பவர் குறிப்பிட்ட கொள்கையே அன்றி, இது புதியதொன்றன்று. ஆயினும், இவர் யோகவாசிஷ்டத்தைப் பின் பற்றியே இக்கொள்கையை உணர்ந்தார். எனினும், இந்நாளில் இக்கொள்கை மிகுதியாகப் போற்றப்படக் காணோம்.

36. இராமதீர்த்தர் :

இவர் இராமபிரானை உபாசித்தவர்; 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். மானசோல்லாசத்திற்கு இவர் எழுதிய உரையால், இவர் கி. பி. 1574-ல் வாழ்ந்திருந்தவர் எனத் தெரிகிறது. அத்வைத தத்துவத் துறையில் தெளிவான விளக்கங்களும், சிறந்த உரைகளும் எழுதியவர்களின் வரிசையில், இவர் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றார். இவரது சிட்சா குரு கிருஷ்ணதீர்த்தர்; தீட்சாகுரு ஜகந்நாதாஸ்ரமி; சம்பிரதாயகுரு ஸ்ரீ விஸ்வவேதர். நரசிம்மாஸ்ரமி, மதுசூதன சரஸ்வதி ஆகியோர் இவரின் சமகாலத்தவர். அனந்ததேவர் இவருக்குச் சீடர். மீமாம்ச நியாயப் பிரகாசிகையின் ஆசிரியராகிய முதலாம் அபதேவர், இவருடைய சீடரின் புதல்வராவர். சுபோதினி இயற்றிய புருஷோத்தம மிஸ்ரரும், கைவல்யதீபிகைக்கு சிநேகம் என்னும் உரை எழுதிய நாராயணப் பிரியரும், இவருடைய சீடர்களேயாவர். (1) உபதேச சகஸ்ரி வியாக்கியை, (2) நைஷ்கர்ம்ய சித்திசாரார்த்தம், (3) பஞ்சபாதிகா விவரண வியாக்கியை, (4) மானசோல்லாச விருத்தாந்த விலாசம், (5) தத்துவ சந்திரிகை, (6) வாக்கியார்த்த தர்ப்பணம், (7) வேதாந்த சார வியாக்கியை (வித்வந் மனோரஞ்சனி) (8) சாரீரக ரகசியார்த்தப் பிரகாசிகை, (9) சங்க்ஷேப சாரீரகை, (10) சிதானந்த லகரி என்பன, இவர் இயற்றிய சிறந்த நூல்களாகும்.

37. நரசிம்மாஸ்ரமி :

இவரது காலம் கி. பி. 1470—1550. இவர் கீர்வாணேந்திர சரசுவதி, ஜகந்நாதஸ்ரமி ஆகியோரின் சீடர். பிரம்மமும் சீவனும் ஒன்றே. உலகம் மித்தை; அநிர்வசநீயம். அவித்யையே ஜகத்காரணம். அத்துவைதம் என்பது, மாத்தியமிகர்களின் சூனியவாதமோ, சௌத்திராந்திகர்களின் விஞ்ஞான வாதமோ அன்று. விஞ்ஞான வாதத்தில் காட்சி, காட்சிப் பிரமாணம், காண்பான், காணப்படுபொருள் ஆகிய பாகுபாடுகள் இல்லை. விஞ்ஞானவாதம் பிரமத்தையோ அவித்தையையோ உடன்படாது. பிரம்மம் சுத்த சைன்யமும், நித்தியமும் ஆகத்திகழ்வது. அது விஞ்ஞானவாதம் கூறும் இந்திரிய ஞானமோ, புத்திதத்துவ ஞானமோ அன்று என்பது இவர் கொள்கை. இவர் எழுதிய நூல்களாவன: (1) அத்துவைத தீபிகை (2) அத்துவைத பஞ்சரத்தினம் (3) அத்துவைத போத தீபிகை (4) அத்துவைத வாதம் (5) பேத திக்காரம் (6) வாசாரம்பணம்

(7) வேதாந்த தத்துவ விவேகம் (8) தத்துவ போதினி முதலியனவாகும்.

38. ஸ்ரீரங்கராச தீட்சிதர் :

மதுரைத் திருமலைநாயக்க மன்னர் (கி. பி. 1623—1659) காலத்தில் வாழ்ந்த நீலகண்ட தீட்சிதர் என்னும் பேரறிஞர், தமது நளசரித நாடகத்தில், அத்வைதவித்யாமுகுரம் விவரண தர்ப்பணம் ஆகிய நூல்களை இயற்றிய ரங்கராச தீட்சிதர் என்பவர், தமது முன்னோர் என்கிறார். இவர் அப்பைய தீட்சிதரின் தந்தையார் ஆவர். மதுசூதனரின் அத்வைத சித்தியைப்போல, இவரது நூல்களும் துவைதி களை மறுத்து அத்வைதத்தை நிறுவுகின்றன.

39. நரசிம்மபட்டோபாத்தியாயர் :

அப்பைய தீட்சிதர் தம்முடைய சித்தாந்த லேச சங்கிரகம் என்னும் நூலில் இவரைக் 'கவிதார்க்கிக சக்கரவர்த்தி' எனக் குறிப் பிட்டுப் புகழ்கின்றார். கஞ்சம் மாவட்டம் ஸ்ரீகூர்மம் விஷ்ணு கோயிலில், அனங்கபீமன் என்னும் மன்னன், இவர் நினைவாக சக ஆண்டு 1205 (கி. பி. 1283)-இல் ஒரு கோபுரம் கட்டிய தாகவும், விளக்கு எரிக்க நிபந்தம் அமைத்த தாகவும் ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது. ஆயினும், அது இவரையே குறிக்கின்றதா அல்லது வேறு எவரையேனும் சுட்டுகின்றதா என்று தெளிவாகத் தெரியவில்லை.

40. மதுசூதன சரசுவதி :

இவர் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அத்துவைத சித்தி என்னும் நூல் இயற்றியவர். மத்துவரின் துவைதவாதக் கொள்கையைப் பின்பற்றிய வியாச தீர்த்தரை மறுத்துள்ளார். நிர்க்குண பிரம்மம் பற்றிய கொள்கையை நிறுவிய போதிலும், இவர் ஸ்ரீ கிருஷ்ணனிடம் அன்பு செலுத்தி வழிபட்டார். இவர் கௌட சாரஸ்வத பிராம்மண குலத்தைச் சேர்ந்தவர் என்றும், கமலநயனர் என்னும் பெயரை உடையவர் என்றும் சிலர் கூறுவர். வேதாந்த கல்பலதிகையில் பூரிஜகந்நாதரை, நீலாசல நாதர் என்று இவர் குறிப்பிட்டுள்ளதாகக் கூறுவர். ஆயினும், அது குருவாயூரப்பனையோ, அல்லது உடுப்பி பாலகிருஷ்ணரையோ தான் குறிக்கின்றது எனலாம். புஷ்பதந்தர் என்பவர் சிவபெருமான்மீது இயற்றிய 'சிவ மகிம்ந ஸ்தோத்திரம்' என்னும் நூல், கிருஷ்ணனுக் கும் பொருந்தும் என்னும் நிலையில், இவர் திறம்பட உரை எழுதியுள்ளார். ஞான பக்தி மார்க்கங்களை இணைத்து எழுதியதில், சங்க்ஷேப சாரீரகம் இயற்றிய சர்வக்ஞமாமுனியை இவர் பின்பற்றியுள்ளார். இவர் இயற்றிய நூல்கள்: (1) ஆனந்த மந்தாகினி (2) ஈசுவரபிரபத்திப் பிரகாசம் (3) அரிலீலா வியாக்கியை (4) சித்தாந்தபிந்து (5) வேதாந்த கல்ப லதிகை (6) அத்வைத சித்தி (7) அத்வைத ரத்ன லட்சணம் (8) கீதார்த்த தீபிகை (9) கூடார்த்த தீபிகை (10) பக்தி ரசாயனம் என்பனவாகும்.

41. தர்மராஜ அத்வாரி :

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கண்டர மாணிக்கம் என்னும் ஊரில் வாழ்ந்தவர். வேதாந்த பரிபாஷை என்னும் நூல் இயற்றி யுள்ளார். கங்கேசர் இயற்றிய தத்துவ சிந்தா மணி என்னும் நூலுக்கு ஒரு வியாக்கியையும் இவரால் எழுதப்பட்டுள்ளது. அதன்கண் பிரத்தியட்சம் அநுமானம் சப்தம் உபமானம் அருத்தாபத்தி அநுபலப்தி, முதலிய பிர மாணங்களை இவர் அழகுறவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார்.

42. இராமகிருஷ்ண அத்வாரி :

இவர் தருமராஜ அத்வாரியின் புதல்வர்; நரசிம்மாசிரமியின் பேரர். வேதாந்த சிகா மணி, தர்க்க சூடாமணி, நியாயசித்தாந்த தீபம், யுக்தி சங்கிரகம் ஆகிய நூல்களை இயற்றிவுள் ளார்.

43. வேங்கடநாதர் :

தருமராஜ அத்துவாரியின் குரு. சங்கரரின் கீதாபாஷ்யத்தினைப் போற்றி, இராமாநுசர் மத்துவர் மதுசூதன சரசுவதி ஆகியவர்களின் உரைகளை ஆங்காங்கே இவர் மறுத்துள்ளார். (1) பிரம்மானந்த லகரி (2) அத்துவைத வைர பஞ்சரம் (3) மந்திர சார சுதாநிதி (4) தைத் திரியோபநிஷத பாஷ்யம் என்பன இவர் இயற்றிய நூல்களாகும்.

44. மகாதேவானந்த சரசுவதி :

இவர் சுயம்பிரகாச ஆனந்தரின் சீடர். தத்துவானுசந்தானம், அத்வைதசிந்தா கௌஸ்துபம் என்னும் நூல்களை இவர் இயற்றியிருக்கின்றார்.

45. கங்காதரேந்திர சரசுவதி :

இவர் கி.பி. 1792-ஆம் ஆண்டில் வாழ்ந்திருந்தார் எனத் தெரிகின்றது. சுவராஜ்ய சித்தி என்னும் நூலை இவர் இயற்றியுள்ளார். அது 165 சுலோகங்கள் கொண்டது. (1) அத்தியாரோப பிரகரணம் (2) அபவாத பிரகரணம் (3) கைவல்யப் பிரகரணம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டதாக அந்நூல் விளங்குகிறது.

46. பரமசிவேந்திர சரசுவதி :

இவர் காஞ்சிகாமகோடி பீடம் ஆசாரிய பரம்பரையில், 57-ஆம் ஆசாரியராக விளங்கியிருந்தவர். இவருடைய சீடரே புகழோங்கிய ஸ்ரீசதாசிவ பிரம்மேந்திர சுவாமிகளாவர். (1) தகரவித்தியா பிரகாசிகை (2) சிவகீதா தாத்பர்ய பிரகாசிகை (3) வேதாந்த நாமரத்ன சகஸ்ர வியாக்கியை, (சுவரூபானு சந்தானம்) (4) ஆத்மானுசந்தானம் என்பன இவர் இயற்றிய நூல்களாகும். சம்சாரசாகரத்தைக் கடக்க விரும்புவார், நித்தியாநித்திய வஸ்துவிவேகம், இகமுத்ரார்த்தபோகவிராகம், சமதமாதி சாதன சம்பத்து, முமுட்சுத்துவம் என்பவற்றை உடையவராய், சிரவணம் மனனம் நிதித்தியாசனம் என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் சிறந்த உபதேசங்களை இவர் செய்துள்ளார்.

47. சதாசிவ பிரம்மேந்திரர் :

இவர் ஒரு சிறந்த மகாயோகி; சீவன் முக்தர். கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் ஆன்மிக வளர்ச்சி செழித்தோங்கியது. தஞ்சையை ஆண்ட சகாஜி மன்னர் (கி.பி. 1684-1711) காலத்தில், கவிவாணர்களும் இசைவாணர்களும் கல்வியாளர்களும் சிந்தனையாளர்களும் பலர் இருந்தனர். அவர்களிற்பலர் சகாஜிராஜபுரம் என்னும் இடத்தில் ஒருங்கே இருந்து வாழ்ந்துவந்தனர். சதாசிவப்பிரம்மேந்திரரிடத்தில் எல்லாவகை அறிவாற்றல்களும் நிரம்பியிருந்தன. போதேந்திரர், ஐயாவாள் எனப்படும் ஸ்ரீதரவெங்கடேசர் ஆகிய இருவர் மட்டுமே, இவர் காலத்தில் இவருக்குச் சமமாக விளங்கினர். தகர வித்தியா பிரகாசிகை, சிவ கீதா வியாக்கியை முதலிய பல நூல்களை இயற்றியவரும், காஞ்சி காமகோடி பீடம் ஆசாரிய பரம்பரையில் 57-வது பீடாதிபதியாக விளங்கியவரும் ஆகிய பரமசிவேந்திர சரசுவதி சுவாமிகளின் சீடர். இளமையில் எல்லாக் கலைகளையும் துறைபோகக் கற்றுத் தேர்ந்திருந்த இவர், ஒரு சிறந்த தார்க்கிகராக விளங்கினார். இவர் தத்துவ வாதங்களிலேயே பெரிதும் ஈடுபட்டுக் காலங்கழிப்பதை நோக்கி, இவரது ஆசாரியர் இவரைக் குறிப்பாகச் சிறிது கடிந்துகொண்டார். அது முதல் இவர் மௌனவிரதத்தை மேற்கொண்டார். காவிரிக்கரையில் ஓர் அவதூதராக வதிந்தார். தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் (கி.பி. 1711-1729), புதுக்கோட்டை விசயரகுநாதத் தொண்டைமான் ஆகியோருக்குப் பல நலங்களை விளைவித்து, அருளாசிகள் வழங்கினார். மகப்பேறு இன்றி மனம் வருந்திய புதுக்கோட்டை விசயரகுநாதத் தொண்டைமானுக்கு, இவரது அருளாசியினால் நவநீதத்தொண்டைமான் என்னும் மகப்பேறு வாய்த்தது. கி. பி. 1738-ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளியில் வதிந்திருந்த தாயுமான சுவாமிகளும் இவரும், ஒருவரை ஒருவர் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தனர் எனத் தெரிகின்றது.

அப்பய்ய தீட்சிதர் இயற்றிய சித்தாந்த லேசசங்கிரகம் என்னும் நூலுக்குச் செய்யுள் வடிவில், கேசாவல்லி என்னும் உரை இவரால் செய்யப்பட்டுள்ளது. அதில் இவர், எய்தாதது எய்துவித்தல் (அபூர்வம்), எய்தியது இகந்துபடாமைக் காத்தல் (நியமம்), எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் (பரிசங்கியை) என்னும் மூவகை விதிகளையும் செவ்விதின் விளக்கியுள்ளார். பதஞ்சலி சூத்திரத்திற்கு யோகசுதாகரம் என்னும் உரையும் இவரால் இயற்றப்பெற்றுள்ளது. 63 சுலோகங்கள் கொண்ட ஆத்மவித்தியா விலாசம் என்னும் நூலில், தமது ஆசாரியாகிய பரமசிவர் கற்பித்த உபநிஷத வித்யைகளைப் பிற்கால சந்ததியாருக்கு விவரிப்பதாக இவர் குறிப்பிட்டுள்

ளார். இவர் பாகவத புராணத்தை நன்கு பயின்றவர். அதனுல் பாகவதசாரம் என்ற ஒரு நூலையும் இயற்றியுள்ளார். தட்சிணுமூர்த்தி தியானம், குருரத்தின மாலிகை, ஆத்மானு சந்தானம், நவரத்தினமாலை, சுவானுபூதி பிரகாசிகை என்பனவும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. கீர்த்தனைகளும் இவரால் இயற்றப்பட்டிருக்கின்றன. அவைகளுள் 25 மட்டுமே இப்போது கிடைக்கின்றன. 'மானச சஞ்சாரரே' 'சர்வம் பிரம்மமயம்', 'சிந்தா நாஸ்திசிவா' எனத்தொடங்கும் கீர்த்தனைகள் இவற்றுள் மிகவும் பிரபலமாகப் பரவியுள்ளன வாகும்.

48. கிருஷ்ணமிஸ்ரர் :

இவர் கி. பி. 11-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருந்தவர். இவர்எழுதிய பிரபோத சந்திரோதயம் (ஞானநிலவின் வெளிப்பாடு) என்னும் நூல் மிகவும் பிரசித்தமானது. அந்நூலின் நகைச்சுவைநடை, தத்துவக் கருத்து நுட்பம் முதலியன மிகவும் போற்றத் தக்கன. போர்க்களங்களின் அனுபவ உணர்வு, அரசியல் சூழ்ச்சித்திறங்கள் ஆகியவற்றை விவரிக்கும் அரிய குறிப்புக்கள், இதன்கண் காணப்படுகின்றன. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தை இவர் நன்கு பயின்றிருந்தார் எனத்தெரிகின்றது. இந்நூலின் இடையிடையே உபநிடதக் கருத்துக்கள் சொற்கள் சொற்ருெடர்கள் ஆகியவற்றைப் பெரிதும் விரவித் தொடுத்துள்ளார்.

பிரபோதசந்திரோதயம் என்னும் இந்நூல், ஆறு அங்கங்கள் கொண்டது. முதல் அங்கத்தில் காமனும் இரதியும் உரையாடிச் செல்கின்றனர். ஈசுவரன் அவித்தையின் மூலம் மனம் எனும் புதல்வனைப் பெறுகின்ருர். பின்னர் பிரவிருத்தி நிவிருத்தி என்னும் இரு மனைவியரை மணக்கின்ருர். அவர்களின் மூலம் முறையே மகாமோகம் விவேகம் என்னும் இருவரை மக்களாகப் பெறுகின்ருர்.

இரண்டாம் அங்கத்தில், மகாமோகம் என்னும் மன்னன் பரிவாரங்களுடன் வாரணுசியில் ஆள்கின்ருன். சார்வாகன்என்னும் ஒற்றன் வேதம் ஓதுதல் முதலிய நற்செயல்களை நீக்கும் கலியின் செயல்பற்றி அறிந்துவந்து கூறுவதுடன், விஷ்ணுபக்தி என்னும் தொண்டன் கலியின் அழிவுவேலைகளை எதிர்க்கின்ருன் எனவும்செய்தி தெரிவிக்கின்ருன். அதுகேட்ட மகாமோகன் மிகவும் வெகுண்டு, உடனே காமம் குரோதம் முதலிய ஏவலர்களை அனுப்பி, விஷ்ணுபக்தியை முளையிலேயே கிள்ளியெறிய ஆணையிடுகின்ருன். மதம் மானம் ஆகியஒற்றர்கள் மூலம், வைராக்கியமானது தர்மத்தைக் காமத்தினின்று பிரிப்பது பற்றி மகாமோகன் அறிகின்ருன். மேலும் அவனுக்கு, சாந்தியும் அவனது தாயாகிய சிரத்தையும் சேர்ந்து, விவேகத்திற்கும் உபநிஷத்தேவிக்கும்தொடர்பு ஏற்படுத்த முயல்வது பற்றிய செய்தியும் வருகின்றது. மகாமோகன் தர்மத்தினைச் சிறைபிடிக்குமாறு காமத்திற்குக் கட்டளையிடுகின்ருன். மற்றும் அவன் குரோதத்தையும் லோபத்தையும் நோக்கி, நீங்கள் சென்று சாந்தியையும் சிரத்தையையும் அவைதிக நெறிகளிற் சேர்க்க முயன்று பிடித்துக் கொண்டு வாருங்கள் என உத்தரவு பிறப்பிக்கின்ருன்.

மூன்ரும் அங்கத்தில், சாந்தி என்னும் நங்கை நல்லாள், தன் தாயாகிய சாத்விக சிரத்தையைத் தேடுகின்ருள். ஆனுல் காபாலிகனேடு கூடியுள்ள தாமசசிரத்தையை மட்டுமே சாந்தி காண்கின்ருள். அவளுடன் பேசியதன் மூலம், சாத்விக சிரத்தையும் விஷ்ணுபக்தியும், மகாமோகனின் கொடுமைகளுக்கு அஞ்சி ஞானிகளின் உள்ளத்தில் அடைக்கலம் புகுந்திருத்தலை உணருகின்ருள். காபாலிகன் மகாமோகனின் கட்டளைப்படி தன்னுடைய மகாபைரவி வித்தையைக்கொண்டு, சிரத்தையையும் தர்மத்தையும் கைது செய்துவர அனுப்புகின்ருன்.

நான்காம் அங்கத்தில், சிரத்தையும் மைத்திரியும் சந்தித்து உரையாடுகின்றனர். அந்நிலையில் அங்கு வந்து பைரவி, தருமத்தைக் கைது செய்கின்ருள். ஆனுல் விஷ்ணுபக்தி வெளிப்பட்டுத் தருமத்தைவிடுதலை செய்தலில் வெற்றி பெறுகின்றது. சிரத்தையானவள், விஷ்ணு பக்தியை விவேகத்துடன் அனுப்ப ஏற்பாடு செய்கின்றது. விவேகம் என்னும் அரசகுமாரன் வஸ்து விசாரம் என்பவனைக் காமம் சாமம் குரோதம் ஆகியவற்ருேடும், சந்தோஷத்தை லோபத்துடனும் போரிட அனுப்புகின்ருன். அவன் தானே போருக்குப் படை நடத்திச் செல்கின்ருன். காசியில் ஆதிகேசவர் கோயிலில் படைவீடு செய்கின்ருன்.

ஐந்தாம் அங்கத்தில், சாந்தியும் விஷ்ணுபக்தியும் சக்கரதீர்த்தம் ஆகிய மேடையில் தோன்றுகின்றனர். பகைவர்களின் செயலை ஒற்றறிய முயலும், சிரத்தை, தன்னுடைய அறிக்கையை அளிக்கின்றது. போரில் விவேகம் வெற்றி பெறுகின்றது. மகாமோகன் தோல்வியுற்று எங்கே ஓடி ஒளிகின்முன். தன்னுடைய உறவினர்கள் பலர் இறந்தது கேட்டு, ஸ்ரீமனஸ் தற்கொலை செய்து கொள்ள முற்படுகின்றது. வையாசிக சரஸ்வதி ஆறுதல் கூறித் தேற்றுகின்றது. இந்நிலையில் அதிர்ஷ்டவசமாக வைராக்கியம்—விஷ்ணுபக்தி—மைத்திரி ஆகியோர் நற்செய்திகள் கொண்டுவருகின்றனர். மனம் அமைதி அடைகின்றது.

ஆறும் அங்கத்தில், உபநிஷத்தேவிக்கு சாந்தி பணிவிடை புரிகின்றது. சிரத்தை விவேகத்திற்கு இயன்ற உதவிகளெல்லாம் செய்கின்றது. புத்த விவகாரங்களில் எவ்வாறெல்லாம் தான் சித்திரவதை செய்யப்பட்டு வந்தாள் என்றும், அதிர்ஷ்டவசமாக எங்ஙனம் தண்டகாரண்யத்தில் சீதாசிரமம் சேர்ந்தாள் என்றும், விவரிக்கின்முள். புருஷதத்துவத்திற்கு நீயே பரமேசுவரன் என்று அறிவித்து, அவனை அவள் தழுவிக்கொள்கின்முள். இருவருக்கும் பிரபோத சந்திரன் என்பவன் உதயமாகின்முன். அவன் புருஷனைப் பிணித்துள்ள விலங்குகளை அறுத்து எறிகின்முன். விஷ்ணுபக்தி ஆசியுரை மங்களம் பாடுகின்முள்.

கிருஷ்ணமிஸ்ரரின் பிரபோத சந்திரோதயம் என்னும் நாடக நூல், எவ்வளவு சிறப்பும் பிரசித்தமும் பெற்றது என்பது, அதனைப் பின்பற்றியும் அதன் அமைப்பை ஒட்டியும், பிற்காலத்து எழுந்த பல நூல்களாற் புலனுகும். வேதாந்த தேசிகர் இயற்றிய சங்கல்பசூரியோதயம் இங்கு மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. (1) உபயகிரகசார உதயம், (2) அனுமிதிபரிணயம் (3) ஆனந்த சந்திரோதயம் (4) குமுதசந்திரன் (5) க்ஷேமசந்திர பிரபோதம் (6) ஜீவன் முக்தி கல்யாணம், (7) தைந்ய சந்திரோதயம், (8) பிரபோதயம் (9) வித்யாபரிணயம் முதலிய வேறு பல நூல்களும், கிருஷ்ணமிஸ்ரரின் பிரபோத சந்திரோதயத்தை முன்மாதிரியாகக் கொண்டு தோன்றியனவேயாகும்.

(தொடரும்) —ஆசிரியர்.



திருவேற்காடு ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஆலய மண்டபத்தில், உயர்நீதி மன்ற நீதிபதி திரு. பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், சென்னை, 21. சுங்குராமச் செட்டித் தெரு சூப்பர்பவர் டிரஸ்ட் மூலம் நடத்தப்பெறும் ஸ்ரீ அகஸ்தியர் வேத பாடசாலையை, நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், B,A.,B.L., I. A. S. அவர்கள் திறந்துவைத்தல். (19 - 10 - 69)

மதுரகவிக்கோர் அமுதகவி

(திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை)

அறிமுகம் :

சமயப் பெரியோர் அனைவரும் ஒருமித்த கருத்துடன் அவனை அடைந்து உய்வதைவிட, அவனடியார்களை அடைந்து உய்வதிலேயே ஏற்றம் கண்டனர். பகவானை ஏத்தி இருப்பார்களையும், அவன் அடியார்களைச் சார்த்தி இருப்பார் தவம் வென்றுவிடும் என்பதே, முழுதும் உணர்ந்த முன்னோர்களின் திருவுள்ளமாகும்.

இந்த வழியை ஸ்ரீ வைணவர்கள் "சரம நிஷ்டை, ஆசாரிய நிஷ்டை, தீதில் நன்னெறி, இடும்பைக்கு இடும்பை தரும் வீடுபெறும் நல்வழி, மதுரகவி தோன்றக் காட்டிய தொல் வழி, சத்துருக்கன ஆழ்வான் காட்டிய நற்றவ வழி, இராஜபாட்டை" என்றெல்லாம் கூறுவார்கள்.

"பெரியோர்க்கு ஆட்பட்டக்கால் பெருத பயன் பெறுமாறு வரிவாள்வாய் அரவணைமேல் வாட்டாற்றான் காட்டினனே" எனவும், "தனிமாத் தெய்வத் தளிரடிக் கீழ்ப்புகுதலன்றி, அவனடியார் நனிமாக்கலவி இன்பமே நாளும் வாய்க்க நங்கட்கே" எனவும், "பரமனைப் பயிலும் திருவுடையார் யவரேனும் அவர்கண்டீர் எம்மையாளும் பரமர்" எனவும் ஆழ்வார் திருவாக்கு.

அடியார்களின் அளவற்ற கருணையைப்பற்றி நம்பிள்ளை "ஒருவன் தலைக்கடையையும், புறக் கடையையும் அடைத்துக் கொண்டிருக்க அவ்வகம் நெருப்புப்பட்டு வேவாநின்றால், கண்டு நிற்கிறவர்களுக்கு அவிக்க வேண்டி இருக்குமிறே" என்று சுவையாகக் கூறினர். "ஸர்வம் யதேவ நியமேன மதந்வயானாம்" (என்னைச் சார்ந்த அனைவர்கட்கும் ஆழ்வாரே எல்லாம்) எனவும், ஸ்ரீ ஆளவந்தார் திருவாக் கிட்டார். மதுரகவி யாழ்வார் வகுத்த இந்த இன்பவழியிலே அவருக்குப்பின் சென்று பேரின்பம் எய்தினவர் திருவரங்கத்து அமுதனர் ஆவார். மதுரகவியோ ஆழ்வார் திருப்பெயரை நாவினால் நவிற்றி நவிற்றிச் செந்நாத் தித்திக்கத் தித்திக்க இன்பம் எய்தினர். அமுதனரோ "இராமாநுசன் புகழ் அன்றி என்வாய் கொஞ்சிப் பரவகில்லாது" என ஏத்தினர்.

ஆழ்வார் திருவுள்ளத்தில்தாம் அமர்ந்து பாடியவர் மதுரகவி. இவரோ இராமாநுசனைத் தம் உள்ளத்தில் அமர்த்திப் பாடினர். அவர் ஆழ்வாரை முன்பு இட்டுப் பாடிக் களித்தார். இவரோ உடையவர் என்ற ஸ்ரீ இராமாநுசனுடன் ஒன்றாகக் கலந்து பாடிப் பறைகொண்டார். "நீரதநெறியில், வாவி நிறைந்த நீர் என்ன நின்றான்" என வில்லிபுத்தூராழ்வார் கூறியபடி இருந்தவர் அமுதனர்.

அமுதனர் அடிமைத் திறன் :

மூங்கிற்குடி என்ற பழக்குடியில் அடியார்கள் செய்த தவப் பயனாய், பங்குனி அத்த நட்சத்திரத்தில் அவதரித்தார். திருவரங்கத்தில் வாழ்ந்தார். மறைநூல் துறைபோகியவராய் ஸ்ரீவைணவ மரபைச்சேராத பெரும் செந்நாத் தமிழ்ப் புலவராயிருந்தார். "பங்குனியில் அத்தநாள் பார்உதித்தோன் வாழியே" என்பது இவருடைய வாழித் திருநாமம் ஆகும். இவர் மூங்கிற்குடியில் பிறந்தவர் என்பதற்கு "மூங்கிற்குடி அமுதன்" என்று இவருக்கு இட்ட தனியனே சான்றாகும். இவருடைய தாயார் வைணவ அடியார்களிடத்தும், அவர்களின் அரிய உபதேசங்களிலும் பற்றுள்ளவர். அமுதனர் திருமாளிகையில் ஒருநாள் அவர் தாயாரின் "சிராத்தம்" (திதி) வந்தது. தம் தாயாரின் ஆன்ம சாந்திக்காக இராமாநுசரை அண்டி, அவர் இன்னருளால், கூரத்தாழ்வான்—ஆழ்வான்—ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர் என்றெல்

லாம் திவ்விய நாமம் படைத்த இராமாநுசரின் அந்தரங்க சிஷ்யரான வைணவரைத் திதியில் உண்பித்தார். திதியின் முடிவில், உண்டபின்பு ''திருப்தோஸ்மி'' (மனநிறைவு பெற்றேன்) என்று, உண்பவர் சொல்ல வேண்டிய நேரம் வந்தது. அப்பொழுது அச்சொல்லைக் கூரத்தாழ்வான் சொல்ல மறுத்துவிட்டார். உண்பவர் அவ்வாறு சொல்லாமல் போனால், திதி நிறைவேறியதாகாது என்பது வைதிகர் மரபானதால், அமுதனார் வருந்தி நின்றார். கடைசியில் அமுதனாரிடமிருந்து திருவரங்கம் பெரிய கோயில் சாவியை (நிருவாகத்தை)ப் பெற்ற பின்புதான், ஆழ்வான் மனநிறைவு பெற்றதாகக் கூறினார். ஆழ்வாரும் சிராத்தத்தில் பெற்றபொருளை எல்லாம் தக்கோர்களுக்குக் கொடுத்துவிட்டார். கடைசியில் திருக்கோயில் சாவியை இராமாநுசரிடம் கொடுத்துவிட்டார். இது இவரைப்பற்றிய ஐதிகம்.

இந்நிகழ்ச்சியின் பயனாய் இராமாநுசர் திருவரங்கம் கோயில் முறைகளைச் செவ்வனம் திருத்தினார். இன்றும் அம்முறை வேதம் இட்ட விதி என நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதே நிகழ்ச்சியின் பயனாய் அமுதனார் ஸ்ரீ கூரத்தாழ்வான் சீடரானார். ''வஞ்சமுக் குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்'' என அமுதனாரே பாசுரமிட்டார். இவருடைய பக்திப் பெருவெள்ளம் கரை கட்டாக் காவிரி போல், தம் ஆசாரியனையும் தாண்டி, அவருக்கும் ஆசாரியரான இராமாநுசரின் திருவடியிற் பாய்ந்தது. அப்பக்தி வெள்ளமே ''இராமாநுச நூற்றந்தாதி'' ஆயிற்று.

இராமாநுசர் முதலில் தம்மைப் பற்றிப் பாடின நூல் என்று இதை ஏற்கவில்லை. பின்பு சிஷ்யர்கள் வேண்டிக்கொள்ளவே ஏற்றுக் கொண்டு, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமான இயற்பாவின் கடைசிப் பகுதியாகச் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்தார். முதலாயிரத்தின் முடிவில் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்ற நூல் மணிக்கழல்போல் ஒளிவீசுகின்றது. மூன்றாம் ஆயிரத்தின் முடிவில் இந்நூல் பாதத்திட்ட மலர் மாலைபோல் நறுமணம் வீசுகிறது. திருவரங்கத்தில் அமுதனார் திருப்பெயரில் ''நீலை அங்கி'' என்ற சார்த்து ஆடை இட்டுப் 'பிரமாதம்' என்ற சிறப்பு விழா இன்றும் கொண்டாடிவருவதிலிருந்து இவருக்கு இருந்த ஏற்றமும் ஏற்பும் வெளியாகின்றன. அற்றவர் சேர்திருவரங்கப் பெருமாள் தோழர் அன்றோ இவர்;

> இனி என் குறை நமக்கு ?
> எம் பெருமானார் திருநாமத்தால்
> முனிதந்த நூற்றுஎட்டுச் சாவித்திரி
> என்னும் நுண் பொருளைக்
> கனிதந்த சொல் கலித்துறை
> 'அந்தாதி' பாடித் தந்தான்
> புனிதன் திருவரங்கத்து அமுதன்
> ஆகிய புண்ணியனே

என்ற பாசுரம் இவர் பெருமையைப் பார்புகழ ஓதுகிறது.

அந்தாதிவகை :

''அந்தாதி'' என்ற நூல் தமிழில் உள்ள பல வகைத் தமிழ்ச் சிறுநூல் வகைகளில் ஒன்று. இதை 'விருந்து' எனத் தொல்காப்பியர் உரைப்பார். ஒரு பாவின் எழுத்து அசை முதலியன அடுத்த பாடலின் முதலில் வரும்படி அமைத்துப் பாடி, இறுதிப் பாவின் இறுதியும் முதற் பாடலின் முதலும் ஒன்றாக இணையும் படி மண்டலித்து, மாலைபோல் தொகுத்து முடிப்பது அந்தாதியாகும். அந்தாதி பாட அரும்புலமை வேண்டும். இதையே சொற்றொடர் நிலை எனவும் கூறுவர். இந்த அந்தாதி வழக்கு, சங்க காலத்திலேயே இருந்தது என்பது சங்கப் புலவர் ''முடி நாகராயர்'' பாடிய, ''மண்டிணிந்தநிலனும்'' என்ற புறநானூற்றுப் பாட்டால் விளங்கும். சைவசமயப் பெரியோர்களான, நக்கீர தேவநாயனார், கபில தேவநாயனார், மணிவாசகப் பெருமான் முதலியவர்களும், அந்தாதித் தொடரில் நூல் இயற்றியுள்ளார்கள். இலக்கிய நூல்களான, கலம்பகம், இரட்டை மணிமாலை முதலியவைகளும் இவ்வகையில் அமைந்திருப்பதைக் காணலாம். கம்பரும் சடகோபர் என்ற நம்மாழ்வார் பேரில் ஓர் அந்தாதி பாடியுள்ளார். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், மணவாளமாமுனிகள் முதலானோர்களும் அருமையான அந்தாதி பாடினர். திருவாய் மொழியே அந்தாதித் தொடரில் திருவாக்கிடப்பட்டுள்ளன. இயற்பா என்ற திவ்விய பிரபந்தப் பகுதி

யில் எட்டுப் பிரபந்தங்களும் அந்தாதியில் அமைந்துள்ளன. இந்த அந்தாதிப் பாடல்கள் கடவுளுக்கும். அவரனைய பெரியோர்களுக்கும் நூறு பாசுரங்கள் எனவும், ஏனையோர்களுக்கு 90, 80, 70, எனவும் 'பாட்டியல்' வரையறை இட்டது.

இராமாநுச நூற்றந்தாதி :

இராமாநுசரே இந்நூலின் பாட்டுடைத் தலைவர். அவர் பெயர் ஒவ்வொரு பாசுரத்திலும் வருகிறது. இது 108 பாசுரங்கள் கொண்டது. நூற்றுக்கு மேல் எட்டுப் பாடல்கள் அதிகம் இருப்பினும் "நூற்றந்தாதி" என்றே நெடுநாள் தொட்டு வழங்கப்பெற்று வருகிறது. நடையும், தொடையும், மொழியும் அருமையாக அமைந்து ஆய்ந்து தொகுத்த அன்றைய மாலைபோல் விளங்குகிறது. இதைப் "பிரபன்ன காயத்ரி" என வைணவர்கள் கூறுவார்கள்; காயத்திரி மாமந்திரத்தைப் போல், இந்நூலை ஒவ்வொரு வைணவரும் நித்தம் ஓதவேண்டும் என்பது பெரியோர் இட்ட ஆணையாகும். அமுதனார் இராமாநுசருக்குக் கொடுக்கும் சிறப்புரை அடைமொழிகள் கொஞ்சிக் குலாவுவது போல் தான் இருக்கும். "என்னை ஆளவந்த கற்பகம், கற்றவர் காமுறு சீலன், காரேய்கருணை, எந்நிலை நின்றார்க்கும் அருள் அளிப்பான், மயலே பெருகும் இராமாநுசன், மதவேழம், அடியார்க்கு அமுதம்" என்றபடி பாடி மகிழ்கிறார்.

அரங்கன் அடியார்களுக்குத் தன் சரண் தந்திலனும், இவரேதான் அது தந்து காப்பவராம். "பண்தரும் மாறன் பசும் தமிழ் ஆனந்தம் பாய் மதம்ஆய் விண்டிடும் எங்கள் இராமாநுச முனிவேழம்" என்பார். உடனே "குறையல் கலைப் பெருமாள் (திருமங்கையாழ்வாரின்) ஒலிமிக்க பாடலை உண்டு தன் உள்ளம் துடித்து அதனால் வலிமிக்க சீயம்" என்பார். ஆழ்வார் கையாண்ட சொற்றொடர்களை அப்படியே இராமாநுசர்பால், இடப்பொருத்தம் அமையும் படி, இவர் கையாளும் விதம் மிக அருமை. "என் நெஞ்சு என்னும் பொன் வண்டு உன தடிப் போதில் ஒண்சீராம் தெளிதேன் உண்டு அமர்ந்திட வேண்டி" எனப்பாடும் அருமையில் ஆன்மாவை அப்படியே இராமாநுசரின் திருவடியில் இட்டுவிடுகிறார். "இராமாநுசரைத் தொழும்பெரியோர் எழுந்து இரைத்து ஆடும் இடமே இவருக்கு இருப்பிடமாம்.

பாசுரத்தின் துவக்கத்தில் திருமகளைச் சரண் புகுந்து, முடிவிலும் அவள் இன்னருள் வேண்டி வாழ்த்துகிறார். திருமாலின் அவதாரங்களில் கண்ணனிடமும், திவ்விய தேசத்து எம்பெருமான்களுள் திருவரங்கனிடமும், இராமாநுசருக்குள்ள ஈடுபாட்டைப் பலபடியாகப் பேசுகிறார். அத்திகிரி வரதனிடமும், திருவேங்கடவனிடமும் திருமாலிருஞ்சோலைமலை அழகனிடமும், இராமாநுசருக்குள்ள ஈடுபாட்டையும் சிறிது குறிப்பிடாமல் இல்லை.

அவதாரங்களில் நரசிங்கப் பெருமாளிடம் இராமாநுசருக்கு உள்ள பெரும் பக்தியைக் குறிப்பதுடன், ஸ்ரீவைணவர் அதிகமாக ஈடுபடாத இராஜச குணம் அதிகம் கொண்ட பரசுராமாவதாத்தையும், இராமாநுசரது பெருமையுடன் பொருத்திப் பாடுகிறார். இராமநுசரைத் திருமாலின் பஞ்சாயுதங்களின் ஒருங்காய அவதாரம் என்கிறார்.

"என்னை ஆளவந்து இப்படியிற் பிறந்தது" என்று கூறித் தம்மை ஆட்கொள்ளவே கண்ணன் இராமாநுசராக அவதரித்தாராம். திருவாய்மொழி பேசும் இடமெல்லாம் இராமாநுசர் அமர்ந்து கேட்டருள்வாராம். அத்துடன் இருபது பாசுரம் வரை ஆழ்வார்களிடத்தில் இராமாநுசருக்கு உள்ள ஈடுபாட்டைக் குறிப்பிடும்பொழுது, ஆழ்வார் வரிசையை இவர் சற்று மாற்றி அமைத்துப் பாடுகிறார். கடைசியில் ஆழ்வார்களுக்கெல்லாம் உயிர்நாடியான நம்மாழ்வாரைக் குறிப்பிடுகிறார்.

இராமாயணத்திற்குப் "பக்திவெள்ளம்" என்ற அருமையான பெயரை இட்டு, அதனால் உடையவருக்கு அதில் உள்ள அளவற்ற பக்தியை வெளியிடுகிறார். இவ்வாறு கரும்பை மேல் இருந்து சுவைத்து வந்தால் இனிப்பு வளர்ந்து இன்பம் தருவது போல், இவருடைய நூற்றந்தாதியிலும், மேலே செல்லச் செல்ல இனிப்பு நெஞ்சம் தித்திக்க வளர்ந்துகொண்டே இருக்கக் காணலாம். ★

தன்மை அறிவார் இல்லை

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் (பாலகவி)
தேவகோட்டை

ஒருவருக்கு மேற்பட்ட இருவரையோ, அவரினும் மிகுதியாகிய சிலரையோ அல்லது அவரினும் அதிகமாகிய பலரையோ, தமது ஏவலில் வைத்தாண்டு அவர்களுக்கு மேம்பட்டு விளங்குபவர்களைத் தலைவர்கள் அல்லது முதல்வர்கள் என்று சொல்லுகிறோம். இந்தத் தலைமை அல்லது முதன்மை என்பது, துறைதோறும் அமைந்திருப்பதும், தகுதியையொட்டி ஒன்றினொன்று உயர்ந்ததாய்ச் சிறப்புற்று நிற்பதும் கண்கூடு.

சிறிய அளவில் தலைமைப் பேறு பெற்று வாழ்பவர்கள் அவரினும் உயர்ந்த பெருந்தலைவர்களுக்கடங்கி அவர்கள் சொல்வழியே நிற்பார்கள். உலகியலிலுள்ள எல்லாத் தலைமைகளும், ஒவ்வொரு அளவைத் தமக்கு எல்லையாகக் கொண்டு, இடைப்பட்டனவாயிருப்பனவே யாகும். எல்லா எல்லைகளையும் கடந்து, தனக்கு மேலேயொரு தலைமையைக் கொள்ளாததாய், ஏனைய தலைமைகள் அனைத்தையும் ஏவும் சிறப்புடையதாய் விளங்குவது 'கடவுட்டலைமை' ஒன்றே ஆகும். அந்தத் தலைமையை உடையவரே, 'கடவுள்' என்று உண்மையிற் குறிக்கப் பெறுபவர். அவரல்லாத மற்றையோர் ஒரோரிடங்களிற் கடவுள் என்ற பெயரால் குறிக்கப் பெறுவாராயினும், அவரை இங்ஙனம் குறிப்பது உபசார வழக்கேயன்றி, உண்மை வழக்கன்று என்பதை, நாம் ஆராய்ந்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

வேத சிவாகமங்களிலும், உபநிடதம் முதலிய ஞான நூல்களிலும், சத்து, பிரமம், சிவம், பதி முதலிய திருப்பெயர்களால், தமக்கு மேலொரு தலைமை இல்லாத உண்மைப் பொருள் குறிக்கப்பெறுகின்றது. சிவபெருமானது தலைமை, ஒருவருக்கு இடைப்பட்டு வந்து, அதுபோலவே இடைப்பட்டு நீங்குகிற சிறுமையையுடைய தலைமை போன்றதன்று. அநாதியாகிய அவர்பால் அநாதியாகவே அமைந்திருந்து, அழிவில்லாத அவரைப்போல அழிவில்லாததாய் விளங்கிக் கொண்டிருப்பது அது. பலவேறு வகைப்பட்டனவாகிய சமயநெறிகளைப் பற்றியொழுகும் மக்களனைவரும், உலகியலில் அமைந்துள்ள எல்லாத் தலைமைகளிலும் சிறந்தது 'கடவுட்டலைமை' என்பதை ஏற்றுக் கொள்ளுவர். ஆனால் தலைமை இலக்கணம் முழுவதும் அமைந்த உண்மைக் கடவுளை ஓர்ந்துணரும் தவமின்மையால், இடைப்பட்ட தலைமையைப் புண்ணிய விசேடத்தாற் பெற்று நிற்பாரையும் உண்மைக் கடவுளரென்று மயங்கிக் கூறும் சமய வாதிகளே மிகுதியாயிருக்கிறார்கள்.

உண்மையுணரும் மதுகை இல்லாத ஒருசில சமயவாதிகள், முடிந்த முடிவில்லாது, தாங்கள் கண்ட முடிபுகளையே, உண்மை முடிபுகள் என்று வலியுறுத்திக்கூறி மகிழுவார்கள். இதனைச் ''சமய வாதிகள் தத்தம் மதங்களே, அமைவதாக அரற்றி மலைந்தனர்'' என்று திரு

வாசகம் உணர்த்துகின்றது. போலியை நிலை நாட்டுவதற்குப் புத்தி நுட்பமும், பிடிவாதமும் இன்றியமையாது வேண்டப் பெறுவனவாகும். இவ்விரண்டையும் உடையாரது சொன்னதையே சொல்லும் இயல்பையும், அதனால் வரும் மலைவையும் ''அரற்றி மலைந்தனர்'' என்று மணிவாசகப் பெருந்தகையார் தெளிவுறுத்துகின்றார்.

சிவபெருமானது தலைமைக்கும், முதன்மைக்கும் எடுத்துக்காட்டுகளாக அவரது திருமேனியில் உள்ள நெற்றிக் கண்ணும், நீலகண்டமும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. தேவரும், மூவரும் முதலாகிய அனைத்துயிர்களையும் பேரூழிக் காலத்தில் ஒடுக்குகின்ற ''சங்கார காரணனாகிய முதல்'' சிவபெருமானே என்பதை அவரது நெற்றிக் கண் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றது. திருமால், பிரமன் ஆகியோரின் ஏவலுக்கும் வற்புறுத்தலுக்கும் உட்பட்டுச் சிவபெருமானை நோக்கி மலரம்பு தொடுக்க முற்பட்ட மன்மதனைச் சிவபெருமான் நெற்றிக் கண்ணெருப்பினால் எரித்துப் பொடி படுத்தினார் என்னும் வரலாறு இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

இனிச் சிவபெருமானது, ஒப்பற்ற உயிர் காக்கும் தொழிலுக்கு எடுத்துக் காட்டாயிலங்கிக் கொண்டிருப்பது அவரது நீலகண்டம், என்பதையும் நாம் ஈண்டு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். என்றும் இறவாதிருக்கும் பெருவாழ்வை விரும்பி அமுதம் உண்ட தேவரனைவரும் இறந்து, பிறந்து அல்லலற்பட, ஒருவரும் உண்ணாத நஞ்சையுண்டு சாவா மூவாச் சிங்கமாகச் சிவபெருமான் விளங்கிக் கொண்டிருக்கிறார். இந்த சிறந்த உண்மையைத் திருமூல தேவ நாயனார் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து முப்பத்திரண்டாவது செய்யுளில் விளக்கியருளுகின்றார். அந்தத் திருப்பாட்டு,

> ''தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்
> மேவு பிரான்விரி நீருல கேழையும்
> தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
> பாவு பிரானருள் பாடலும் ஆமே''

என்பதாகும்.

தேவரனைவருக்கும் சிவபெருமான் ஒருவரே தலைவராயிருக்கின்றாரென்பதை, தேவதேவர், மகாதேவர் முதலிய திருப்பெயர்களால் அவரை அழைப்பதைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். புண்ணிய விசேடத்தால் மேற்பதவிபெற்று இன்பம் நுகர்ந்து கொண்டிருக்கின்ற தேவர்களுக்கே சிவபெருமான் தலைவனாக விளங்குகின்றானென்றால், புண்ணிய பாவ நுகர்ச்சியுடையவர்களாகப் பூவுலகத்தில் வாழுகின்ற மக்கட் கூட்டத்தினருக்கு அவர் தலைவரென்று சொல்லவும் வேண்டுமா? இதனையே ஆசிரியர், ''தேவர் பிரான் நம்பிரான்'' என்று முதலிற் கூறியருளினார்.

கிழக்கு முதலாகிய நான்கு நேர்திசைகளும், தென்கிழக்கு முதலாகிய நான்கு கோணத்திசைகளும், கீழ்மேல் ஆகிய இரண்டு மண்விண் திசைகளும் சேர்ந்து திசைகள் பத்தென்று சொல்லப்பெறும். இப்பத்துத் திசைகளிலுமுள்ள சித்தும், சடமுமாகிய எல்லாப் பொருள்களுக்கும் சிவபெருமானே தலைவராக யிருக்கின்றாரென்பது ''திசை பத்தையும் மேவு பிரான்'' என்று உணர்த்தப்பெறுகின்றது. நிலவுலகம் மட்டுமின்றி இதற்குக் கீழேயுள்ளனவாகச் சொல்லப்பெறுகின்ற ஏழு உலகங்களும் மேலேயுள்ளனவாகச் சொல்லப் பெறுகின்ற ஏழு உலகங்களும் சிவபெருமானது வியாபகத்துள் அடங்கிவிட, அவர் அவையனைத்தையும் கடந்து அப்பாற்பட்டிருக்கின்றார். ''கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான், பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கப்பால் சோதி மணிமுடி சொல்லில் சொல்லிறந்து நின்ற தொன்மை'' என்பது திருவாசகம். இது ''விரிநீர் உலகேழையும் தாவு பிரான்'' என்று இங்கே குறிக்கப் பெறுகின்றது.

இங்ஙனம் அனைத்துப் பொருள்களிலும் சிவபெருமான் கலந்திருந்து தலைவனாகவும், முதல்வனாகவும் விளங்குகின்றானாயினும், அவனுடைய தன்மையை ஒரு சிறிதேனும் அறிந்தவராக இங்கு எவரும் இல்லை. அங்ஙனமிருக்க அவனது பெரும்புகழை உடைய திருவருளை யாரால் பாடிப் பரவ முடியும்? ஒரு போதும் முடியாதென்பதையே இத் திருப்பாடலின் இறுதிப் பகுதி தெற்றெனப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

நலமே தழைக!

திருக்குறளில் திருவடி

வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,
இளவரசு, காசிமடம், திருப்பனந்தாள்.

இற்றைக்கு இருக்கும் நீதி நூல்களில் தலைமையும் தொன்மையும் வாய்ந்தது திருக்குறளே யாகும். மனிதஇனம் உள்ளும் புறமும் தூய்மை பெற்று இறைவனை உணர்தல் வேண்டும்; திருவருளைத் துணைக் கொண்டு இறைவனது திருவடி நிழலில் உயிர்களனைத்தும் இன்புற வாழ வேண்டுமென்பதே திருக்குறளின் தலையாய நோக்கமாகும். இதனைக் கடவுள் வாழ்த்து, மெய்யுணர்தல் ஆகிய இரு அதிகாரங்களிலும் திருவள்ளுவர் கூறியிருக்கும் கருத்துக்களால் நன்கு அறியலாம்.

இறைவனது திருவுருவத்தில் திருவடி மிகச் சிறப்புடையது ஆகும். 'நின்னிற் சிறந்த நின் தாள் இணையவை' என்னும் பரிபாடல் இதனை வலியுறுத்தும். ஞானியர்கள் அனைவரும் இறைவனது திருவடியைச் சிறப்பித்து, அதனையே தமக்குப் புகலிடமாகக் கொண்டு உய்ந்துள்ளனர். அந்நிரலில் ஒருங்கு வைத்து எண்ணத் தக்கவர் திருவள்ளுவப் பெருந்தகையார் ஆவர். அவர் கடவுள் வாழ்த்தில் இறைவனது திருவடியை ஏழிடங்களில் குறித்துள்ளார். திருவடியைத் 'தாள்', 'அடி', என்னுமிரு சொற்களால் குறித்துள்ளார். தாளினை 'நற்றாள்' என்றும், அடியை 'மாணடி' என்றும், முதற்கண் அடைகொடுத்து வழங்கியவர் பின்பு அடைமொழியின்றியே அவ்விரு சொற்களையும் வழங்கிச் சென்றுள்ளார்.

நற்றாள் என்பது நன்மையை உடைய தாள், நன்மையை அடைதற்குக் காரணமாகிய தாள் என்றெல்லாம் விரித்துப் பொருள் காண்டற்குரியதாகும். உயிர் உடலோடு கூடி வாழ்கின்ற பொழுது அதற்கு வருகின்ற துன்பங்கள் இரண்டு. ஒன்று துன்பம்; பிறிதொன்று கவலை. துன்பம் மூவகைப்படும். ஒன்று உடலைப்பற்றி வரும் தலைநோய் முதலியனவும், மனத்தைப் பற்றி வரும் காமம் முதலியனவும் ஆகும். பிறிதொன்று மனிதர் விலங்கு முதலிய பிற உயிர்களால் வருவனவாகும். மற்றொன்று காற்று, மழை, இடி முதலியவற்றால் நேரும் துன்பமாகும். கவலை என்பது மேற்கூறிய இடும்பைகள் காரணமாக மனம் அமைதியின்றி 'இதற்கு இனி யாது செய்வது' என்று ஏங்கி இருப்பதாகும். இவ்விருவகை நோய்களையும் உறாதவாறு காக்கும் வல்லமை யுடையது இறைவனது திருவடியே யாகும். இனி உயிர் உடம்பினின்றும் நீங்கி வாழுங் காலத்து மல இருளுற்று உறங்காமல் இறைவனது திருவடி நிழலில் இடையறாது இன்புற்று நிற்கவும் அத்திருவடியே காரணமாகின்றது. இத்தகைய நன்மைகளைத் தன்பால் கொண்டிருத்தலானும், அந்நன்மைகளை உயிர்கள் அடைதற்குத் தாம் காரணமாக இருத்தலானும்தான், திருவடியை 'நற்றாள்' எனச் சிறப்பித்துள்ளார் ஆசிரியர்.

மாணடி என்பது மாண்பினை உடைய அடி என விரியும். மாண்பு என்பது குணம் செயல் ஆகிய இரண்டையும் குறிக்கும். தன்னைச் சார்ந்தாரைக் காப்பது திருவடியின் குணமாகும். தன்னைச் சாராத உயிர்களையும் படைப்பு முதலிய ஐந்தொழில்களாலும் பக்குவப் படுத்தித் தன்னைச் சார வைப்பதே திருவடியின் செயல்களாகும். இம் மாண்பினைப் "போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்" எனத் தொடங்கும் திருவெம்பாவைப் பாடல் நன்கு விளக்கும். இதுபற்றியே "முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு" என ஞான நூல்களும் நவிலுகின்றன.

இத்தகைய பெருமைசான்ற திருவடியை மனத்தால் இடையறாது நினைந்து வழிபட வேண்டு மென்பதை ஐந்து திருக்குறள்களில் வற்புறுத்துகின்றார் ஆசிரியர்.

அவை வருமாறு :—

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

"வேண்டுதல் வேண்டாமை இலானடி [சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்
மனக்கவலை மாற்றல் அரிது" [கல்லால்

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்
பிறவாழி நீந்தல் அரிது" [கல்லால்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

இவ்வைந்து திருக்குறள்களிலும் வரும் சேர்தல் என்னும் சொல்லிற்கு இடை விடாது நினைத்தல் என்பது பொருளாகும்.

"இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்"

"வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவே னல்லேன்"

"பித்தொடு மயங்கி யோர்பிணி வரினும்
அத்தா நின்னடி யலால் அரற்ரு தென்நா"

என ஞானசம்பந்தரும்,

"மற்றுப் பற்றெனக்கு இன்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்"

எனச் சுந்தரரும்,

"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க"

என மணிவாசகரும்,

இறைவனது திருவடியை இடையருது நினைந்து உய்ந்தமை காண்க.

இனி அத்திருவடியை இடையருது வாழ்த்துதலும் வேண்டுமென்பதை,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்னும் திருக்குறளால் விளக்குகின்ருர். ஈண்டுப் புரிதல் என்பதற்கு எப்பொழுதும் சொல்லுதல் என்பது பொருளாகும். மணிவாசகப் பெருந்தகையார் "பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம் பேசும் போதெப் போது" என வினவி அருளுவதன் வாயிலாக இராப்பகலாக இறைவனுடைய புகழையே பேச வேண்டுமென்பதை வற்புறுத்திச் சொல்லுகின்றமை காண்க.

அப்பர் பெருமானும், இவ்வருமை நினைந்தே இறைவனது திருவடி தம் தலைமேல் சூட்டப் பெறுதலை வேண்டிப் பெற்றமையும், அவ் வேண்டுகோள் நிறைவுற்றதும் 'இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானுர் நல்லவாறே' என மகிழ்ந்து பாடியும் செய்த அருட்செயல் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாகும்.

இனி அத்திருவடிகளைக் கைதொழூஉப் பரவிக் கா லுற வணங்கவும் வேண்டு மென்பதைக்,

"கற்றதனுல் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅ ரெனின்"

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்
தாளை வணங்காத் தலை" [தான்

என்னும் திருக்குறளால் நன்கு விளக்குகின்ருர் ஆசிரியர்.

"நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகமும்முகிழ்த்தன முறையே"

"தாமரை புரையுகாமர்சேவடி"

எனச் சங்கச் சான்ருேரும்,

"திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே"

"திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிவமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே"

எனத் திருமூலர் வழிவழியாக இறைவனது திருவடிப் பெருமையை நினைந்து நினைந்து அருளிச் செய்தமை ஈண்டு மறக்கப் போமோ?

இங்ஙனம் மனம் மொழி மெய் ஆகிய முக்கரணங்களாலும் இறைவனது திருவடியை நினைந்தும் வாழ்த்தியும் வணங்கியும், உய்வது தான் உயிர்கள் செய்ய வேண்டிய கடமையாகும். பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதற்கு இதுவே பெருந் துணையாகும்.

"திருக்குறளில் அருள் நெறி"

[தவத்திரு. சுந்தரசுவாமிகள், கௌமார மடம், கோவை, 6.]

அன்பின் முதிர்ச்சி அருள் ஆதலின் அதனை "அன்பு ஈன் குழவி" என்றார். (குழவி-குழந்தை). "தொடர்பு பற்றிச் செல்லும் அன்பு முதிர்ந்துழி உளதாவது, தொடர்பு பற்றாதே, வருத்தமுற்றார் மேற்செல்வதாய அருள்" என்பார் பரிமேலழகர்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் பெருமானை "அப்பர்" என்று அழைத்த போது, சேக்கிழார் பெருமான், அப்பர் என்பதற்கு ஏற்பத் திருநாவுக்கரசரை அன்புக்கடல் என்றும், பிள்ளையாராகிய திருஞான சம்பந்தரை "அருட்பெருகு தனிக் கடல்" என்றும், வள்ளுவர் கருத்தை வைத்துக் கொண்டு குறிப்பிடுகிறார்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண்
அற்றே தவத்திற் குரு" [செய்யாமை

உலகிலிருக்கும் ஓருயிர்க்கு நந் தீங்கு செய்யாது, இருத்தலே உயரிய தவம் என்று எடுத்துரைக்கின்றார். வீடு பேற்றிற்குரிய நல்ல "அருள் நெறி" எது? என்றால் யாதோர் உயிரையும் கொல்லாமை ஆகிய அறத்தினைக் காக்கும் நெறியாகும்.

"நல்லாறு எனப்படுவது யாதெனின்
[யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி".

ஊனைத் தின்று ஊனைப் பெருக்கும் வழக்கத்தை, மேற்கொண்டிருப்பின் எவ்வாறு "அருள்நெறி" நாட்டில் நிலை பெறும் என்று வருந்திக் கூறுகிறார்.

"தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி
எங்ஙனம் ஆளும் அருள்". [தூனுண்பான்

உலகில் அருள்நெறி என்னும் "ஒளிநெறி" நிலை பெற வேண்டுமாயின், கொலைத் தொழில் ஒழிய வேண்டும். "கொல்லாமை" ஆகிய நல்நெறி குவலயம் எல்லாம் பரவி, மன்னுயிர் அனைத்தையும் மக்கள், தம்முயிர் போல், எண்ணும் "அருள்நெறி" பரவ வேண்டும்.

"பொருளாட்சி போற்றாதார்க் கில்லை;
[அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு"

என்னும் குறளில் பொருட்பயன் இழத்தற்குக் காரணம், அதனைக் காவாது, இருத்தல்; அது போல ஊன் தின்னுவோர்க்கு "அருளாட்சி" இல்லை, அருளை இழந்து விடுகிறார், என்று கூறுகிறார்.

உயிர்களை ஓம்பி, அந்த அறத்தால், மேம்படும் அருட் செல்வத்தையே, என்றும் அழியாத செல்வம் என்றும், பொருளால் வரும் செல்வம் இழிந்த கீழ் மக்களிடத்தும் உள்து ஆதலின் அது சிறப்பன்று என்றும், அருளுடைமை அதிகாரத்தில் கூறுகிறார்.

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்
[பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள"

என்பது அந்தக் குறள்.

திருக்குறளில் பல இடங்களில் நரகத்தைப் பற்றி வள்ளுவர் பெருமான் கூறியுள்ளார்'

"தான்புக்கழுந்தும் அளறு" "அண்ணாத்தல் செய்யாது அளறு" "பூரியார் ஆழும் அளறு" எனப் பல ஆழும் துன்பத்தையே தருவதாகிய அந்த நரகம், அனைத்துயிர்களிடத்தும் கருணையே, செலுத்துவதாகிய, அருள் பொருந்திய நெஞ்சம் உடைய மேலோர்களுக்கு இல்லை என்பதை,

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லைஇருள்
இன்னா உலகம் புகல்"

என்னும் குறட்பாவால் கூறியுள்ளார்.

158524

உயிர்கள் என்றும் உள்ள பொருள், அநாதியானவை. அத்தகைய உயிர்களுக்கு வரும் இடையூற்றினை நீக்கிப் பாதுகாத்தலை "அருள் ஆளுதல்" எனக் கூறுகிறார். அவ்வாறு உயிர்களைப் பாதுகாக்கும் இயல்புடைய அருள்நெறியாளர்களுக்குத் தம்முடைய உயிர் அஞ்சும் வினை வராது: நரகம் வராது, மேன்மையான வீட்டின்பம் சித்திக்கும் என்னும் பொருள் தோன்ற,

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை"

என்று கூறியுள்ளார்.

மேலும் அருள் நெறியை விளக்க வந்த ஆசிரியர், திருவள்ளுவர் எல்லோருக்கும் தெரிந்த எளிய "உவமை" ஒன்றின் மூலமாக "அருள் இல்லாதவர்க்கு மறுமை ஆகிய வீட்டின்பம் சித்திக்காது" என்னும் கருத்தைக் கூறுகிறார்.

"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை
[பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்பது குறள்.

ஒரு குழந்தையினிடம், விலையுயர்ந்த ஒரு பொருளைக் கொடுத்தால், அந்தப் பொருளின் பெருமையும், அந்தக் குழந்தைக்குத் தெரியாது. வேறு ஒருவன் வேறு சிறிய பொருள் ஒன்றைக் கொடுத்தால், முன்னைய பொருளை எறிந்து விடும். அதுபோல உயிர்களிடத்து அருள் இல்லாத ஒருவன் செய்யும் அறம், உறுதியுடையதாக இருக்காது, என்பதை வேறு ஓர் உவமையின் மூலம் விளக்குகின்றார்.

சிந்தையில் தெளிவு இல்லாத ஒருவன் ஒருக்கால் மெய்ப் பொருளைக் கண்டாலும், தன்னிடம் ஞானமில்லாமையினாலே, தானே அழித்து விடுவான் என்னும் பொருள்பட,

"தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்
அருளாதான் செய்யும் அறம்" [தேரின்

இதுவரை கூறி வந்த வகையில் திருவள்ளுவர் விளக்கும் அருள்நெறியானது, உயிர்களிடத்து நாம் காட்டும் கருணை என்றும், எவ்வுயிரையும் கொல்லாதிருத்தல் என்றும், புலால் உணவு உண்ணாதிருத்தல் என்றும், பொருளாகிய செல்வத்தை விட, அருளாகிய செல்வம் உயர்ந்தது என்றும், அருள் நெறியில் நடப்பவர்க்குத் துன்பமே அணுகாது என்றும், வீடு பேறாகிய மறுமை இன்பத்தைத் தருவது என்றும் தெரிகின்றோம்.

மேலும் கடவுள் வாழ்த்தாகிய முதலதிகாரத்தில், இறைவன் வகுத்தருளிய பொய்தீர் ஒழுக்க நெறியில் நாம் அனைவரும் நடக்க வேண்டும். அந்த அருள் நெறியில் சென்றால் எக்காலத்தும் அழிவில்லாத நிலையான, பெரும் பேறு சித்திக்கும் என்னும் பொருள்பட,

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர்
நெறிநின்றார் நீடுவாழ் வார்" [ஒழுக்க

என்று கூறியுள்ளார். இந்தப் பொய்தீர் ஒழுக்க நெறியே மேலான "அருள் நெறி". திருக்குறளில் நாம் காணும் அருள்நெறி என்னும் துணிவுடன் நன்னலம் பெறுவோமாக.



திருத்தணிகையில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நூலகத்தில், ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், B.A..B.L., I. A. S., அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B.A. அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தல். (3-11-69)

நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B.A. அவர்கள், திருத்தணிகைக் கோயிலுக்குத் தூய்மைப் பரிசளிப்புச் சுழற்கோப்பையை, நமது ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், B.A.,B.L., I. A. S. அவர்களின் தலைமையில் வழங்குதல். (3 - 11 - 69)



சங்கர நயினர் கோயில், ஸ்ரீ சங்கர நாராயணசுவாமி தேவஸ்தானத்திற்கு, தமிழ் ந
அரசின் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B.A., அவர்கள் வருகை
தந்தபோது, தருமகர்த்தர்கள் திரு. கே. பூலித்துரை, திரு. கே. எஸ். அழகுதிருப
வேலுப்பிள்ளை, B.A., திருநெல்வேலி, உதவி ஆணையர் திரு. ஆர். அர்ச்சுனன், B.
ஆகியோர் வரவேற்றுச் சிறப்பித்தல். (11 - 11 - 69)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.